# பாரதப் பெண்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
நூலகம்

Y15wN2
N63
109087

# பாரதப் பெண்

MADRAS

MADRAS RECORD OFFICE
MADRAS

கு. ப. சேது அம்மாள்

மல்லிகைப் பதிப்பகம்
தியாகராயநகர், சென்னை-17.

Y15wx2
N62

109087

மல்லிகை வெளியீடு : 67

முதற் பதிப்பு : [illegible] 1963

விலை ரூபா இரண்டு

பாரதம் பிரஸ்,

தியாகராயநகர் : : சென்னை-17

# பாரதப் பெண்

பாரத நாட்டின் தனிப்பெரும் பண்புக்கு அதன் பெண்மணிகள் பெருமளவுக்குக் காரணமாயிருந்திருக்கிறார்கள். இந்தப் புண்ணிய பூமியின் உயர்ந்த பண்புகளையெல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போற்றிப் பாதுகாத்து வந்திருப்பவர்கள் பெண்களே யாவர்.

இத்தகு சிறப்புக்குரிய மாதர்குல மாணிக்கங்களைப் பற்றிய வரலாற்றைச் சுவையாகக் கூறுகிறார் இதன் ஆசிரியை கு. ப. சேது அம்மாள்.

பெண்ணினத்துக்கே பெருமை தரும் இப்புனிதவதிகளின் வரலாறு என்றும் நமக்கு உணர்வு தரும் ஊற்றாக, வழிகாட்டும் ஒளி விளக்காகப் பயன்படமுடியும்.

எஸ். சங்கரன்
பதிப்பாசிரியர்

## உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | மூவர் பக்கமுற அமுதளித்தாள் ஒருத்தி | 5 |
| 2. | ஒக்கும் எரி குளிர வைத்தாள் ஒருத்தி | 17 |
| 3. | எரி குளிர வைத்த இரண்டாமவள் | 22 |
| 4. | எழுபரி தடுத்தாள் ஒருத்தி | 26 |
| 5. | வில் வேடனை எரித்தாள் ஒருத்தி | 39 |
| 6. | மக்களை கொன்றவனை மன்னித்தவள் | 53 |
| 7. | சத்திய ஒளி காத்த சந்திரமதி | 58 |
| 8. | தனக்கென வாழா தர்மபத்தினி | 65 |
| 9. | ஞான சம்பத்தைப் பெற்ற நங்கை | 76 |
| 10. | கொக்கென நினைத்தாயோ கொங்கணவா | 92 |
| 11. | ஔவையார் | 97 |




# மூவர் பக்கமுற அமுதளித்தாள் ஒருத்தி

கல்வி, கேள்வி, ஞானம் பெற்ற பெண்கள், இயல்பாகவே உள்ள பெண்மைச் சக்தி மேலோங்கி வீரம், நேர்மை, தயை, பொறை, முதலிய சிறந்த பண்பாடுகளைச் செவ்வனே கையாண்டு ஞானச் செருக்குடன், அவச் சொற்களுக்கும், செயல்களுக்குமஞ்சாது, நேர்மையிலங்கும் நிமிர்ந்த பார்வையோடும் "கற்புடைய மகளிர்" என்ற சிறப்பணி பூண்டு மூவர்களும், தேவர்களும் புகழத்தக்க மாண்புடன் விளங்கினார்கள்.

முனிவர்களில் முதுபெரும் விருத்தரான அத்திரி மகரிஷியின் பத்தினி அனசூயாதேவி, மூவுலகிலுமில்லாத வடிவழகும், அருங்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்றவள் என்று கீர்த்தி பெற்றிருப்பது உண்மைதானா என்பதை அறிய ஒருநாள் காலையில் அத்திரி முனிவரின் குடிலுக்கு வந்தார் நாரதர்.

தேவரிஷியான நாரதர் வருவதைக் கண்ட அத்திரி முனிவர் தமது பத்தினி அனசூயையுடன் நாரதரை வரவேற்று ஆசனமிட்டு அமரச் செய்து உபசரித்தார்.

அனசூயையின் ஒளி இலங்கும் உடலழகும் அருள் னமும் கண்டு புளகமுற்றார். அவர்கள் இட்ட விருந்தை ற்றுக்கொண்டு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு குதூகலமாகப் புறப்பட்டார் அந்தக் கலகப் பிரியர்!

"அப்பாடி! இன்றையப் பொழுதுக்கு சிரமமேதுமில்லாமல் காரணம் கண்டுகொண்டேன், என் தலை வெடிக்காமலிருக்க!" என்ற நிம்மதியுடன் வேகமாக நடைபோட்டார்

தினசரி ஒரு கலகமாவது மூட்டிவிடாவிட்டால் அவருடைய தலை சுக்குசுக்கலாக வெடித்துவிடும் என்பது பிரம்மதேவன் இட்ட சாபமல்லவா?

வில்லிலிருந்து புறப்பட்ட அம்பென பிரம்மலோகம் வந்து சேர்ந்தார். கலைமகளான சரஸ்வதியைக் கண்டு நலம் விசாரித்தார்.

"தங்கள் அருளால் யாவும் நலமே! பூவுலகிலிருந்து வருகிறீர்களே, அங்கு அதிசயமேதும் உண்டோ?" என்று வினவினாள் வாணி.

"அதிசயம் என்று ஒருதரம் சொன்னால் போதாது அம்மா. மூவுலகிலுமில்லாத பேரதிசயம் ஒன்றை இன்று கண்டேன்!"

"அதுதான் உமது மகிழ்ச்சி நிரம்பிய முகத்திலிருந்தும் தொனியிலிருந்தும் நன்றாகத் தெரிகிறதே. விஷயத்தைச் சொன்னாலல்லவோ?"

"அத்திரி மகரிஷி இருக்கிறாரே."

"ஆமாம்"

"அவருடைய பத்தினி அனசூயையைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?"

"தெரியும். அவளுக்கென்ன?" என்று பரபரப்புடன் வினவினாள் சரஸ்வதி.

"அவளுக்கு ஒன்றுமில்லை! அவளுடைய உடலழகும் சற்குணமும், ஞானமும்...அடடா! எங்குமே காணக்கிடைக்காத பெண்மணி அவள். இதுவரை நான் காணாத அற்புதம்! அந்த பெண்குல திலகத்தைக் காணாத கண்கள் என்ன கண்கள்...கற்பின் மகத்துவமோ அதைவிட அற்புதம்!......"



நாரதர் இவ்வாறு அனசூயையின் பெருமையை வர்ணித்துக் கொண்டே போகவும், வாணியின் முகம் கறுத்தது!

"ஏன் சுவாமி, ஆனால் நாங்களெல்லாம்?"

"நாராயண, நாராயண! அதற்கு அப்படி அர்த்தமில்லை அம்மா! அத்திரி முனிவர் தமது திருமணத்திற்கு முன்பு அனசூயையின் புனிதத் தன்மையைப் பரிசோதிக்கவென்று—கேட்பவர்கள் நம்பக்கூட முடியாததொரு—செய்யமுடியாத பணியொன்றைச் செய்யக் கட்டளையிட்டாராம்."

"அட! பரம சாதுவான அத்திரி முனிவரா அவ்விதம்..."

"ஆகா! தவசிகளையெல்லாம் என்னவென்று நினைத்திருக்கிறீர்கள்? அவ்வளவு பேரும் உள்ளுக்குள் 'நிறைய' வைத்திருக்கும் பலே ஆட்கள் என்பதை இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்! இரும்பு இல்லை, இரும்பு......"

"ஆமாம்."

"அதனால் செய்யப்பட்ட கடலையை வேகவைப்பதென்பது சாத்தியமா? எந்தப் புண்ணியவதியாவது வேகவைத்துக் கொடுப்பாளோ என்று தேவலோகத்திலுள்ள..."

"ஆமாம் நாரதரே, இப்போதுதான் நினைவு வருகிறது. இங்கே வந்து என்னைக்கேட்டார். லட்சுமி, பார்வதியையும் கேட்டிருக்கிறார்—இரும்புக் கடலையை வேகவைத்துத் தரும்படி! இரும்புக்கடலை வேகுமோ எங்காவது? சரிதான், முனிவர்களுக்கே விசித்திர சுபாவம் போலும் என்று சிரித்து அவரை அனுப்பிவிட்டோம். அப்புறம்?"

"அதே கடலையைத்தான் கடைசியாக அனசூயையிடம் கொண்டு வந்து கொடுத்து 'அனசூயே, இதை வேகவைத்துத் தர முடியுமா உன்னால்?' என்று கேட்டாராம்.

"இரும்பினால் ஆன கடலையாயிற்றே, இது வேகுமா என்று சந்தேகப்படவில்லை. 'இரும்புக் கடலையை வேக வைப்பதாவது, வேகுமா அது?' என்று எல்லோரையும் போல பரிகசிக்காமல், பணிவோடு கடலையை வாங்கிக் கொண்டு உள்ளேபோய் ஒரு பாத்திரத்திலிட்டு நீர் வார்த்து அடுப்பை மூட்டி அதன் மீது வைத்தாள். 'அக்கினி தேவனே எனது பெண்மை மாசற்றதாக இருக்குமாயின் இந்தக் கடலை வெந்து பதமாகக் கடவது' என்று நினைத்து மேலே மூடி அடுப்பை எரியவிட்டாள்.

"சற்றைக்கெல்லாம் வெந்து பஞ்சாக அதுங்கியது இரும்புக் கடலை! ஆவி பறக்க அதைக் கொணர்ந்து அத்திரி முனிவருக்கு முன்பு அமரிக்கையுடன் வைத்தாள் அனசூயை!

"கடலையை எடுத்து அதுக்கிப் பார்த்தார் அத்திரி. உடனே அனசூயையையும் நிமிர்ந்து பார்த்தார்! அவர் நெஞ்சிலே மகிழ்வு பொங்கியது! மூவுலகிலும் யாராலும் சாதிக்க முடியாத அற்புதச் செயலைச் செய்து காண்பித்த அந்த ஸ்த்ரீ ரத்தினத்தைக் கண்டு மெய்சிலிர்த்தார்!

"பெண்ணே, குற்றமற்ற மடந்தையான உன்னை மனையாளாக ஏற்க விரும்புகிறேன். உன் இஷ்டம்?" என்று மெல்லிய குரலில்—ஆனால் தெளிவாகக் கேட்டார்.

"நாணித் தலைகுனிந்து நின்றாள் அனசூயை. தவப்பெரியாரான அத்திரி பகவானைப் பதியாக அடைவது எத்தகைய பேறு என்ற நினைப்பில் உள்ளம் புளகமுற மெய் சிலிர்க்க கரம்குவித்து நின்றாளாம் அந்த நல்லாள்.

"பிறகு என்ன? கிரமப்படி அவளை மணம்புரிந்து கொண்டு இல்லறம் நடத்தி வருகிறார் அந்த ரிஷி! அத்திரியின் தவ வலிமையும் சித்தியுமே லோகப் பிரசித்தமானது! அதோடுகூட புனிதவதியான அனசூயையின் அற்புதச் செயலால் அவருடைய புகழ் இருமடங்காகி எங்கு போனாலும் இதே பேச்சாக இருந்ததால்தான் போய்ப் பார்க்கலாமே என்று போனேன் இன்று! அதிசயச் செய்திகளை அறியும் போது அதை நமக்குற்றவர்களிடம் சொல்லி மகிழ்வது இயல்பு. ஆகவே தங்களிடம் சொல்ல வந்தேன்!" என்று



கூறிக் கலகத்திற்கு அடிகோலி விட்டு அங்கிருந்து புறப்பட்டார் நாரதர்.

இதே கதையைத் திருமகள் லட்சுமியிடமும், மலைமகள் பார்வதியிடமும் போய் அக்கறையாகச் சொல்லிவிட்டுச் சென்றார்! மூன்று தேவியர்களும் ஒன்று கூடி அனசூயையைப்பற்றி நாரதர் கூறிய சிறப்புரைகளைப் பற்றி கொட்டிக்கொட்டி அளந்தார்கள். சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லிப் பொருமினார்கள். தமது சக்தி விசேஷங்களையும் மறந்து இதைப் பரிசோதித்துப் பார்க்காமல் விடுவதில்லை என்ற முடிவுக்கும் வந்து விட்டார்கள்!

அனசூயை பத்தினிப் பெண் என்றால் நாமெல்லாம் என்ன என்ற ரோஷத்தால் சீறி எழுந்த வேகமே இவ்வித முடிவுக்குக் காரணமாக இருந்தது.

உடனேயே தத்தம் கணவன்மார்களிடம் விஷயத்தைக் கூறி, அந்தப் பெயர் பெற்ற பத்தினியின் மகிமையைச் சோதித்துப் பார்க்கத் தூண்டி பூலோகத்திற்கு அனுப்பி வைத்தார்கள்!

மும்மூர்த்திகளும் பத்தினிமார்களின் தொல்லையைத் தாங்கவியலாது புறப்படச் சம்மதித்தது ஒருபுறமிருக்க, அத்திரி முனிவர் இருவரையும் கண்டு அவருடைய தவவலிமை எவ்வளவு முன்னேறி இருக்கிறதென்பதையும் பார்த்து வரலாம் என்று ஆவல் உந்தித்தள்ள பூலோகம் வந்து சேர்ந்தார்கள்! தமக்குள் ஒரு விபரீத யோசனையை பயன்படுத்த அந்தணர்கள் உருவில் அத்திரி முனிவரின் குடிலை அணுகினார்கள்.

வெளியே பேச்சுக்குரல் கேட்பதைக் கவனித்த அனசூயை எழுந்து வாசலில் வந்து பார்த்தாள். அந்தணர்கள் மூவரையும் வணங்கி வரவேற்றாள். குடிலின் தாழ்வரையிலிருந்த ஆசனங்களில் அமரச் செய்து "சிறந்த அந்தணர்கள் இன்று தரிசனம் கொடுத்தது பெரும் பாக்கியம்" என்று உபசாரம் சொன்னாள் அனசூயை.

அவளுடைய வடிவழகில் மனதைப் பறி கொடுத்து விட்டுப் பதில் சொல்லவும் தோன்றாமல் நின்றவர்கள் ஒரு வாறு தம்மை நிதானித்துக் கொண்டு, "அத்திரி மகரிஷி எங்கே?" என்ற கேள்வியை எழுப்பினார்கள்!

"ஸ்நானத்திற்காக நதிக்குப் போயிருக்கிறார்" என்றாள் மெதுவாக.

குரலில் ஆயாசத்தைத் தோற்றுவித்தவாக, "அம்மணி நாங்கள் வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறோம்," என்று பிரம்ம தேவன் ஆரம்பித்ததுமே, அனசூயை பரபரப்புற்ற வளாக "ஆகாராதிகள் சித்தமாகவே இருக்கின்றன. அருந்த லாமே" என்று கூறியபடி ஆசனங்களை அமைத்தாள். இடத்தை சுத்திசெய்து இலைகளைப் போட்டாள். மூவரும் இலைமுன் அமர்ந்ததும் பரிமாறத் தொடங்கினாள்.

கையை நீட்டித் தடுத்தார்கள் மூவரும். "ஏன், என்ன அபசாரம் நேர்ந்தது?" என்று கலவரத்துடன் வினவினாள் அனசூயை.

"தாயே, எங்களுக்கு உணவு இடுபவர்கள், பிறந்த மேனியுடன் பரிமாறினால்தான் நாங்கள் உணவு அருந்து வோம். அம்மாதிரி விரதம் பூண்டிருக்கிறோம்" என்றார் விஷ்ணு அம்சமாக வந்த அந்தணர்.

திகைத்து நின்று விட்டாள் அனசூயை! யோசித்துப் பார்த்தாள்! இப்படிக் கூட ஒரு நியமம் உண்டா என்ன? பார்த்தால் துர்த்தர்களாகவும் தெரியவில்லை, வயது முதிர்ந்த பெரியோர்களாக வேறு இருக்கிறார்கள். அன்ன மிட மறுத்தால் மகத்தான பாவம் வந்து சூழும். பதியும் கோபிப்பாரே! இருக்கட்டும், பதியின் சரணங்களே துணை யென்று நம்பி மனத்துள் வணங்கி விட்டு, ஆடைகளை அகற்றி விட்டு அளக பாரத்தினால் மேனி முழுதையும் மறைத்துக் கொண்டு உணவுத் தட்டுடன் வந்தாள்.

அனசூயையின் விருந்தோம்பும் இயலில் உள்ளசிரத்தை, திட சித்தம், ஞான வைராக்கியம் அனைத்தையும் தெளி வாகக் கண்டு மூன்று தேவர்களும் அயர்ந்து போய்ப் பார்த்தார்கள் அனசூயையை!



அருகில் வந்து உணவு படைக்க அவள் குனிந்த சமயம் வாயு பகவானை நினைத்தார் பிரம்மன்! 'சில்' என்ற காற்றால் அளக பாரம் சற்றே விலகியது!

'ஓஹோ, ஏதோ சூது இது' என்று உணர்ந்து திடுக் கிட்டு யோசனை ஓட, பளிச்சென உண்மை விளங்கிவிட்டது அவளுக்கு!

அப்படியா சங்கதி? என்று உள்ளே விரைந்தாள்! ஜபஸ்தாலியிலிருந்த நீரைக் கொணர்ந்து மூவர் மேலும் தெளித்து பச்சிளம் குழவிகளாக மாற்றினாள்! எடுத்து மடியில் வளர்த்திக் கொண்டு பாலூட்டினாள்! ஏனெனில் பிறந்த மேனியோடு உணவிட்டால்தான் உண்ணும்விரதம் கொண்ட கடவுளர்களாயிற்றே மூவரும்! பாலூட்டி முடிந் ததும் ஆடையை அணிந்து கொண்டு குழந்தைகளைத் தொட்டிலில் கிடத்தித் தாலாட்டினாள்!

படைத்துக், காத்து, அளிக்கும் சக்தி பெற்ற தேவ தேவர்களான மூர்த்திகள் மூவரும் சிசுக்களாகி அனசூயை யின் குடிலிலுள்ள தொட்டிலில், கைகால்களை உதைத்துக் கொண்டு பரப் பிரம்மங்களாகப் படுத்திருந்தன!

சாவகாசமாக ஸ்நான ஜப தபாதிகளை முடித்துக் கொண்டு தண்ட கமண்டலுவுடன் உள்ளே வந்தார் அத் திரி பகவான். உள்ளே கண்ட காட்சி அவரைப் பிரமிக்கச் செய்தது! வியப்பைச் சிந்திய குரலில், "பிரியே, ஏது குழந் தைகள் உனக்கு?" என்று வினவினார்.

"அகப்பட்டார்கள்" என்று கூறி சிறு நகை பூத்தாள்! சங்கதி முழுவதையும் விவரமாகச் சொன்னாள்!

கையிலிருந்த சாமான்களைக் கீழே வைத்து விட்டு தொட்டிலருகில் சென்று கைகூப்பி வணங்கினார்.

பிறகு மனைவியின் பக்கம் திரும்பி, "பிரியே, உனது பாக்கியமே பாக்கியம்! நாரதருடைய கைங்கரிய பலனே இது! குழந்தையில்லாக் குறை தீரவென்றே மும்மூர்த்தி களும் உன்னைத் தேடி வந்திருக்கிறார்கள்! காரியார்த்த

மாகவே இச் சம்பவம் நடந்திருக்கிறது! காலகதிக்கு மூன் ஈசுவராதிகள், ரிஷிகணங்களும் கூட பணிந்து கொடுக்க வேண்டும் போலும்!''

''அது வரையில் சரிதான் பிரபோ! லோக கர்த்தாக்கள் இங்கு தொட்டிலில் கிடந்தால் பிரம்ம வைகுந்த கைலாய கிரிகள் என்னாகும்? அடடா! சக்திமதிகளான மூன்றுதேவி களும் கூட இவ்வளவு பொறுமைக்கும், புகைச்சலுக்கும் ஆளானார்களா?'' என்று மூக்கில் விரலை வைத்தாள் அனசூயை!

''பொறு, உன்மீது க்ஷாத்திரம் கொண்டு கணவன்மார் களை ஏவிய அந்தத் தேவிகள் தமது பதிகளைத் தேடி வரட் டும்! அதுவரையில் நிம்மதியாக, குழந்தைகள் உன்னிடம் வளரட்டும்!'' என்றார் முனிவர் தீர்மானமாக.

நாட்கள் முப்பதாயின! கைகால்களை உதைத்துக் கொண்டு, சிரித்து, அழுது, பாலுண்டு, உறங்கி எழுந்து வளர்ந்து வந்தன சிசுக்கள்!

போனவர்கள், சற்றைக்கெல்லாம் வருவார்கள் என்று ஒவ்வொரு நாளாக எதிர்பார்த்த தேவிகள் மூவரும் பயந் தார்கள்! யோசித்தார்கள்! ''போனவிடத்தில் என்ன நேர்ந்ததோ? இரும்புக்கடலையை அவித்தெடுத்த புண்ணிய வதி, இவர்களையும் சபித்துக் கல்லாக்கி விட்டாளோ ஒரு வேளை?''

கைகளைப்பிசைந்து கொண்டு புலம்பினார்கள்! தம்மைத் தாமே ஏசிக்கொண்டார்கள். பெண்புத்தியின் பேதமையை இகழ்ந்தார்கள். யோசித்து யோசித்துக் கடைசியில் அனசூயையிடம் அண்டினால்தான் உய்வு என்ற ஏகோபித்த முடிவுக்கு வந்ததும் சமயம் பார்த்து நாரதர் மறுபடி அங்கே தோன்றினார்!

வந்தவரை வரவேற்று உபசரிப்பதற்குப் பதிலாக, கோபித்துச் சீறியெழுந்தாள் கலைத்தேவி. ''என்ன, எங்கு வந்தீர்? வினைக்கு விதையை நட்டுவிட்டு, அது என்னவா யிற்று என்று பார்க்க வந்தீரா, அல்லது பரிகசிக்க வந்தீரா!'' என்றாள் ஆத்திரம் பொங்க.



''சாந்தமடையுங்களம்மா, அனசூயையின் மகத்துவம் உண்மையா என்று அறியத்தானே அனுப்பினீர்கள் உங்கள் நாயகன்மார்களை?''

''ஆமாம் நாரதரே ஆமாம், அவர்கள் அங்கே என்ன ஆனார்களோ தெரியவில்லையே!''

''ஒன்றும் ஆகவில்லை! சிசுக்களாகி, அனசூயையின் கையில் பாலுண்டு, நீராடி வளர்கிறார்கள் லட்சணமாக!''

''ஐயையோ'' என்று கூவிக் கையை உதறினார்கள் மூவரும்!

''கொஞ்சம் முறைபிசகி நடந்து கொண்டு விட்டார்கள் மூவரும்! அனசூயையின் எழிலைக் கண்டு மயங்கியதில் போன காரியம் மறந்து விட்டது!''

தலையில் அடித்துக் கொண்டார்கள் தேவிகள்!

''எல்லாம் நன்மைக்குத்தான் தாய்மார்களே...!''

''வயிற்றை எரிகிறது. கிண்டலா செய்கிறாய்?'' என்று உறுமினாள் ஈசுவரி!

''இல்லை நிச்சயமாக நன்மைக்கே! அவதார காரிய மாகவே இது நடைபெற்றது!''

''அவதாரம் அத்துவானமாகப் போகட்டும், எங்கள் நாயகர்களை...'' என்று தேம்பினாள் திருமகள்!

''பயப்படாதீர்கள் தாய்மார்களே, நீங்கள் மூவரும் உடனே அனசூயையினிருப்பிடம் சேர்ந்து, அந்தக் குடிலின் வாயிலில் கோலங்கள் செய்வீராகில் விமோசனம் ஏற்படும் அனசூயாதேவியின் மூலமாகவே! லோக கர்த்தாக்கள் உங்களுடன் சேர்வார்கள். அவதார மூர்த்தியும் உற்பவம் ஆவார்'' என்று உபாயம் கூறியபடியே வீணையை மீட்டிக் கொண்டு கிளம்பினார் அந்தத் தேவரிஷி.

எல்லாம் நாமாகத் தேடிக் கொண்ட வினைதானே? அதைத் தீர்ப்பதும் நம் கடனாகி விட்டது! என்று நொந்து கொண்டே அனசூயையின் இருப்பிடம் வந்து சேர்ந் தார்கள்.

கங்கைக்கரையில் தங்கிக்கொண்டு, ஒவ்வொருநாளும் நிலம் தெளியுமுன்பே போய் அனசூயையின் குடிலின் வாசலில் விசித்திரமான கோலங்களிட்டுவிட்டுத் திரும்பி விடுவார்கள்!

அந்த அற்புதக் கோலங்களின் நெளிவு, சுழிவு இழைகளின் அமைப்புகளைக் கண்டு அதிசயித்தாள் அனசூயை. இது யாருடைய கைத்திறன்? அதுவும் விடியு முன்பாக இக்குடிலின் வாசலில் இவ்வித எழிற்கோலம் செய்வதால் அவர்களுக்கு என்ன நன்மை? என்ற சிந்தனையுடன் எது எப்படியாயினும் நாளைக்கு மூன்றாம் யாமத்திலேயே எழுந்து இதைக் கவனிக்கவேண்டும் என்ற நிச்சயத்துடன் உள்ளே சென்றாள் உத்தமி!

அவள் முகத்திலிருந்தே உள்ளத்தில் இழைபாவும் எண்ணங்களைக் கணித்தறிந்த அத்திரி பகவான், "தெரியவில்லையா அனசூயே, இவர்களுடைய பத்தினிகள் அந்த மூவரும்" என்று தொட்டிலைச் சுட்டிக் காட்டிச் சொன்னார் முனிவர். யோசனையிலாழ்ந்தாள் அனசூயை.

"நாளைக்கு மூன்றாம் யாமத்தில் வாசலில் அவர்களைக் காணலாம். அதன் பிறகு நடப்பவை கிரமமாக நடந்து அவரவர்கள் இருப்பிடம் சேர்வார்கள்" என்றார், முக்காலமும் உணர்ந்த அந்த முனிவர்.

அனசூயையின் மனதில் விசித்திர வேதனை பிறந்தது. "அடடா! சித்தசலனமற்ற, களங்கமற்ற எனது வாழ்வில் ஏனிந்த சோதனைகள்? இதை எனது பாக்கியமென நான் கருதுவதா? அபாக்கியம் என்று மறுகுவதா? பிராணபதி, என்மனநோவை அறியீர்களா தாங்கள்? என்னைச் சோதிக்கவேண்டுமென்று, திரிமூர்த்திகளுக்கு, அவர்களுடைய பத்தினிகளுக்கு ஆசை உண்டானது ஏன்? சிரத்தை பிறந்தது ஏன்?"

இவ்வித எண்ணங்களின் வேகத்தால் எழுந்து வெளியேறிய பெருமூச்சு அழலாக அத்திரியின் கன்னங்களைத் தடவியது!



முனிவர் பரிவுடன் மனையாளை வருடிக்கொடுத்து "பிரியே, நீ கொடுத்தவைத்த புண்ணியசாலியல்லவா? யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம்? வீண் சஞ்சலங்களை மனதில் பிறப்பித்துக்கொண்டு புண்படுவது தகாது. உன் மக்களில்லாக் குறை தீரவும், மும்மூர்த்திகளின் ஒரே அம்சமான தத்தாத்ரேய மூர்த்தியை நீ குமாரனாக அடையவுமே நேர்ந்த சம்பவமிது! பார், தேவதேவிகள் உன் அருளை நாடி இதோ நமது வாசலுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். எழுந்து சென்று அவர்களை வரவேற்று அழைத்து வா" என்று மனைவிக்குக் கட்டளையிட்டார் அந்த மகாத்மா.

பதியின் வாக்கைச் சிரமேற்கொண்டு எழுந்தாள் அனசூயை. ஆசிரமத்தின் வெளிக்கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்டாள்.

கோலமிடுவதில் பரபரப்பற்றிருந்த மூன்றுபேரும் குனிந்த தலை நிமிராமல் காரியத்தில் கருத்தாக இருந்தார்கள்.

அனசூயை அருகில் வந்து நின்று "யாரம்மா நீங்களெல்லாம், ஏன் இந்நேரத்தில் வந்து இவ்வாசலைக் கோலங்களால் நிறைக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

தனது வீணையின் நாதமென ஒலித்த அனசூயையின் குரலொலி கேட்டுச் சொக்கி நின்றாள் வாணி தேவி. பசும்பொன்னுக்கு நிகரான மேனி வண்ணத்தோடு நின்று இன்னுரை பகரும் நிறைமகளைக்கண்டு நாணி நின்றாள் திருமகள். முப்பெரும் தேவிகளின் எதிரில் நின்று, தென்பும் திடமும், பண்பும் வீரமும் தொனிக்க, 'நீங்கள் யார்?' என்று கேட்குமளவுக்கு சிறப்புற்ற பெண்ணரசியாக நிற்கிறாய். ஆதிபராசக்தியான என்னை உனக்கு நான் அறிமுகப்படுத்திக்கொள்ள நேர்ந்த விந்தைதான் என்னே! என்ற நினைப்பில் மெய்மறந்தாள் பார்வதி!

அனசூயை அதற்குமேல் தாமதிக்கவில்லை! "தேவதேவிகளே, உங்களை யாரென உணர்ந்துகொண்டேன். வாருங்கள், வாருங்கள், உள்ளே வரவேண்டும்..."

"வந்தால் மாங்கல்யப் பிச்சை கொடுப்பீர்களா?"

மூன்று குரல்களும் ஒன்றாகி ஒலித்தன!

"தேவிகளே அனைத்தும் தங்கள் பாக்கியம்! எளியையான என்னை அதிகம் சோதிக்காதீர்கள்! உள்ளே வாருங்கள்" என்று சொல்லி மூவர் கைகளையும் பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள் ரிஷபத்தினி.

நடுக் கூடத்தில் தொட்டிலில் உறங்கும் குழந்தைகள் மூவரையும் கண்டு 'ஓ' வென்று அலறினார்கள்!

அத்திரி முனிவர் முன்வந்து பணிந்து "அன்னைமார்களே, உங்கள் வரவு நல்வரவாகட்டும். இந்தச்சிறு குடில் இன்று பாவனமாகிவிட்டது! நிகழ்ந்ததெல்லாம், நற்பலன்களுக்காகவே நிகழ்ந்திருக்கின்றன. அனசூயையின் மக்களில்லாக் குறை—பிள்ளைக்கலி-தீரவேண்டுமல்லவா? அதற்காகவே இந்த சூத்திரம்!

"அனசூயே, மூன்று சிசுக்களையும் ஒன்றாகச் சேர்த்தணைத்துக் கையில் எடு. சிருஷ்டி, திதி, சம்கார கர்த்தாக்கள் உற்பவிப்பார்கள்" என்றார் ஞான முனிவர்.

மூவரையும் ஒரு மாதகாலம் சீராட்டி வளர்த்த பாசத்துடன் அள்ளி ஒன்றுசேர அணைத்தாள் அனசூயை. அந்த அணைப்பில் ஓருடலும், மூன்று தலைகளும் கூடிய தத்தாத்திரேய மூர்த்தி நின்றார்! அதேகணத்தில் பிரம்ம, விஷ்ணு, மகேசுவரர்கள், அவர்களது வாகனங்களுடன் பிரத்யட்சமானார்கள்! எட்டநின்ற தேவிமார்கள் ஆவலோடு தத்தம் பதிகளை அண்டி வணங்கி நின்றார்கள்.

இதைக் காண்பதற்கு வந்த தேவ, கந்தருவ, யட்ச கணங்களெல்லாம், சதி அனசூயையின் மீது மலர்மாரி பொழிந்து களித்தார்கள்!

யாருக்கும் கிட்டாத பாக்கியம் கிட்டியது அனசூயைக்கு! மூவுலகும், பாரும், நீரும் உள்ளளவும் சாசுவதமாகிவிட்ட அனசூயையின் கீர்த்தி பெண்டிர் குலத்தின் மணிமகுடமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. இனியும் என்றென்றும் சிரஞ்சீவியாக இருக்கும் இந்தத் திவ்விய சரிதம்!



# ஒக்கும் எரி குளிரவைத்தாள் ஒருத்தி!

இல்லறத்திலேயே துறவறச்சிறப்பினையும் பெற்று விருத்தாப்பியத் தசையிலிருந்தார்கள் அத்திரி முனிவரும் அனசூயையும்!

பிதாவினுடைய ஆக்கினைக்குக் கட்டுப்பட்டு வனவாசம் ஏற்று, பத்தினியும், தம்பியும் உடன்வர, ராமபிரான் வரும் செய்தி தெரிந்து, அகமகிழ்வுற்று, அவதார புருஷனை ராமனைத் தரிசித்த பின்பே, பரகதிக்கு ஆயத்தமாகவேண்டும் என்று நிச்சயித்திருந்தார் அந்தத் தவசீலர்.

அவ்விதமே, ஒருநாள் காலைப்பொழுதில், அத்திரிபகவானுடைய ஆசிரமத்தைத் தேடிக்கொண்டு ராமலட்சுமணர்களும் சீதாபிராட்டியும் வருவது கண்டு, பரமசந்தோஷத்தோடு, அனசூயை சமேதராக எதிர்கொண்டு சென்று முகமன் கூறி வரவேற்று அழைத்து வந்தார்! இருக்கை தந்து அமரச்செய்து க்ஷேமச் செய்தி விசாரித்தார்!

முதுமையால் தளர்ந்த குரலும், நடுங்கும் கையுமாக முன்வந்து சீதாபிராட்டியின் கரம்பற்றி உள்ளே அழைத்துச் சென்று, வழிநடந்த சிரமம் தீர, மஞ்சள் நீராட்டி, அனைவருக்கும் உணவு கொடுத்து உபசரித்தாள்! பின்பு பிராட்டியை அருகில் அழைத்து உட்காரவைத்துக்கொண்டு உத்தமமான ஸ்த்ரீ தர்மத்தை உபதேசிக்கலானாள்!

"சீதா! பத்தினிப் பெண்களுக்குரிய நற்செயல்கள் யாவை, அது எத்தகைய சக்திவாய்ந்தது என்பதை உனது தாயாரும், மாமிமார்களும் உனக்கு உபதேசித்திருப்பார்கள். நீயும் குலப்பெண்களின் சிறந்த பண்புகளைக் கடைப்பிடித்து வருகிறாய் என்பது உன்னைப் பார்த்தாலே தெரிகிறது. இருந்தாலும் சில புத்திமதிகளையும், தருமமார்க்கங்களையும் பற்றி உனக்கு எடுத்துச் சொல்லக்

கடமைப்பட்டிருக்கிறேன். குழந்தாய்! அதைத் தவறாக நினைப்பாயோ?" என்று வாஞ்சையோடு கேட்டாள் அந்த முது பெரும் ஞானி!

சீதாபிராட்டி, கையெடுத்து வணங்கி, "இல்லை அம்மணி! அதை எனது பெரும் அதிருஷ்டமாகக் கருதிக் கேட்டுக்கொள்வேன்! பெரியோர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகள், தெய்வ வழிபாட்டு முறைகள், பதிசேவை, ஆகிய நன்னெறிகளைப்பற்றி, தாங்கள் நினைத்தவாறே, எனது அன்னையாரும், மாமிமார்களும் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். தாங்களும் எனக்கு அவற்றை உபதேசம் செய்யுங்கள். நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன்." எனப் பணிந்துரை செய்தாள்.

"மற்றதெல்லா மிருக்கட்டும்; முக்கியமானதொன்றை உனக்குச்சொல்ல விரும்புகிறேன்!...... வந்து...... அரசைத் துறந்து சாமானிய மனிதனைப்போல, வனவாசம் செய்ய வந்துள்ள உன் பதியை—சக்கரவர்த்தியின் திருக்குமாரனை—அயோத்தியிலிருக்கும் போது உனது அந்தப்புரத்திற்கு வரும்போது எப்படி உபசரித்து வரவேற்று பணிவிடைகள் செய்வாயோ அதேபோல இப்போதும் செய்யம்மா! ராஜ்ய மற்றவனான ராமனைப்பற்றி அசிரத்தை கொண்டு அலட்சியம் செய்துவிடாதே!......"

சட்டென்று காதுகளைப் பொத்திக்கொண்டு ஒருகணம் துடி துடித்துப்போனாள் சீதாதேவி. மறுகணமே எழுந்து அனசூசையின் பாதங்களைத்தொட்டு வணங்கி "தாயே, அவ்விதம் ஒருநாளும் செய்யமாட்டேன். எனது நாயகர் இருக்குமிடமே எனக்குகந்த ராஜமாளிகை! குலமகளுக்குரிய வழியினை விட்டு விலகமாட்டேன் தாயே! விதேக வம்சத்திலுதித்த பெண்கள் ஒருபோதும் அறநெறியினின்றும் வழுவிச்செல்லமாட்டார்கள்!" என்று தெளிவான குரலில் கணீரென்று பதில் சொன்னாள் பிராட்டி!

"உண்மை குழந்தாய்! உனது ஞானமும், விவேகமும், அடக்கமும் என்னைப் பரவசமூட்டுகின்றன! கற்புடை மகள் என்ற பெரும் கீர்த்தி எய்தி நிறைமங்கலத்தோடு நீடுவாழ்வாயாக!" என்று ஆசி கூறினாள், அந்த மூதாட்டி.



நகைமுகத்துடன் அதனை ஏற்றுக் கொண்டாள் மைதிலி! அன்று தினம் தங்கி இளைப்பாறியதும், மறுநாட் காலையில் புறப்பட உத்தரவு கேட்டார் ராமன் முனிவரிடம்.

"என்ன அவசரம்? சிலகாலம் இங்கு தங்கினால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும்..."

"மகரிஷே, தங்களைத் தரிசித்து, இளைப்பாறி, களை தீர்ந்துவிட்டது! இந்த வனத்திலுள்ள மகாத்மாக்கள் அனைவரையும் தரிசிக்க அவாக் கொண்டிருக்கிறேன். உத்திரவு அருளவேண்டும்." எனப் பணிவுடன் வேண்டினார் தசரத ராஜகுமாரன்!

அதற்குமேல் மறுக்க இயலாமல், பிரியாவிடை கொடுத்தார் அத்திரி பகவான். பத்தினியும், தம்பியும் பின் தொடர, அந்தத் தவ தம்பதிகளை வலம்வந்து வணங்கினார் ராமன்.

அனசூயை சீதாபிராட்டியின் முகவாய் பற்றி அருள் நோக்குடன் "குழந்தாய் க்ஷேமமாகப் போய்வா. நிழலைப் போல உன் கொழுநனை அண்டித்தொண்டு செய். அதுவே பெண்களுக்குரிய சிறந்த அணி. யாராலும் அகற்றவியலா சக்தி கவசம் அது" என்றாள் அன்புப்பெருக்கால் உரை தடுமாற!

"அவ்விதமே அம்மா! தங்கள் நினைவும், உபதேசங்களும் என்றென்றும் என் நினைவில் நிற்கும்!" என்றுகூறி வணங்கி விடைபெற்றாள் பிராட்டி!

அத்திரி பகவானை அண்டி சிரம் வணங்கி, "மகரிஷே தங்களையும், தேவியாரையும் தரிசித்ததும், எனது தாய், தந்தையர்களைத் தரிசித்தது போன்ற மகிழ்வு கொண்டேன்! போய் வருகிறோம்!" என்றாள் சீதை கண்ணீர் ததும்ப.

கண்ணீரைத் துடைத்தாள் அனசூயை! "மகளே, சகிக்கக் கற்றுக்கொள் அம்மா! பூமிதேவியின் பெண்ணாயிற்றே நீ! கஷ்டங்களை ஒருப்பது தாய்க்குல மரபன்றோ!

தைரியமாகப் போய்வா'' என்று கூறி முதுகில் தாயின் அருமையுடன் தடவிக்கொடுத்தாள் அனசூயை!

அத்திரிமகானுடைய குடிலையும், குடிலின் வாசலில் நின்ற அனசூயையையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள் சீதை! இதய பூர்வமாகவும், அன்புடனும், அக்கறையுடனும் அனசூயை செய்த இதோபதேசம், நிலையாக நினைவில் நின்றது பிராட்டிக்கு!

இருந்தும் காலம் தேவியை விடவில்லை! விதிவசத்தாலும், பெண்களுக்குள்ள சபல புத்தியாலும், ராமனுடைய அவதார காரியம் முற்றுப்பெற வேண்டியிருந்ததாலும், மாயமானாக வந்த மாரீசனைத் தொடர்ந்து ராமன் போக, ராமனுடைய அம்பினால் தாக்குண்ட மாரீசனுடைய அபயக்குரல் கேட்டு துணை நின்ற லட்சுமணனை ஏவினாள்!

அசுர சாகசம் என்று கூறித் தடுத்தவனைக் கொடும் மொழிகளால் நிந்தித்தாள்! பெண்மைக்கு அடுக்காத—ஏற்காத அகங்காரத்திற்கு இடம்கொடுத்து, பெற்ற தாயாகவே தன்னைக் கருதிப் போற்றிப் பணிசெய்துவரும் நன்மைந்தனைத் தகாத மொழிகளைச் சொல்லி ஏசினாள்! ஆவேசத்துடன் வயிற்றிலறைந்துகொண்டு அலறி அழுதாள்! அவன் என்ன தடுத்தும் கேளாமல் மென்மேலும் நிந்தித்தாள்! அதன் பயன் என்னவாயிற்று?

ஆக்திரத்திற்குள்ளாகி, ஆராய்ந்து பாராமல், அடாத செயல்களையும், தகாத சொற்களையும் கையாளுவதால் ஏற்படும் அனர்த்தங்களை, தீர்க்கதரிசியான நமது தவப் பெரியார்கள் புராண இதிகாசங்களில் தெளிவாகக் காண்பித்திருக்கிறார்கள்!

சீதையால் நிந்திக்கப்பட்ட இலட்சுமணனோ, தமை னிட்ட கட்டளையை மீறவும் மாட்டாமல், சீதையி சினத்தை ஒருக்கவும் மாட்டாமல், மனமில்லாமல் பு பட்டான்! அப்போதுகூட ஆசிரமத்தைவிட்டு வெளியேற வேண்டாமென்று எச்சரிக்கை செய்துவிட்டுத்தான் சென்றான்.

அவன் தலைமறைந்ததுதான் தாமதம்! வந்தான் ராவண சன்னியாசி! திட்டப்படி சீதையைக் கவர்ந்து



கொண்டுபோய் அசோக வனத்தில் சிறை வைத்தான்! அரக்கிகளைக் காவலாக வைத்தான். "பத்துமாத காலத்திற்குள் நீ வழிக்கு வராவிட்டால், உன்னைக் கொன்று தின்று விடுவேன்'' என்று ராவணன் சீதைக்கு வைத்த கெடு நெருங்கிக் கொண்டிருந்தது!

ராமனை எதிர்பார்த்து ஏங்கி நிராசையடைந்து விட்ட நேரத்தில் வந்தார் அனுமான். ராமனுடைய நலனைத் தெரிவித்துக் கூடிய விரைவில் வந்து ராவணனைக் கொன்று தேவியை மீட்டுச்செல்வார் என்ற செய்தியைத் தெரிவித்து பிராட்டியின் மனதைக் குளிரச்செய்தார்!

சற்றைக்கெல்லாம், அரக்கிகளில் சிலர் ஓடிவந்து "சீதா இங்கே உன்னுடன் ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்ததே ஒரு குரங்கு; அதன் வாலில் நெருப்பு வைத்து இந்த நகரத்தின் வீதிகளில் இழுத்துச் செல்கிறார்கள்!'' என்ற சொல், சீதாதேவியின் காதுகளில் நாராசமாய்ப் பாய்ந்து அவளைத் துடிதுடிக்கச் செய்தது! "ஐயோ, ராமனுடைய க்ஷேமச் செய்தியை எனக்குச் சொல்லி என் மனதைக் குளிரச்செய்த அனுமானுக்கா இந்த கதி என்று பரிதவித்து மனதில் எரிகடவுளை நினைத்து மானசீகமாக "அக்கினி தேவா, எனக்கு என் பதியின் நலனை அறிவித்து உயிர் கொடுத்த அனுமானுடைய வாலில் உன்னை ஏற்றியிருக்கிறார்களாம்! அழற்கடவுளே! நீ அனுமனை எரிக்காதே! நான் பதிசொல் கடவா பாவையாயின் என் கட்டளைக்குட்பட்டு, ராமனுடைய தூதனுக்கு பிராண பிட்சை கொடுத்து குளிர கடாட்சி!'' என்று துதித்தாள்!

அனுமனுடைய வால் எரிந்து கொண்டுதானிருந்தது! ஆனால் எரியுமிடம் பனிக்கட்டியைப் போல ஜில்லென்றிருந்ததே அனுமனுக்கு! அவர் இந்த வியப்பை எண்ணி முதலில் திகைத்தார்! உடனே சிந்தித்து! "ஆ! பதிவிரதாக்கினி மிக்க என் தாயின் கருணைக்குமுன் எரிகடவுள் எப்படி என்னை வருத்தமுடியும்?'' என்று நிகழ்வை ஊகித்துத் தாயின் சன்னதி நோக்கித் தலைதாழ்த்தி வணங்கினார். பக்திப் பெருக்கால் கண்ணீர் பெருக அன்னையின் பேரருளை எண்ணி உடல் சிலிர்த்தார் மாருதி.

# எரி குளிரவைத்த இரண்டாமவள்

‘குலபதி’கள் என்று சிறப்பிக்கப்பட்ட தவசிகளுள் தாணு மகரிஷியும் ஒருவர். அவர் மகா முன்கோபி. அவரிடம் சீடனாக வந்து வாய்த்த கச்சபனோ பரமசாது. குருபக்தி மிக்கவன். ஏகலைவனுக்குத் தம்பி என்றுகூடச் சொல்லலாம்! ஒருநாள் காலையில் வேள்வித் தீயை மூளச் செய்யும் முயற்சியில் ஒரு தீப்பொறி சிதறி தாணு முனிவரின் காலில் விழுந்து விட்டது. தீச்சுட்ட துடிப்பில் முனிவருடைய கோபம் எல்லையை மீறியது! வேள்விக் குண்டத்தருகில் குரு அமர்ந்திருக்கும்போது அஜாக்கிரதையாக விசிறி அவர் மீது பொறி பறந்து விழச்செய்த குற்றத்திற்காக; சீடனுடைய உடல் முழுதுமே தீச்சுட்ட எரிச்சல் மூளக்கடவது என்று சாபம் கொடுத்தார்!

கொடுத்த விநாடியே சீடனுடைய உடலில் சுரீரென்று பற்றியது சூடும், அதைத் தொடர்ந்து எரிச்சலும்! துடி துடித்தான் சீடன். குருவின் தாள்களில் விழுந்து கதறி. மன்றாடினான் உடல் குளிர்ச்சியடைய அருள் செய்யும்படி! பயனில்லை! தேவர்களைக் கூவியழைத்துக் கதறினான் கேள்வியில்லை! இனி மரணம்தான் என்ற நிராசையில் சாகுமுன்பு மனைவியைப் பார்த்துவிட வேண்டுமென்ற வேட்கையுடன் தனது குடிலை நோக்கி ஓட்டமாக ஓடினான் கச்சபன். மனைவியிடம் நிகழ்ந்ததைக்கூறி இனி மரணமே தனது முடிவு என்றதும், சீறியெழுந்தாள் அந்தப் பத்தினிப் பெண்! அவளுடைய மூச்சில், விழிகளில், உடம்பிலிருந்த மயிர்க்கால்கள் தோறும் கூட சினத்தின் அழல் பொங்கியது!

“ஆ, தீக்கடவுளே, குருவே தெய்வமாக, அறமே மூச்சாகக் கொண்டு வாழ்ந்துவரும் இந்தத் தர்மாத்துமாவைத் தொடத் துணிந்து விட்டாயா? உனக்கென்ன தைரியம்?



எனது பதியைத் தீண்டித் தவிக்கச் செய்த உனது உக்கிரம் குளிர்வதாக,” என்று கையமர்த்தினாள் அந்தக் குலமகள்.

“வேண்டாம் பெண்ணே, சொல்லாதே, தீயில்லையேல் வேள்விகள் நடைபெறாது. உலகம் நசிக்கும்......”

“நசிக்கட்டும்.”

“ஒருவன் பொருட்டு உலகம் நசிப்பதா?”

“என் உலகம் எனது நாயகன்...”

“கற்புடையாளே, சினத்தைத் தணித்துக் கொண்டு...”

“மாட்டேன். எனது சினம் தணிந்தால் அழலெரிதங்கள் உயிரைத் தின்றுவிடுமே!” என்று மறுத்தாள் பத்தினி.

நேரவிருந்த விளைவை எண்ணி நடுங்கினான் சீடன். அழல் அவிந்தது! சீடனுடைய உடலில் பற்றிய எரி மட்டுமல்ல. வேள்விக் கூடங்களிலிருந்த தீ அவிந்தொழிந்தது! கதிரவனுடைய வெம்மை குளிர்மை யடைந்து விட்டது.

ஜீவராசிகளுக்கு மூச்சு முட்டியது. தேவர்கள் இந்த விபரீதத்திற்குக் காரணம் தெரியாமல் மும்மூர்த்திகளைத் தேடி ஓடினார்கள்.

காத்தற் கடவுளாகிய விஷ்ணுவுக்குத்தானே ரட்சிக்கும் பொறுப்பு? பிரம்மனையும், பரமனையும் பத்தினிமார்களுடன் அழைத்துக்கொண்டு பூவுலகுக்கு வந்து, சீடனுடைய மனைவியின் அருள் பெற்றாலொழிய வேறுவழியில்லை என்று தீர்மானித்து மூவரும் சீடனுடைய குடிலருகில் பிரசன்னமானார்கள்! சீடன் பிரமை பிடித்து நின்றான்! சீடனுடைய மனைவி தேவர்களை ஏறிட்டுப் பார்த்தாள்.

மகாவிஷ்ணு முன்வந்து, “கச்சபனே, உன் பத்தினியின் வாக்குக்குக் கட்டுப்பட்டு தீக்கடவுள் அவிந்திருக்கிறான். மூவுலகமும் ஸ்தம்பித்திருக்கிறது. உலகம் நசிக்காதவாறு உன் பத்தினியின் சக்திகொண்டு காப்பது உனது பொறுப்பு” என்றார்.

சங்கும், சக்கரமும் ஏந்திய பரந்தாமனை நேரில் நின்று தன்னிடம் இவ்வாறு இறைஞ்சுவதைக் கண்டு பதறிப் போனான் கச்சபன். மனைவியைப் பார்த்தான். அம்மாது ஒரு சிறிதும், மருளவோ, வெருளவோ, இல்லை. நிச்சய புத்தியுடன் நிமிர்ந்து நின்று "தேவதேவர்களுடைய வரவு நல்வரவாகட்டும். தங்கள் உத்தரவுப்படி அழலை உயிர்ப்பித்தால் என் பதி மீண்டும் எரிச்சலால் தாக்கப்பட்டு விடுவாரே! பத்தினிப் பெண்டிருக்குக் கணவனே தெய்வமன்றோ?" எனப் பகன்றாள் அந்தப் பெண்மணி. பெருமூச்செறிந்தவாறு, கச்சபனுக்கு அழலெரி பற்றச் சாபமிட்ட தானு முனிவருடைய ஆசிரமத்துக்கு விரைந்தார் விஷ்ணு.

"மகரிஷியே, உமது முன்கோபத்தால் நேர்ந்த அனர்த்தத்தைப் பாரும். சீடனுக்கு அருள்புரிந்து அவனைக் குளிர்வியும்." என்றார் அதட்டலாக.

அப்போதுதான் தமது தவறை உணர்ந்து திடுக்கிட்டார் தானு முனிவர்! சீடனுடைய அழலெரியைத் திரும்ப வாங்கினார். அதற்குப் பிறகுதான், கச்சபனுடைய மனைவி அழற்கடவுளைப் பிழைத்தெழ அருள் புரிந்தாள்!

அவிந்த வேள்விக்கூடத் தீக்குழிகளில் தீப்பற்றியது. சூரியனும் நடுவானில் உதயமானான்! சீடன் கச்சபனும், மனைவியும் தேவர்களை முறைப்படி வணங்கி ஆசிபெற்றுக் கொண்டார்கள்.

மும்மூர்த்திகளிடம் வரம்பெறும் பொருட்டு முனிவர்கள் அநேக ஆண்டுகள் கொடிய தவம் செய்தும் காண இயலாது தவிப்பது இருக்க, ஒரே சமயத்தில், தேவர்கள் புடைசூழ வாகன வைபவங்களுடன் மூவரும் காட்சி தந்த சிறப்பைக் கச்சபனுடைய மனைவி பெற்றது எவ்வாறு?

தீயும், கதிரவனும் இல்லையேல் உலகமேயில்லை. அதை நம்மிடம் பெறும் பொருட்டு வந்திருக்கிறார்கள்; உண்மை. இவ்வளவு பேரும், இந்த உலகமும் என் கணவனை எனக்குத் தரவல்லதா? ஆதலால் அழலை உயிர்ப்பிக்கவே மாட்டேன். சகல ஜீவராசிகளுடன் நாங்களும் கணவன் மனைவியாக மடிந்து விட்டுப் போகிறோம் என்ற ஒரே தீ



மானத்தை உறுதியாகப் பற்றி நின்றாள். அந்த உறுதியும், கற்புடைமையுமே தேவதேவர்களையும் ஆட்டிப் படைத்தது!

ஆனால் அவ்விதமான சிந்தனையேதும் அணுவளவும் அவள் மனதிலில்லை. அக்கினி அவிந்தால் அவனி அழியும். தேவர்கள் தன்னை நாடிவருவார்கள். அவர்கள் மூலமாகக் கணவனுக்கேற்பட்டிருக்கும் விபத்தைப் போக்கிக் கொள்வதுடன் சாபமிட்ட முனிவரையும் தலைகுனியச் செய்து தனது கற்பின் மாட்சிமையை உலகுக்குப் பறையறைவிக்க வேண்டும் என்றெல்லாம் அவள் நினைத்தாளா? கிடையாது!

கணவனுடைய உடலில் பற்றிய தீ, எரிமூண்ட அத்தீ, அவள் நெஞ்சத்தைக் கொதிப்பித்தது. கணவனுடைய உடலைக் குளிர்விக்கும் நோக்கில் அக்கினியைக் குளிர்வித்து விட்டாள்.

முனிவருடைய அருளால் கணவன் காக்கப்பட்டான் என்ற நிச்சயம் தெரிந்த பின்பே தனது சுய உணர்வு பிறந்தது அவளுக்கு. பயபக்தியுடன் கணவன் மனைவியாக தேவர்களை வலம் வந்து வணங்கி ஆசிபெற்றார்கள்!

இவ்வளவு தேவர்களும் தன்முன் நின்று காட்சி கொடுத்தது கண்டு ஆனந்த பரவசத்தோடு கைகூப்பி நின்றாள்! ஒரு விநாடி இருள்! மறுவிநாடி பளீரென்று வெளிச்சம்! கணவனைத் தெய்வமாகப் போற்றும் பாரதப் பெண்ணின் சக்தி அத்தகையது.

## ஏழு பரி தடுத்தாள் ஒருத்தி!

மணப் பருவத்திலிருந்த ராஜகுமாரி நளாயினியின் பேரெழிலும், அருங்குணங்களும் தேசந்தோறும் புகழ் பெற்றிருந்தது!

தவசியான மௌத்கல்யர் அந்தக் குணவதியை மணக்க விரும்பினார். விரும்பிய உடனேயே நிடத நாட்டை நோக்கிப் புறப்பட்டுவிட்டார் பெண் கேட்க! நிடத நாடுடை மன்னனைக் கண்டு, உத்தேசித்து வந்த காரியத்தைக் கூறினார். அரசன் முனிவருடைய நோக்கமறிந்ததும் திடுக்கிட்டான்! யோசனையில் ஆழ்ந்தான்!

தவசியாக, காட்டிலே வாழும் இவருக்கா என் குழந்தையைக் கொடுப்பது? கொடுக்க மறுத்தால் சாபமிட்டு விடுவாரோ?

அரசனுடைய தவிப்பை உணர்ந்த மௌத்கல்யர் பரிவுடன் "அரசே உன் சஞ்சலத்தை உணர்ந்து கொண்டேன். தவவலிமைமிக்க முனிவர்களுடைய அருளைப்பெற ராஜாதி ராஜர்களும் அடிபணிந்து அவர்களிடும் பணிகளை உவப்போடு ஏற்றுச் செய்வார்கள்! அப்படியிருக்க, உனது குமாரியை எனக்கு மணம் செய்து கொடுக்க என்ன ஆட்சேபணை உனக்கு?" என்று முனிவர்களின் மேன்மையை சக்தியை எடுத்துரைத்து அரசனை மடக்கினார் மௌத்கல்யர்.

சிந்தனையிலிருந்து மீண்டு, "தவப் பெரியோரே, எனக்கொரு ஆட்சேபமுமில்லை. குழந்தை சம்மதித்தால் தாராளமாகத் தங்களுக்கு மணம் செய்து தருகிறேன்" என்றான் ராஜகுமாரி, தவசியை மணந்துகொள்ள இசையமாட்டாள் என்ற நம்பிக்கையுடன். "மன்னவா, நானே கன்னிமாடத்திற்குப் போய் உன் பெண்ணிடம் சம்மதம் பெற்று வரலாமல்லவா?" என்றார் முனிவர்.



மறுக்கவும் இயலாமல், அனுமதிக்கவும் மனமில்லாமல் மென்று விழுங்கியபடி "ஆகா, தாராளமாக!" என்றான் அரசன்.

நிர்மல சித்தமுள்ள முனிவராயிற்றே! மறுக்க முடியுமா? அவர் சென்றதுமே பரபரப்புடன், விஷயத்தைத் தாதி மூலம் தெரிவித்து மறுத்து விடும்படி எச்சரிக்கை செய்து அனுப்பினான்.

இதனை உய்த்துணர்ந்த மௌத்கல்யர் தம்முள் சிரித்துக்கொண்டார். கன்னிமாடத்திற்குப் போகும் வழியில் மன்மதனைப் பழிக்கும் அழகனாகத் தமது உருவை மாற்றிக்கொண்டு நளாயினியிடம் சென்றார்.

பார்த்தாள் ராஜகுமாரி நளாயினி! பறிகொடுத்தாள் மனதை! ஆ! இப்படிப்பட்ட ஆணழகனையா மணக்க மறுத்துவிட உத்தரவிட்டார் தந்தையார்?

மாறுவடிவில் வந்த முனிவரைக் கைகூப்பி வணங்கி வரவேற்று, ஆசனமிட்டு அமரச் செய்து உபசரித்தாள்.

முனிவர், தமது பெயரைச் சொன்னார், வயதைச் சொன்னார். கடைசியில் "பெண்ணே, அரச வாழ்வையும், மானிகை வாசத்தையும் நுகருமுன்பு கொஞ்சகாலம் தவம் செய்து தெய்வ அருளைப்பெற ஆசைப்படுகிறேன்! ஆசிரம வாழ்க்கையில் உனக்கு."

"ரொம்ப ஆசை! நியமமும், தூய்மையும், தெய்வ பக்தியும் உயர்ந்த ஆன்ம சாதனைகளுக்கு உற்றவையல்லவா" என்றாள் நளாயினி சந்தோஷமாக!

ஏனெனில் பிறவி ஞானி அவள்! தூய வாழ்வை விரும்பியதில் வியப்பென்ன? "நளாயினி, நான் சிலநாட்கள் தவ வாழ்வை ஏற்க விரும்புகிறேன்—அதாவது திருமணமான பின்பும் கூட—என்றேன்; போயும் போயும், காடு வாழ் தவசிக்கா நம் புதல்வியைத் தருவது என்று......"

"சுவாமி, எனக்கு ஆட்சேபமில்லை என்பது தெரிந்தால் தந்தையார் மறுக்கமாட்டார்" என்றாள் மௌத்கல்யரை ஓரக் கண்ணால் பார்த்தவாறு.

"நல்லது பெண்ணே, உனது சம்மதத்தைத் தெரிவித்து மணநாள் குறிப்பிடலா மல்லவா?" என்று அவளை நிமிர்ந்து பார்த்துக் கேட்டார்.

மௌத்கல்யருடைய கேள்வியிலும், நோக்கிலும் மையல் தொக்கி நின்றதைக் கண்ட நளாயினி முகம் சிவக்க நாணித் தலைகுனிந்தாள்.

கரைகடந்த மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்ட மௌத்கல்யர் பழைய உருவெடுத்துக் கொண்டு ராஜ சபைக்கு வந்து சேர்ந்தார். களிப்பும், வெற்றியும் தொனிக்கும் குரலில் "அரசே உன் குமாரியின் சம்மதம் பெற்றுக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார்.

அரசனுடைய முகம் கறுத்தது, அகத்துள் விசனம் மேலிட்டது. என்றாலும், "அப்படியா, சந்தோஷம், விரைவில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வோம்" என்றான் நலிந்த குரலில்.

மன்னனுடைய மன நிலையை உள்ளபடி உணர்ந்த முனிவர் இரக்கத்துடன் தாம் செய்த தந்திரத்தைக் கூறி, "மன்னவனே, உன் குமாரியைப் போன்ற பரிசுத்த உடலும், உள்ளமும், பண்பும் உள்ள கன்னிகை எங்குமே யில்லை! எனது வேள்விக்குரிய காரியங்களுக்கு இப்படிப் பட்ட நல்லாள்தான் வேண்டும். அதனால்தான் மற்ற ரிஷி கன்னிகைகளையெல்லாம் விடுத்து உன் புதல்வியை நாடி வந்திருக்கிறேன். என்னை மணப்பதால் நளாயினி, இம்மை, மறுமைக்கான நற்பேறுகளைக் குறைவறப் பெறுவாள். அரசே நீ மன நிறைவுடன் மணம் செய்து கொடுத்தால் பெற்றுக்கொள்ளுகிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார் உண்மையான உள்ளத்தோடு. "முனிவரே என் மட்டில் எனக்கு ஒரு ஆட்சேபமுமில்லை, தாங்கள் தவசி என்ற உண்மையை நளாயினி தெரிந்துகொண்டுதான் சம்மதம் கொடுத்தாளா என்பதை..."

"அதை இப்போதே தெரிந்துகொள்வது அவசியம் இல்லையா?"

"ஆமாம்," என்றான் அரசன் அவசரமாக.



"நீ போய் உன் பெண்ணிடம் கேட்டு சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொண்டு வருகிறவரையில் நான் தாமதிக்கிறேன்" என்று சொல்லி அரசனை அனுப்பினார் முனிவர்.

"தேவி, உன்மகள் மௌத்கல்ய மகாமுனிவரை மணாளனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறாளாமே, அது அவ்விதம்தானா என்பதை அவளைக் கேள்" என்றான் அரசன் மனக் குறையும், குமுறலும் தென்படும் குரலில்.

முக்தாதேவி திகைப்பு மேலிட "என்னது?" என்ற கேள்வியுடன் நளாயினியை ஏறிட்டு நோக்கினாள்.

குனிந்த தலையுடன், பணிவான குரலில், "அம்மா தவறேதும் நான் செய்ததாக எனக்குத் தெரியவில்லை. சற்று முன்பு, வடிவழகு பொருந்திய ஒரு ஆண்மகன் தந்தையாரால் அனுப்பப்பட்டதாகக் கன்னிமாடத்திற்கு வந்தார். தமது பெயர் மௌத்கல்யர் என்றும் விவாகம் செய்துகொள்ள என்னைச் சம்மதம் கேட்குமாறு தந்தை யார் அனுப்பி வைத்ததாகவும் அவர் தெரிவித்தார். மறுத்துவிடுமாறு தாதிமூலம் செய்தி அனுப்பியிருந்தார் தந்தையார். ஆனால் அதற்குமுன்னமே அந்த ஆண்மகனைக் கண்டு என்னையுமறியாது என்மனம் சம்மதித்துவிட்டது. அதோடுமட்டுமல்ல, மணமான பிறகும் சிறிதுகாலம் தவ வாழ்க்கையிலீடுபட விரும்புவதாகவும், நான் அதன்படி இருக்க சம்மதமா, இயலுமா என்றுகூடக் கேட்டார். என்மனநிலை, சுபாவம், தங்களுக்கே நன்றாகத் தெரியுமே அம்மா! நியமம், பக்தி, ஆசாரம், முதலியவைகளில் எனக் குப் பற்றுதல் அதிகம் என்பதும் அறிவீர்கள்! ஆதலால் இருமடங்கு சந்தோஷத்தோடு ஒப்புக்கொண்டேன்......"

"அசட்டுப் பெண்ணே, ராஜகுமாரர்களெல்லாம் 'நான், நீ' என்று உன்னை மணந்துகொள்ளக் காத்திருக் கையில்......"

"தாயே, என்மனம் அவரை வரித்துவிட்டதால் இதெல்லாம் உபயோகமற்ற செய்திகள் அம்மா!"

"போதும், காட்டிலே குடியேறி, காயும், கிழங்கும் தின்றுகொண்டு, விரதமும், பட்டினியும் கிடந்து மடியவா உன்னை......"

"அம்மா! எல்லாம் தெரிந்தும், அக்ஞானத்தால் இவ்விதம் தவவாழ்க்கையைப் பழிக்கிறீர்கள்! தகாது அம்மா! வாழ்க்கை அநித்தியமானது. இளமையும், சுகமும், போகமும், செல்வமும் நிலையற்றவை என்பது தாங்கள் அறியாததா?"

"அதற்காக—ஒரு முனிவரைப் போய் மணந்து, மரவுரி தரித்துக்கொண்டு, காட்டில் திரியவேண்டுமா?"

"தேவி, போதும். மனதைச் சமாதானம் செய்து கொள். அன்று நான்முகன் அவளைப் படைத்த போது, மௌத்கல்ய மகரிஷிக்கென்றே படைத்துவிட்டான். அவரோ, முக்காலமும் உணரும் சக்திபெற்ற முனிவர். அவருடைய வேள்விக்கிரியைகளுக்கு அனுகூலமாக இருந்து தவ வாழ்வில் அவள் இன்பம் துய்க்க விரும்புகிறாள். மனதைத் தேற்றிக்கொள் தேவி. முனிவருக்கிருக்கும் அவசரத்தைப் பார்த்தால் வெகுவிரைவில் மணவினை நடைபெற வேண்டுமெனத் தெரிகிறது. போய் வருகிறேன்" என்று கூறி, பதிலை எதிர்பாராமல் வெளியேறினான் அரசன்.

நிடத நாட்டு ராஜகுமாரி நளாயினியை மௌத்கல்ய மகரிஷிக்குக் கொடுத்து மணவினை நடக்கப் போவதை அறிந்த தவசிகளின் குழாம் அதிசயித்தது! தேச தேசத்து ராஜாக்களும், ராஜகுமாரர்களும் கொதித்தெழுந்தார்கள்! நளாயினியின் பேரெழிலும், பண்பும் அப்படிப் பிரசித்தி பெற்றிருந்ததே!

திருமண நாள் நெருங்கியது!

நிடததேசாதிபதியின் குமாரிக்குத் திருமணம் என்று மணவோலை வந்தால் அழைப்பை ஏற்று வரத்தானே வேண்டும்? எனவே, மனத்தாபத்தை மனதுக்குள்ளேயே புதைத்து விட்டு அரசர்கள் அனைவருமே வந்திருந்தார்கள்.

ரிஷிகளின் கூட்டம்தான் அமோகமாகப்பெருகி, பந்தல் நிரம்பி வழிந்தது!



மகரிஷி மௌத்கல்யருக்கு நளாயினியை மணம் செய்து கொடுத்தார் நிடத நாட்டுக்கதிபதி! பேராரவாரம் செய்து வாழ்த்துக் கூறினார்கள் மகரிஷிகள்! வேத வாழ்த்தொலிகள் வானை எட்டின. மகிழ்வுபூத்த உள்ளத்தினராக நளாயினியின் கழுத்தில் மங்கல நாண் பூட்டி மனையாளாக ஏற்றுக் கொண்டார் மௌத்கல்யர்.

மணவறையில் மணாளனுடன் நிற்கும் பெண்ணைக் கண்டு பரவசமுற்றாள் முக்தாதேவி! மகளை நெஞ்சாற வாயார வாழ்த்தினாள். அரசனும், மனநிறைவுடன் மணமக்களுக்கு ஆசி நல்கினான். மௌத்கல்யருடைய மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தருமபத்தினியுடன் புறப்பட ஆயத்தமானார்!

முக்தாதேவி மகளை ஆரத்தழுவி, "கண்மணி, தூய வாழ்வினுக்கும், நற்பேறுகளுக்கும் ஆசைப்பட்டு மகரிஷியை விரும்பி மணந்து கொண்டாய்! ராஜ சுகம் கண்ட மேனி உன்னுடையது. கணவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை, சிரத்தையோடும் பக்தியோடும் செய். தவசிகளுக்குக் கோபம் வந்தால் என்ன நேரும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு அதிஜாக்கிரதையாக இருந்து உனது வாழ்வைக் காத்துக்கொள்..." என்றார்.

தாயும், பெண்ணும் விடைபெறும் காட்சியை முனிவரும், அரசனும் பார்த்தார்கள். மௌத்கல்யர் அரசனிடம் "உனது குமாரியின் சிறப்பியல்புகளால் எனது அறநெறிக்குரிய அலுவல்களையும், இல்லறத்தின் பயனையும் துய்க்கவிருக்கிறேன். ஏதோ என்னாலியன்ற அளவு ஆசிரம வாழ்வில் ராஜகுமாரிக்கு சிரமமுண்டாகாதவாறு பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றார் உபசாரமாக.

பிரியா விடை கொடுத்துப் பெண், மாப்பிள்ளையை அனுப்பி வைத்தார்கள் அரசனும், முக்தாதேவியுமாக.

மௌத்கல்யருடன் ஆசிரம வாழ்வைப் பங்கிட்டுக் கொண்டாள் நளாயினி. யோசனை, சூசனைகளைக் கொண்டு நிதானமாக இல்வாழ்க்கையை நடத்தி வந்தாள். முகம்

கோணாமல், பதியிட்ட பணிகளைச் செவ்வையாகச் செய்து அவரது திருப்தியையும், மதிப்பையும் பெற நினைத்தாள்.

அவள் நினைத்ததற்கு மாறாக அவளை, அவளது பதி பக்தியைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்ற யோசனை —ஏனோ தெரியவில்லை—அவர் நெஞ்சிலே கிளைத்தெழுந்தது! எவ்வளவுக் கெவ்வளவு அவள் கண்ணும் கருத்துமாகச் சேவை புரிந்தாளோ அவ்வளவுக் கவ்வளவு முனிவருடைய சோதனைகளும் கடுமையாயின! கோபித்தார். பற்றற்ற தன்மையை வெளிப்படுத்தப் பலவிதங்களில் சொற்களைச் சிந்தி ஏசினார். நிந்தனை செய்தார். முதுமையை வலிய வரவழைத்துக் கொண்டு படுகிடையாகக்கிடந்து துன்புறுத்தினார். அதுவும் போதாது என்று தொழுநோயை வேறு தருவித்துக் கொண்டு, நோய் முற்றி விட்ட தசையில் புண்களுண்டாகி, நிண நீரும், சீழும் ஒழுகி, கிருமிகளை புழுக்கச் செய்து கொண்டார்.

இளமையிலேயே—தனது நல்வினைப் பயனாக, ஞான முதிர்ச்சி பெற்ற நங்கையான நளாயினி கணவனுடைய திருவுள்ளத்தைப் புரிந்து கொண்டாளாயினும் இம்மியும் மனம் நோகவில்லை! அதையும் ஒரு அன்புடைமை யெனவே கருதினாள்! அருவருப்பு என்பதே துளியும் இல்லாமல் புண்களைக் கழுவி மருந்திட்டாள். புழுக்களை அகற்றி உபாதையைக் குறைக்க நேரமெல்லாம் செலவிட்டாள்!

அப்பொழுதாவது முனிவருக்குத் திருப்தி ஏற்பட்டதா? இரக்கம் சுரந்ததா மனதில்? கிடையாது! என்ன கொடிய நினைவுகள், யோசனைகள்! உண்ணும் உணவில் புழுக்களை வீழ்த்தினார்! அந்தப் பத்தினிப் பெண் என்ன செய்தாள்? அவர் உண்டு மிகுந்த உணவில் விழுந்த புழுக்களை, மலர்களெனக் கருதி எடுத்து அப்பால் வைத்துவிட்டு உணவை அமுதமாக எண்ணி உண்டாள்!

தான் முதலில் கண்ட மன்மத வடிவம் போய், மீசை, தாடியுடன் கூடிய தவசியுடன் நீடுழி காலமும் வன வாசத்திலேயே கழிக்க நேர்ந்ததே என்று அவள் உள்ளம் வெதும்பவில்லை. முதுமை அவரைப் பற்றிவிட்டதே என்று



துயரப்படவில்லை! குஷ்டரோகியுடன் காலம் தள்ள நேர்ந்ததே என்று நொந்து கொள்ளவில்லை! குறைவற்ற பக்தியோடும் அன்போடும் தான் அவருக்குப் பணி செய்து வாழ்ந்து வந்தாள் அந்த உத்தமி பெற்ற பெண்!

தொழுநோயை வரவழைத்துக் கொண்டு பத்தினியைப் பலவிதமாகப் பரீட்சித்துப் பார்த்தும் மனதில் நிறைவு காணவில்லை முனிவருக்கு! அதற்கும் மேலானதாக மற்றொரு 'அக்கினிப் பரீட்சை'யும் வைத்துப் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார் மௌத்கல்யர்.

அப்போது முதலே, ஏதோ கேட்க விரும்புபவர்போல அடிக்கடி நளாயினியின் முகத்தை ஏக்கத்தோடும், பரிதாபத்துடனும், பார்த்துக் கொண்டே இருப்பது கண்ட நளாயினி, "பிராணேசுவரா, என்ன வேண்டும் தங்களுக்கு?" என்று அன்பும், ஆதரவுமாகக் கேட்டாள்.

"அன்புடையாளே, எனக் கேனிப்படி சபலபுத்தி உண்டாயிற்று என்று தெரியவில்லை. மனதை அடக்க நான் பட்ட பாடெல்லாம் வீணாகி விட்டது. என் மனையாளான உன்னிடமே இதை எப்படி வாய் விட்டு உரைப்பேன்?"

"அடியாளிடம் கூறத் தயக்கமென்ன? எதுவாக இருந்தாலும் சரி, தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதே எனது பணி. தாராளமாகச் சொல்லுங்கள்" என்றாள் நளாயினி.

"சொல்லவும் அவமானமாக இருக்கிறது, சொல்லாவிடிலோ இவ்வுயிர் உடலில் தங்காது போன்ற..."

"ஏனிப்படி சங்கடப்படுகிறீர்கள்? எவ்வளவு கடினமான சாதனையாக இருந்தாலும் என்னாலியன்ற மட்டும் பிரயாசைப்பட்டு தங்கள் விருப்பத்தை ஈடேற்றுகிறேன். அடியாளிடம் கூற இவ்வளவு யோசனை யென்ன?" என்று இன்னுரை பகன்று கொழுநனுடைய அடிகளைத் தொட்டு வணங்கினாள் அந்தப் புனிதவதி.

"அருகிலுள்ள அமராபுரி நகரில் விலை மாதொருத்தி இருக்கிறாள் 'காமினி' என்று..."

"சொல்லுங்கள் சுவாமி"

அவள் தெய்விக சக்தியும், அருளும் பெற்றவள் என்று அறிகிறேன். அவளுடன் ஓரிரவு இன்புற்றிருந்தால் இந் நோய் விலகுமோ என்று ஒரு நைப்பாசை..."

"இப்போதே முயற்சிக்கிறேன் சுவாமி," என்றாள் மறுமலர்ச்சியுடன். அவள் குரலில் வெறுப்போ, துயரமோ, சலிப்போ தென்படுகிறதா என்று கூர்மையாகக் கவனித்தார் முனிவர்! இல்லை! துளிகூட இல்லை!

கணவனது விருப்பம் தெரிந்த அக்கணமே காமினியின் வீடுதேடிப் புறப்பட்டாள்! அவளைப் பார்த்து தான் யாரென்பதும், வந்த அலுவலைப் பற்றியும், கணவருடைய பெயர், தவவலிமை, யாவும் எடுத்துக்கூறி, பெரியமனது செய்து, அவருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைத்து தனக்கு மாங்கல்யப் பாக்கியம் அருள வேண்டும் என்று கரைந்துருகி வேண்டினாள்!

"எல்லாம் சரிதான், அவரது நோயை நினைத்தால் அச்சமாக இருக்கிறதம்மா..."

"பயப்படாதே அம்மணி! தவவலிமை மிக்க முனிவர்களின் அருள் எவ்வளவோ பயன்தரும்! என் நாதனுடைய சித்தியில் அவநம்பிக்கை கொள்ள வேண்டாம்! இதற்கு வெகுமதியாக நீ என்ன கேட்டாலும் தருகிறேன். ஏதோ சாப நிவர்த்திக்காகவோ, அல்லது உனக்கு நல்வினை நாடி வரும் நல்லகாலமோதான் அவருக்கு இவ்வித நினைவு ஏற்பட்டிருக்க வேண்டும்! தவசிகளுக்கு இந்த நினைவு வந்தால் அதற்குப் பொருளும், உய்வும் உண்டு என்பது உனக்கு தெரியாதா?"

"சரி அம்மா! நளாயினி தேவியார் என்னை நாடிவந்து இந்தஅழியவிருக்கும்சரீரத்தைத்தானே கேட்கிறார். உங்கள் கொழுநர் என்கிறீர்கள்? உத்தமிகளின் வாழ்வு பசுமையாக இருக்க இந்தச்சிறு தியாகம்செய்வது ஒன்றும்பிரமாதமல்ல! அம்மணி, போய்வாருங்கள்" என்று பதிலிறுத்தாள் அந்த காமினி!



இதுவும், என் நாதனருள்தான் என்று மகிழ்வுற்று வந்தாள்! ஆனந்தம் குமிழியிடும் குரலில் "சுவாமி, [illegible]மாது சம்மதம் தந்திருக்கிறாள் போவோமா?" என்றாள் நளாயினி.

முனிவர் பேச்சற்றுப் போனார்! வியப்பினால் கண்கள் விரிய "இது உண்மைதானா அன்பே, அவமானம் செய்யும் நோக்கத்தில் ஒப்புக் கொண்டிருப்பாளோ ஒருவேளை—,'.

"இல்லை சுவாமி, அவ்வாறில்லை! தயக்கமின்றி நாம் புறப்படலாம்" என்றாள் உறுதியுடன்.

அவளுடைய, பரிபக்குவமாகிவிட்ட பதிபக்தியைக் கண்கூடாகக் கண்டதும் முனிவருடைய மனத்தில் இரக்கமுண்டாயிற்று! ஆயினும் அவர் தமது உத்தேசத்தை மாற்றிக் கொள்ளவில்லை! தயக்கத்துடன் "அதுசரி, அவ்வளவு தொலைவு நான் எவ்வாறு நடந்து வருவேன்? என்னால் ஆகாதே," என்றார்.

"அடியாளிருக்கும்போது இதற்கென்ன கவலை? மெதுவான இளம் காட்டுக் கொடிகளால் கூடை வனைந்து, அதில் உடல் நோகாது உட்கார்த்திவைத்து எடுத்துச் செல்வேன்," என்றாள் உற்சாகமாக.

உடனேயே செயலில் ஈடுபட்டாள். விளக்குவைக்கும் நேரத்திற்குள் கூடையை முடைந்து, அதில் மலர்களும், தளிர்களும் பரப்பி பூப்போல கணவரைத் தூக்கி அதில் உட்காரவைத்தாள்.

தலைமீது 'சும்மாடு' சுற்றிவைத்து அதன்மீது கூடையை தூக்கி வைத்துக் கொண்டு அமராபுரியை நோக்கி நடையைக் கட்டினாள்!

நேரமாகிறதே என்ற அவசரத்தில் வழியைச் சரியாக [illegible]ர்ந்து பாராது விரைந்து கொண்டிருந்தாள் நளாயினி. [illegible]லே, சூலத்தில் செருகப்பட்டு தொங்கிக்கொண்டிருந்த [illegible]ட்வ்ய ரிஷியின் கால்களில் கூடை இடறிவிட்டதால் [illegible]வலியால் துடிதுடித்துப்போய், "ஏ பெண்ணே சூலத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் உயிர்த்துடிப்பில் நீ வேறு

கூடையை இடித்து வலியை உண்டாக்கி விட்டாய்-பொழுது விடியுமுன்பு உன் மங்கல வாழ்வு நாசமாகக்கடவது,'' என்று கோரமான சாபமிட்டார் கோபியான மாண்டவ்யர்! நளாயினி திடுக்கிட்டாள்.

எந்த மங்கலநாண் வாழ்வுக்காக, அவள் போய்க்கொண்டிருந்தாளோ—அதற்கே ஒரு கண்டமா வழியில்? உடனேயே ''பொழுது விடியாதிருக்கக்கடவது,'' என்று கூறி விட்டு கருமத்தில் கண்கொண்டு வழிநடந்தாள். தாசி வீடு சேர்ந்து கூடையைத் திண்ணையிலிறக்கி வைத்தாள். கதவைத் தட்டிக் காமினியை அழைத்தாள்.

காமினி கதவைத் திறந்து, தூக்கம் சரிவரக் கலையாதவளாக, 'இப்படி வரச்சொல்' என்றாள்.

''அப்படியே அம்மணி'' என்று சொல்லி இடைகழித் திண்ணையில் கூடையை இறக்கி மெல்ல கணவரைத் தூக்கிக் கீழே விடுத்தாள்! கதவை மூடிக் கொண்டு வெளியே வந்தாள் அந்த மடந்தையர்குல மாணிக்கம்!

முனிவரைப் பார்த்துத் திகிலடைந்து மெய்பதற கண்களை மூடிக்கொண்டாள் காமினி. மன்மதனாக மாறுவது தான் முனிவருக்கு 'ஆகி வந்த'தாயிற்றே! ஒளிபடைத்த வடிவழகனாக மாறி நின்று, மோகனப் புன்னகை மேவிய முகத்துடன் ''காமினி, இப்போது பார் என்னை!'' என்றார் வெண்கலக் குரலில்.

மூடிய கண்களைத் திறந்தாள் காமினி! மதனனாக எதிரே நின்ற முனிவரை அணையும் ஆவலுடன் பாய்ந்து அருகில் வந்தாள்! கை உயர்த்தி அமர்த்தினார் முனிவர். காமினி நினைவிழந்தவளாக நிலத்தில் சாய்ந்தாள். நாழிகைப் பொழுது மறைந்ததும், ''நளாயினி'' என்று முனிவர் கன சுரத்தில் அழைப்பது கேட்டு, ''இதோ வந்தேன் சுவாமி,'' என்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்!

மோகன வடிவும், அருளும், அன்பும், ஆசையும் தேங்கி நிற்கும் மலர் விழிகளில், ஏறிட்டுப் பார்த்து ''மாதர்களில் சிறந்த மணிப்பெண்ணரசி! கற்புடைய



[illegible]லாளே! உன்னை வெகுவாகச் சோதித்தேன், நீ வென்[illegible]ய், நான் தோற்றேன்! உனக்கென்ன வரம் வேண்டும் [illegible]ன் இப்போதே...'' முனிவர் பேசவில்லை, இரைந்துரைத்தார். அன்பினால் உரைதடுமாற உளறல் கண்டது பேச்சில்!

நளாயினிக்கு ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கை விவரிக்க வார்த்தைகள் இல்லையா! பக்தி மேலிட்டால் கண்ணீராய்க் கொட்டி பதியின் மலரடிகளை நனைத்தாள் அவருடைய நிறையன்பில் அணைப்புண்டு திணறித் தவித்தாள்!

''வரம் கேள் என் குலவிளக்கே, கேள்,'' என்று மீண்டும் மொழிகிறார் மௌத்கல்யர்.

''தேவரீருக்குப் பணிபுரிந்து இல்லறம் காப்பதே எனது அவா, அதை அருளுங்கள் எனக்கு'' என்றாள் அந்தப் பெண்ணரசி.

''அவ்வாறே ஆவதாக'' என்று அருளி, ''வா போவோம்'' என்று கைப்பற்றினார் முனிவர்.

''காமினி அம்மைக்கு—''

''அவளுக்கு இனி குறையேதுமில்லை! வா போகலாம். நாம் சென்றதும் அவள் விழித்தெழுந்துவிடுவாள்'' என்று கூறி இருவரும் வழிநடந்துவரும் சமயம் சாவதானமாக மாண்டவ்யர் இடறுற்றதும், அவர் கொடுத்த சாபமும் தான் கொடுத்த மறுசாபமும் குறித்துச் சொன்னாள் நளாயினி.

மௌனமானார் மௌத்கல்யர். அந்தவிடத்திலேயே சமாதியிலமர்ந்தார். அவருடைய அகக் கண் முன்பு சூரிய உதயம் ஆகாதிருப்பதும், அதனால் மூவுலகமும் செயலிழந்து நிற்பதும், காத்தற்குரிய பெருமான் இதை [illegible]து மாண்டவ்யரை அணுகி, அவர் சாபமிட்ட [illegible]கை மௌத்கல்யருடைய மனைவி நளாயினியென்றும், [illegible]ளது கட்டளையால் சூரியன் உதிக்காததும், சராசரங்கள் படும் அவதியையும் சுட்டிக் காட்டி, சாபத்தை அருளாக மாற்றித் தரும்படி கேட்பதும், அவ்வாறே

மாண்டவ்யர் அருள் புரிந்து ஆசி தருவதும், நளாயினியும் தனது வாக்கினால் உதித்து வரும்படி கதிரவனை அழைப்பதும் தெளிவாகப் புலப்பட்டன! சமாதி கலைந்து விழிப்புற்ற முனிவர் உள்ளம் புளகமுற மனையாளை நோக்கினார்.

"அன்புக்குரியவளே, உனது கற்பின் மகத்துவத்தால் நாளை தினம் வைகுந்த நாதனுடைய தரிசனம் கிடைக்கவிருக்கிறது நமக்கு! ஊழி கடந்தும், நீடு வாழத் தக்க அரும்பெரும் புகழ் பெற்று விட்டாய்! இந்நிகழ்ச்சி உன் புகழுக்கு மணி மகுடம் வைத்தது போலாயிற்று......"

கணவனுடைய அருள்வாக்கினால் இச்சிறப்புரையைச் செவியுற்ற நளாயினி மகிழ்வும் நாணமும் கொண்டவளாக தலையைக் குனிந்து கொண்டு "அதிகமாகப் புகழ்கிறீர்கள் நாதா! என் பதிக்கு நேரவிருந்த அபாயத்தைத் தவிர்க்கும் அவசரத்தில் ஜீவதார மூர்த்தியான சூரிய தேவனை— அவனது வேகத்தைத் தடுத்து நிற்கவைத்து விட்டேன்" என்றாள்.

'ஆம்! அதைத் தவிர வேறென்ன செய்திருக்க முடியும் நீ? உன் சரிதையிலிருந்து பதிபக்தியின் மகிமை என்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காகத்தான் மாண்டவ்யரை இடறியிருக்கிறோம்! ஒன்றின் விளைவாக மற்றொன்றினை நிகழ்த்துவது காலகதியின் கைத்திறன்!" என்று இவ்வாறு பேசிக்கொண்டே இல்லம் வந்து சேர்ந்தார்கள் அந்த தவதம்பதிகள்!

மறுதினம் மௌத்கல்யர் கடந்த இரவு ஞானக் கண் முன்பு கண்ட யாவும் கண்கூடாகக் கண்டுகளித்தார்கள்!



## வில்வேடனை எரித்தாள் ஒருத்தி

விதர்ப்ப தேசாதிபதியான வீமராஜனுடைய ஒரே தவச்செல்வி தமயந்தி. அவள் அழகுக்குப் பெயர்போனவளாக இருந்ததால், இந்திராதி தேவர்களும், சனீஸ்வர பகவானும் கூட மண்ணுலகப் பெண்ணான தமயந்தியை மணக்க ஆசைப்பட்டார்கள்! ஆசைப்பட்டதோடல்லாமல் வீமராஜன் தனது மகளுக்கு எப்போது 'சுயம்வரம்' வைத்து மணவினை நடத்தப்போகிறான் என்று வேறு காத்திருந்தார்கள்!

மண்ணுலகில், நிடதநாட்டுத் தலைநகரான மாவிந்த நகரத்துப் பூங்கா புகழ் வாய்ந்த சிங்காரவனம்! பொழுது போக்குக்காக அவ்வனத்தின் மையத்திலே பெரியதொரு நீர் நிலையும் மணிமேடையும் உண்டு. அங்கு வந்த நளசக்கரவர்த்தி, நீர் நிலையில் மலர்ந்திருந்த தாமரை மலர்மீது பொன்னிறம் வாய்ந்த அன்னமொன்று தலை சாய்த்துப் படுத்திருப்பதைக் கண்டு 'இதென்ன விந்தை! அன்னத்தை வெண்மைக்கு உவமையாகக் கொள்வது மரபு. அங்ஙனமிருக்க பொன்னிற அன்னமும் உண்டோ?' என்று அதிசயித்து நீரிலிறங்கி மெல்ல நடந்து சென்று அதைப் பிடித்தான்! விழிப்புற்ற அன்னப்புள் மிரள விழித்தது! ஐயோ, செத்தோம்! என்று உயிர்ப் பயத்தால் வெடவெடவென்று நடுக்கமுற்றது அதன் உடல்!

இரக்கத்துடன் அதை வருடிக் கொடுத்து. "ஐயோ பாவம், எங்கே கொன்று விடுவேனோ என்று பயப்படுகிறாயா? மாட்டேன்! அதிசயமான அழகுப் பறவையாக இருக்கிறாயே என்று பிடித்தேன். பார்த்துவிட்டு விட்டு விடுவேன்!......" என்று தனக்குள்ளாகப் பேசிக்கொண்டான் நளன்!

பேசும் சக்தி பெற்ற அந்த தெய்வீகப் பறவை உயிர் தப்பினோம் என்ற பெரு மகிழ்வில் "மன்னவா, நானென்ன பிரமாத அழகு? அழகை நீ காணவேண்டுமாயின், விதர்ப்ப நாட்டரசன் மகள் தமயந்தியைக் காண வேண்டும்!......" என்றது.

"ஓ! உன்னைவிடவா அவள் அழகு என்கிறாய்?" என்று அதன் மென்னுடலைத் தடவிக்கொண்டே கேட்டான் நளன்.

"நன்றாகக் கேட்டாய்! அவள் அழகிலே மயங்கி...... இந்திரன், வருணன், வாயு, முதலிய தேவர்களும்—சனீச்சுர பகவானும்கூட அல்லவா அவளை மணம் செய்துகொள்ளப் பறக்கிறார்கள்!"

"அப்படியா! நீ சொல்வதைப் பார்த்தால் எனக்கும்கூட அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பிறக்கிறது."

"அது கிடக்கட்டும்! அழகி இருக்கிறாள் என்று அழகாக வர்ணித்து விட்டால் போதுமா? சொன்ன சமர்த்தைப்போல காண்பித்தாயானால்,......"

"ஓ! காண்பிக்கிறேன். ஆனால் இப்போதே அல்ல. முதலில் நான் தூது போய் நிடதநாட்டு சக்கரவர்த்தியின் ராஜ கம்பீரத்தை, பெருமையை, புகழை விரித்துரைத்து, அவளுக்கு உன்பால் அன்பு உதிக்க வழி செய்து விட்டு அதன் பின்பே உன்னை இட்டுச் செல்வேன். அவசரப் பட்டால் முடியாது!"...என்று பரிகாசம் பேசியது புள்! பின்னர் அங்கிருந்து சென்றது.

சென்ற காரியத்தைச் சிறப்பாக முடித்துக்கொண்டு திரும்பி வந்தது அன்னம்! பூங்காவின் தனிப்பட்ட வழியாக நளனை இட்டுச் சென்று கன்னிமாடச் சாளர வழியினூடே, மகிழ மலர்களைச் சரமாகக் கோக்கும் தமயந்தியைக் காட்டியது.

கண்டான் நளன்! கண்டுகொண்டே நின்றான்! அழகுக்கு நாயகியாகத் திகழ்ந்த தமயந்தியை இமைக்காது



பார்த்தான்! அங்கேயே நளனை விடுத்துத் தமயந்தியிடம் சென்றது புள்!

அங்கிருந்தவாறே நளனைக் காட்டிக் கொடுத்தது! தலையை ஆட்டி செய்தி கூறியது! பேரழகி தமயந்தி தலையைத் திருப்பி அரசரேறனைய நளனைக் கண்ணெடுத்துப் பார்த்தான்!

வீரமும், தீரமும் திகழும் நளராஜனுடைய நெடிய கம்பீர உருவைக் கண்டு புளகமுற்றாள்! அவன் நின்ற நிலையிலே தென்பட்ட ஒயிலும், ஒய்யாரமும் அவள் நெஞ்சைக் கவ்வின. நெஞ்சகத்தே மூளும் இனிய நினைவுகளை நெட்டுயிர்ப்பாக வெளியேற்றினாள். கண்களால் கருத்தைச் சொன்னாள்! அது போதாது என்று அன்னப் புள்ளிடம் வேறு தனது உள்ளக் கிடக்கையை ஓதி உணர்த்தச் சொன்னாள்.

அனைத்தையும் மனதில் வாங்கிக் கொண்டான் நளன். மையும், மையலும் ஊறி நின்ற விழிகளால் வழியனுப்பினாள் தமயந்தி. நாடு திரும்பினான்.

திரும்பச் செல்லும் நளனை நெடுநோக்காக நோக்கினாள் தமயந்தி! உரு மறைந்ததும், பஞ்சணையிலே வந்து சோர்ந்து விழுந்தாள். உற்றார், உணவு, உறக்கம் எல்லாம் கைத்தன அவளுக்கு. மேனியில் பசலை படர்ந்தது.

தாயார் சாருகாசினி மகளுடைய நிலைமையைப் புரிந்து கொண்டு, பருவமெய்தி விட்ட மகளுக்கு மணவினை நடத்துமாறு கணவனிடம் செய்தி உரைத்தாள். அடுத்த சில நாட்களில் வீமராஜன், தனது செல்வியின் திருமணத்தை நிச்சயித்து, அதற்கான 'சுயம்வர' நன்னாளைக் குறிப்பிட்டு ஐம்பத்து ஆறு தேசத்து அரசர்களுக்கும் ஓலைகள் அனுப்பி வைத்தான்!

சுயம்வரத்தன்று காலையில், இந்திரன், வருணன், வாயு, எமதர்மன் ஆகிய நான்கு தேவர்களும், மானிடப் பெண்ணை, தேவர்களாகிய நாம் மணக்க நினைப்பதா என்ற தாரதம்மியம் கூடப்புரியாத அளவுக்கு ஆசைக்கு அடிமை

யாகிச் சுயம்வரத்திற்கு வந்துவிட்டார்கள்! தமயந்தி ஏற்கெனவே நளனை வரித்துவிட்ட செய்தி எப்படியோ வெளியாகித் தேவர்களின் செவிக்கும் எட்டிவிட்டது! நால்வரும் கூடி யோசித்து பழிதீர்க்கும் நோக்கத்துடன் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். அதன்படியே நளனை அழைப்பித்து தாம் யாரென்பது தெரிவித்து, சுயம்வரத்திற்காக வந்திருப்பதும், நால்வரில் யாருக்கு மாலையிடவிருப்பமோ இடலாம் என்றும் தமயந்தியிடம் செய்தி அறிவிக்குமாறு உத்தரவிட்டார்கள்!

தேவேந்திரனுடைய கட்டளையை மீற முடியுமா? உத்தரவுப்படி தேவர்களின் உதவியால், யார்கண்களுக்கும் புலப்படாதவாறு தமயந்தியின் கன்னிமாடத்திற்கு வந்து சேர்ந்தான் நளன்! தமயந்தியைக் கண்டான்.

எதிர்பாராத நேரத்தில், நளன் வந்து நின்றதைக் கண்ட தமயந்தி திடுக்கிட்டு நின்றாளாயினும், முகம்மலர கைகூப்பி 'வரவேண்டும்' என்று கூறினாள்.

"ஆம் வந்தேன், தூதுவனாக!" என்றான் நளன்!

தமயந்தி மருட்சியுடன் "தூதுவனாகவா? யாருக்கு..." என்று கேட்டாள்.

"வீமராஜனுடைய திருக்குமாரியை வேட்கும் பேராவலில், இந்திரனும், வருணனும், வாயுவும், எமதருமனும் சுயம்வரத்திற்கு வந்திருக்கிறார்கள்! நால்வரில் யாருக்கு மாலையிட விருப்பமோ இட்டு, தேவருலகத்து சுகானுபவங்களைப் பெறலாம் என்பதை ராஜகுமாரியிடம் என்மூலமாகத் தெரிவிக்கிறார்கள்" என்றான் தெளிவான குரலில்.

தமயந்தியின் பார்வை நளனுடைய சொற்பெருக்கை தடைசெய்து விட்டது! நீர்பொங்கிய கண்களால் ஏறிட்டு நோக்கி "மன்னர் மன்னவா, விதர்ப்ப குமாரியை மணக்க, நிடதநாட்டரசருக்கு மனமில்லாவிடில் கன்னியாகவே காலம் கழித்துவிடத் தெரியும்! ஆனால், தேவராஜனை மணந்து கொள்ளும்படி யோசனைகூறி என் மனதை ஆழம் பார்க்க வேண்டாமே!" என்றாள்.



துக்கமும், ரோசமும் அவளுடைய அகமகிழ்ச்சியை அடித்து வீழ்த்திய வேகத்தில் படபடத்த குரலில் வார்த்தைகளைச் சிந்திவிட்டு நிற்கமாட்டாது துவண்டு தள்ளாடினாள் அந்த நேரிழையாள்!

கொஞ்சும் குரலிலே இனிமை குலவ இழைய "இனியவளே உன்னைச் சோதிக்கும் உத்தேசமன்று. நீ தேவர்கள் யாரையாவது வரித்து மணந்திருப்பாயானால், நான் நாடு திரும்பி யிருக்கமாட்டேன்! உயிரும் அதிக நாள் உடலில் நிலைத்திராது! அன்பின் ஆழத்தையும், அருமையையும், நேர்மையையும் அறியத்தெரியாத தேவர்கள், என்னையே உன்னிடம் தூது அனுப்பினார்கள் பாவம்! நிடத நாடும், அதனுடைய அரசனும் உனது ஆணைக்கு..."

கன்னிமாடத்திலே எழுந்த ஆளரவம் மன்னனை மேற்கொண்டு பேசவியலாது திரும்பச் செய்தது! திரும்பி வந்த நளன் தமயந்தியிடம் செய்தி கூறிவிட்டதாக அறிவித்தான்.

சுயம்வரத்திற்கான நேரம் நெருங்கியது. அலங்காரம் செய்யப்பட்ட மண்டபத்தில், அரசர்களனைவரும் ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள். தேவர்கள் நால்வரும் நளனுடைய உருவில்—தமயந்தியின் கண்களுக்கு மட்டும் காணுமாறு—அமர்ந்திருந்தார்கள்.

குறிப்பிட்ட நேரத்தில் முன்னும் பின்னும் தாதியர் உடன் வர, பொற்சிலம்புகள் ஒலிக்க, உடுத்திருந்த பீதாம்பர ஆடை சலசலக்க, மாலையேந்திய கையுடன் அலங்காரவல்லியாக மண்டபத்திற்குள் அடியெடுத்து வைத்து நடைபயின்றாள் தமயந்தி!

நடுவே நின்று நின்று நாற்புறமும் பார்வையை ஓட்டினாள்—நளனைக் கண்டு கொள்ள! நளனுடைய உருவில் நால்வரும், அசல் நளன் ஒருவன்—ஆக ஐந்து நள மகாராஜர்கள் வீற்றிருந்ததைக் கண்டு திடுக்கிட்டாள்! ஆயினும் இது தேவர்களுடைய சூது என்பதை ஊகித்துக்கொண்டு, கணநேரம் கண்களை மூடி யோசனை செய்தாள். 'மெய்ம்மையும், செம்மையும் கொண்டு கோலோச்சும் வீமராஜனுடைய

பெண் பத்தினிப் பெண்' என்பது உண்மையானால் அன்னம் வந்துசொல்லி நான் வரித்த கணவனைக் காட்டுவாய் வெல்விழியே.' என்று உள்ளூர சிந்தித்து மெல்ல விழிகளை மலர்த்தினாள்!

நளனுடைய உருவில் அமர்ந்திருந்த ஐவரில் ஒருவனுடைய கண்கள் இமைத்தன! அடிகள் நிலத்தில் தோய்ந்தன. அணிந்திருந்த மலர்மாலை சற்றே வாடியிருந்ததும் கண்டு. இவனே நாம் வரித்த நளமகாராஜன்! ஆம்! தேவர்களுக்குக் கண்கள் இமைகொட்டுவதில்லை, அடிகளும் நிலத்தைத் தீண்டாதன்றோ எனத்தேர்ந்து, சரசரவென்று நடந்தாள். நளமகா சக்கரவர்த்தியின் கழுத்தில் மாலையை அணிவித்து வணங்கினாள் வீமனுடைய செல்வி! உடனேயே தேவர்களிருந்த பக்கம் திரும்பி, கைகுவித்து சிரம் வணங்கி "நான் மானிடப்பெண். மானிடனை மணப்பதே முறை. தேவர்களாகிய நீங்களெல்லாம் என்னை ஆசீர்வதிக்க வேண்டும்' என்று பணிவுடன் வேண்டினாள்.

தேவர்களின் அவல ஆசை நீர் தெளித்த நெருப்பைப் போல அந்தக்கணமே அவிந்தது, நியாயம் புலனாகியது! நால்வரும் மனதார மணமக்களுக்கு ஆசிநல்கித் தத்தம் இருப்பிடங்களுக்குப் புறப்பட்டார்கள்.

பாதிவழி வந்த பிறகு, மூவரையும், தேவர் மானிடரை வரையும் பிடித்தாட்ட வல்ல வல்லமை பெற்ற சனி பகவான் (ஒருகால் சற்று ஊனமாதலால்) விந்தி விந்திக் கொண்டு வேகமாக வருவதைக் கண்டு இந்திரன் அவரைப் பற்றி நிறுத்தி, "ஓய் எங்கே இவ்வளவு அவசரப் புறப்பாடு?" என்று கேட்டான்.

"அட! அழகிகளில் முதன்மை பெற்ற வீமராஜகுமாரிக்கு இன்று சுயம்வரம் அப்பா! இது கூடத் தெரியாமல், நீ என்ன தேவராஜன், என்ன லோக பரிபாலனம் செய்கிறாயென்று தெரியவில்லை" என்றார் சனீஸ்வரன். எடுப்பாக!

நால்வரும் சேர்ந்து கலகலவென்று நகைத்ததைக் கண்டு கோபத்துடன், "இந்திரா, நீங்கள் நகைப்பதற்கு அர்த்தம்



தெரிகிறது எனக்கு. ஏதோ கால் சற்று ஊனம் என்பதற்காக என் சக்திகூட மங்கிவிடுமா, கேட்கிறேன்? படைத்து, காத்து, அழிக்கும் மூர்த்திகளிலிருந்து மானிடர் வரையில் பிடித்து ஆட்டி அலைக்கழிக்கவும், அருள் புரியவும் சக்தி பெற்ற என்னைப் புறக்கணித்து விடுவாளா அவள்?" என்றார்.

"பகவானே சற்று நில்லும்! அந்தப் பெண் பூவுலகத் தரசனை நளனை வரித்து மாலையிட்டு மணந்து கொண்டாயிற்று! எல்லாம் முடிந்த பிறகு போகிறீரே என்றுதான் எங்களுக்குச் சிரிப்பு வந்தது..."

"என்னது இதற்குள்ளாகவா?"

"ஆம்—"

"தேவர்களாகிய நாங்கள்கூட அவள் மீதுள்ள ஆசையால் மணந்து கொள்ளவே சென்றோம். தேவர்கள் என்பதைச் சொல்லி ஆசைகாட்டிப் பார்த்தோம். நளனை அவள் விரும்புவதாக அறிந்து—அவன் உருவிலேயே அவனருகில் அமர்ந்தும் எல்லாம் பயனற்றுப் போயின! அந்த மானுடப் பெண் நளனுக்கே மாலையிட்டு மணாளனாக்கிக் கொண்டு எங்களை வணங்கி ஆசிகேட்டுப் பெற்றுக் கொண்டாள். நாங்கள் தேவர்கள் என்பதை எப்படியோ தெரிந்து கொண்டு!"

சனீஸ்வரனுக்குக் கோபம் பொங்கியது. நளனையும் தமயந்தியையும் பழிவாங்க மனதில் உறுதி கொண்டார்.

வீமராஜன் மணவினையைக் கோலாகலமாக நடத்தி, சீதனம் கொடுத்து, பெண்ணையும் மணப்பிள்ளையையும் நிடதநாட்டுக்கு அனுப்பிக் கொடுத்துவிட்டு, சக்கரவர்த்தியான நளனை மாப்பிள்ளையாக அடைந்த ஆனந்தத்தில் திளைத்துக்கொண்டிருந்தான்.

நிடதநாட்டுக்குப் புறப்பட்ட ராஜதம்பதிகளுடன் சனிபகவானும் பயணமானான்! நளனுடைய நிழலிலேயே ஒளித்துக்கொண்டு அவனைத் தொடர்ந்து தருணம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் பனிரெண்டாண்டுகள்!

இந்த பனிரெண்டாண்டுகளுக்கிடையில் தமயந்தி இரு ஆண்குழந்தைகளுக்குத் தாயானாள்! நீதி, நெறி, தவறாது அரசாட்சி செய்யும் மேன்மைகண்டு, சனீஸ்வரனுக்கு சில சமயம் 'ஐயோ பாவம், இப்படிப்பட்ட நற்குண சீலர்களான இவர்களைப்பற்றித் துன்புறுத்த மனம் ஒப்பவில்லையே! ஆனால் தேவர்களின் முன் நான் அன்று பூண்ட சபதம் என்னாவது? குற்றம் காணாது தீண்டினால் தேவர்கள் என்னை இலகுவில் விட்டுவிடுவார்களா?' என்று தோன்றும்

இவ்விதம் பற்ற வகையின்றி, விடவும் மனமின்றி சனீஸ்வரன் தத்தளித்த சமயமே நளனுடைய போதாதகால ஆரம்பமாக இருந்தது! சாப்பிட்ட கை அலம்பிவிட்டு, கால்களைக் கழுவும் சமயம், குதிகாலில் ஒரு புளியம் இலை ஒட்டியிருந்ததால் அந்த இடம் நனையாத குற்றத்தை ஆதாரமாகக் கொண்டு, 'மங்குசனி' தசையில் நளனைப் பற்றினான் சனிபகவான்!

அதே சமயத்தில், நளச்சக்கரவர்த்திக்கு கப்பம்செலுத்தும் சிற்றரசன் புஷ்கரனையும் பற்றினான் பொங்குசனி தசையாக! இருவரையும் பிணைத்துவிட்டான் வினைபற்றிக்கொள்ள! சூதாட்டத்திலே மிதமிஞ்சிய ஆவல்கொண்ட நளனை, பொழுது போக்குக்காகவே விளையாட அழைத்தான் புஷ்கரன்! "இதோ'' என்று ஆட உட்கார்ந்து விட்டான் நளன்! புஷ்கரனுடைய சனி பொங்குசனி அல்லவா? ஆட்டத்தில் தோற்ற நளனுடைய நாடு, நகரம், பொருள், புஷ்கரனைச் சேர்ந்து விட்டது.

வாடிய முகத்திலே வறட்டுப் புன்னகை நெளிய ''புஷ்கரனுடன் சூதாடியதில், நாடு, நகர், பொருள்யாவும் தோற்று விட்டேன் தமயந்தி! இந்த வினாடியிலிருந்து இந்த ராஜ்யம், அரண்மனை யாவும் அவனுடையது! சிற்றரசனுடைய ஈகையில் நான் வாழவிரும்பவில்லை! ஆதலால் நீ நமது குழந்தைகளுடன் குண்டினபுரம் சென்று தாய் வீட்டில் சிலகாலம் இரு'' என்றான்.

நெஞ்சிலே வேலைப்பாய்ச்சிவிட்ட உயிர்த்துடிப்புடன் வீரிட்டுக்கொண்டு அவனது அடிகளில் விழுந்தாள் தமயந்தி



''அரசே,'' என்று கேவினாள்—அவனது அடிகளைப் பற்றிக்கொண்டு.

''நான் அரசனன்று, தேவி!''

''ஆம், அரசரன்று, சக்கரவர்த்தி. என்னை ஆட்கொண்ட தெய்வம்! நொடிப் பொழுதும் தங்களைப் பிரிந்திருக்க என்னால் முடியாது. மக்களை வேண்டுமாயின் என் தோழியுடன் குண்டினபுரத்துக்கு அனுப்பிவிட்டு நாமிருவரும் வெளியேறுவோம்!''

''அவலமான யோசனை! காட்டு வழியிலே கல்லிலும், முள்ளிலும் நடந்துபோக உன்னால் முடியுமா தமயந்தி? அந்தக் கஷ்டத்தை உன் மென்னுடல் ஒருநாள்கூடத் தாங்காது... சொல்வதைக் கேள்...''

''இச்சமயம் நான் சொல்வதை தாங்கள் கேளுங்கள்!'' தாங்கள் என்னைப் பிரிந்து சென்றால், என் உடலை விட்டு உயிரும் பிரிந்து சென்றுவிடும். ராஜ போகம், சௌக்யம், அரண்மனை வாசம் ஒன்றும் தேவையில்லை. தங்களை இமைப்பொழுதும் பிரியாத வாழ்வு ஒன்றே என் உயிரை நிரப்பிவிடும்'' என்று கூறிவிட்டு எழுந்தாள். தோழி மோகன மாலையை விளித்து குலக்கொழுந்துகளான மதலைகளை அழைத்து வரச்செய்து, உச்சி முகர்ந்து முத்தமிட்டு மோகனமாலையிடம் ஒப்புவித்து, விதர்ப்ப நாட்டுக்கு— தந்தைக்கு அனுப்ப வேண்டிய செய்தியையும் காதோடு கூறி அவர்களை அனுப்பி வைத்தான்!

கணவனுக்கு முன்பு தானே புறப்படுவதற்கான ஆயத்தத்தோடு எதிரே நின்று ''அரசர்க்கரசே! குழந்தைகளை அனுப்பியாகிவிட்டது. பிறனுடைய இல்லத்தில் இனியும் தாமதிப்பது தகாது; எழுந்திருங்கள்,'' என்றாள். சிந்தனையிலாழ்ந்து தன்னை மறந்திருந்த நளனை கைபற்றி எழுப்பினாள். தோட்டவாயிலின் வழியாக இருவரும் வெளியேறி அடுத்திருந்த காட்டை நோக்கிச் சென்றார்கள். அவர்களோடு கூடவே சென்றான் சனிபகவான். பற்றியாகிவிட்டது.- இனி ஆட்டவேண்டியதுதானே அடுத்தது என்ற சிந்தனையி

விறங்கினான்! உடுத்த ஆடையைப் பறித்தால் என்ன;.... சே! கூடாது பாவம் என்ற நினைப்பு எழவே அதை மிதித்துக் கொண்டு நிமிர்ந்தது குரோதம்! பாவமாவது! புண்ணியமாவது! பனிரெண்டு ஆண்டுகள் காத்துக் கிடந்த நான் மட்டும் பாவமில்லையோ? ஆகிவராத காலத்தில் மனிதன் ஆடையைப் பறிகொடுப்பதே சரி! அதை எப்படி பறிப்பதாம்? மின்னல் வேகத்தில் யோசனைகள் பாய்ந்து பளிச்சிட்டன நெஞ்சில்!

அன்னப்புள்ளைத் தன்னோடு அழைத்துவர மறந்து விட்டாளே—இந்த அழகரசி; அதே அன்னப்பறவையாக நான் மேலே பறந்தால் அதைப்பிடித்துத் தரச்சொல்லி கணவனை இறைஞ்சுவாள்! என்னைப் பிடிக்கும் முயற்சியில் தனது ஆடையை வீசிப்பிடிக்கும்போது அதையும் இழுத்துக் கொண்டு மேலே பறந்து விட்டால் ஆயிற்று.

முடிவு செய்தபடியே அன்னப் பறவையாக உருவெடுத்து கைக்கெட்டும் உயரத்தில் பறந்தான் சனீஸ்வரன்!

உயிரினுமினிய பத்தினி ஆசைபெற விழித்து அதிசயிக்கும் அன்னப்புள்ளை ஆணழகனும் கண்டான்! அதைப் பிடித்துத்தருமாறு கணவனைக் கண்களால் கெஞ்சினாள் அணங்கு!

கையை நீட்டினான் நளன்! அதன் உத்தேசம் வேறல்லவா? அதனால் சற்று உயரப் பறந்தது!

“ஆஹா! என்ன அழகு பார்த்தீர்களா? பிடிக்கப்போக உயரப் போய்விட்டதே” என்று கைகளைப் பிசைந்தாள் அந்தப் பேதை!

“இதற்காக ஏன் கவலை தமயந்தி! இதோ பிடித்துத் தருகிறேன். உனது ஆடைத் தலைப்பைச் சற்று இப்படிக் கொடு. அதைச் சுற்றிக்கொண்டு என் ஆடையை வீசிப் போட்டுப் பிடித்து விடலாம்,” என்றான் நளன்!

தலைப்பைக் கொடுத்தாள் அரசி!



தலைப்பைச் சுற்றிக்கொண்டு, அரையாடையை நெகிழ விட்டு எடுத்து ஒரு தலைப்பைச் சுற்றி அன்னப்புள்ளைக் குறிவைத்துச் சுழற்றி வீசினான்!

அன்னத்தின் கழுத்தில் மாலையாக விழுந்தது ஆடை!” நளன் கையிலிருந்த மறு தலைப்பைச் சுண்டி இழுத்துக் கொண்டு வானவெளியில் மாயமாகப் பறந்துவிட்டது அன்னப்பறவை!

நளன் பறவையின் சாகசத்தைக் கண்டு வியப்பில் மூழ்கித் தன்னை மறந்தான்! தமயந்தியோ பொறிகலங்கியவளாக அன்னம் மறைந்த திசையையே பார்த்துக் கொண்டு வெறித்த பார்வையுடன் நின்றாள்!

நினைவுற்ற நளன், தமயந்தியின் தோளைப்பற்றி, “ஆயாசப்படாதே கண்மணி. போகிறதுபோ. வா போவோம்,” என்று அவளைத் திருப்பி நடத்த முயன்றான்!

“பாவியேனுடைய ஆசையாலல்லவோ தாங்கள் ஆடையை இழக்க நேர்ந்தது!” என்று விசித்தழுதாள் தமயந்தி. அவளைச் சமாதானம் செய்து அழைத்துக்கொண்டு வழிநடந்தான் நளன். பகலெல்லாம் நடை, தண்ணீர் கண்டவிடத்துநீராடி, ஈர ஆடை உடலிலே உலர காயும், கனியும் கண்டவிடத்து பறித்துத் தின்றுகொண்டே சென்றார்கள்.

ஒருவருடைய முகம் மற்றவருக்கு தெரியாதபடியிருட்டு. சுவர்க்கோழிகளும், சில்வண்டுகளும் கீச்சிட ஆரம்பித்து விட்டன. மண்டபத்தின் முன்புற வாசலிலிருந்த பெரிய மரப்பொந்திலிருந்து ஆந்தைகள் வேறு அலறின.

பயத்தால் உடல் நடுங்கும் தமயந்தியைப் பச்சாதாபத்தோடு வருடிக்கொண்டே “அன்பே, நான் அருகிலிருக்கும் போது என்ன பயம் உனக்கு? சற்று தூங்கினாயானால் காலையில் வழிநடக்க தெம்பு இருக்கும்” என்று புத்தி புகட்டி, தனது கையை மடித்து மனையாளுக்கு தலையணையாகக் கொடுத்தான் நளன்.

படுத்த சற்று நேரத்திற்குள்ளேயே களைப்பு மேலிட்டால் அயர்ந்து உறங்கிவிட்டாள் தமயந்தி. நளனுக்கு தூக்கம் வரவில்லை! சிந்தனைகள் நெஞ்சைப் புழுவாகத் துளைத்தன.

'யாருக்கு என்ன அநீதி செய்தேனோ? அந்த வினை என் மட்டும் தொடரட்டும். என் குலச் செல்வங்கள் தாயற்ற குழந்தைகளாகக்கூடாது! பாவியான நான், அவர்களுடைய நாட்டை, ராஜரீகத்தைத் தொலைத்து, அவர்களைப் பாட்டன் வீட்டுச் சோற்றுக்கு அனுப்பிய தோஷத்தோடு நிற்கட்டும்! நாம் செய்த முடிவுப்படி துணிந்து இவளைப் பிரிந்து செல்வதே சரி. விழித்திருக்கையில் அவளைப் பிரிய முடியாது. இப்போதே போய் விடுவது தான் நல்லது. உறக்கம் கலைந்ததும் நம்மைக் காணாததால்—குண்டின புரத்துக்குத் தன்னால் போய்ச் சேர்ந்து விடுவாள்! இனியும் அவளை இம்சைக்குள்ளாக்காமல் தந்தையிடம் சேர வழி செய்து விடுகிறேன். வயதான காலத்தில் வீமராஜனுக்கும்தான் எவ்வளவு கவலைக்கு இடம் வைத்துவிட்டேன்! இவ்வளவுக்கும் அடித்தளமாக இருந்தது சூதாட்ட மோகமல்லவா? சரி, நாழியாகிறது. புறப்படுவோம்' என்று மனதைப் பற்றற்றதாக்கிக் கொண்டு மெல்ல தனது கைமீதிருந்த அவளது தலையைக் கீழே நகர்த்திவிட்டு எழுந்தான்; ஆடை இழுபட்டது!

அடகஷ்டமே! இதுவொரு இடையூறு! கிழித்தால், சத்தம் கேட்டு விழித்துக்கொண்டு விடுவாளே! என்ன செய்வேன்? என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

சனி சும்மா இருப்பானா? கத்தியாக மாறி கைக்கெட்டும் படியான தொலைவில் பளபளத்தான்! மட்டில்லா மகிழ்வுடன் அதை எட்டி யெடுத்துக்கொண்டு தடவிப் பார்த்தான்! எங்களைப் பிரிப்பதில் ஆண்டவனுக்குச் சர்வ சம்மதம் போலிருக்கிறது! கத்தியைக் காண்பித்து உதவி செய்கிறானே — இந்த பாழ் மண்டபத்திலே! என்று வேதனையின் நடுவில் சிரிப்பும் வந்தது அவனுக்கு! எடுத்து ஆடையைத் துண்டித்தான். தன்னுடலை இருகூறாகக் கிழித்துக்கொள்வது போன்ற துடிப்பு ஏற்பட்டது அவனுக்கு!

711 N62 104087



சனி செய்த உதவியை, ஆண்டவன் செய்ததாகக் கருதிக்கொண்டு இடத்தைவிட்டு எழுந்தான். [illegible] கொண்டு மெல்லிய குரலில், "அன்பே, பாவியான இந்த நளன், உனது கற்பையே காவலாக நியமித்துவிட்டு, இந்த இரவினிறுதியில் உன்னைப் பிரிந்து போகிறேன்! வன தேவதைகளே, திசைக் காவலர்களான தேவர்களே, அனைவருக்கும் சொல்லுகிறேன், என் பத்தினியைப் பாதுகாத்து அவளை அவளது தந்தையிடம் சேர்ப்பது உங்கள் கடன். தமயந்தி, நற்காலமிருப்பின் நாம் மீண்டும் சேர்வோம்" என்று தனக்குள் குமுறியவாறு [illegible] டம் பிடித்தான் நளன்!

விடியற் காலையில் வீசும் 'சில்'லென்ற காற்று மேலே படவும் கண்விழித்த தமயந்தி அருகில் கணவனைக் காணாது, புரண்டு படுத்திருக்கிறானோ என்று எட்டி தடவிப்பார்த்தாள். இல்லை! திடுக்கிட்டெழுந்து சுற்று முற்றும் பார்த்தாள். காணவில்லை! கூவியழைத்தாள். பதிலில்லை! ஓடி ஓடித் தேடினாள். ஒளிந்து விளையாடுகிறாரோ — துக்கத்திற்கு மாற்றுச் சுவையாக — என்று மறைவிடங்களை யெல்லாம் ஒன்றுவிடாது சோதனையிட்டாள் பேதை!

புலம்பி அழுதுகொண்டே திசைகள்தோறும் பாய்ந்தோடினாள். "ஐயோ, குண்டின புரத்துச் சாலையை மட்டும் காண்பித்தது இதற்குத்தானா? பிரபுவே, நானிழைத்த பிழைதானென்ன? தூக்கம் என்னை மோசம் செய்துவிட்டதே? இந்தக் காட்டு நடுவில் என்னைப் பிரிய எப்படி மனம் வந்தது தங்களுக்கு?" என்று கதறியழுதுகொண்டே குண்டின புரம் கொண்டுவிடும் சாலையைத்தேடி நடந்தாள், ஓடினாள் அநாதையாக!

மரக் கிளையிலமர்ந்திருந்த ஜோடிப் புறாக்களை ஒரே அம்பில் கட்டு வீழ்த்தக் குறிபார்த்துக்கொண்டு நின்ற வேடன் திடுக்கிட்டுத் திரும்பினான்! "யாரம்மே நீ? எங்கே போறே? காட்டு வழியிலே பொம்பிளைங்க தனிச்சு வரலாமா?" என்றான் மரியாதையாக.

"அப்பா, எனக்குக் குண்டின புரம். வெளியூர் வந்தேன். வழிதவறிவிட்டது. கேட்போமென்றால் யாரையும் காணோமே என்று தவித்துக்கொண்டே வந்தேன். நல்ல வேளையாக நீ அகப்பட்டாய்! குண்டினபுரம் போகும் சாலை எது அப்பா?" என்று விசாரித்தாள் குரல் நடுங்க.

வேடன் மனதில் விகாரமான எண்ணங்களை—தீய செய்கைகளைத் தூண்டும் துர்ச்சிந்தனைகள் தலையெடுத்தன. பிதற்ற ஆரம்பித்தான் அவன்!

நடுநடுங்கினாள் தமயந்தி. கையிரண்டும் குவித்து, "அப்பா, நான் மணமான பெண். உனக்குச் சகோதரி போல்," என்றாள் நல்ல வார்த்தையாக.

வேடன் விகாரமாக வெறித்துப் பார்த்தான்.

"சை! அன்னியப் பெண்களை இச்சித்தால் அழிந்து போவாய்! விலகி நில்," என்றாள் சினம் பொங்க.

பேச்சு வளர்ந்தது. நிலைமை அபாயத்தை எட்டும் சமயம், "அழி துராத்துமா!" என்று வேடனை எரி விழிகளுடன் கூர்ந்து நோக்கினாள். வெந்து நீரானான் வேடன்!

இன்னமும் சினம் தணியாத தமயந்தி, நெற்றியி லறைந்துகொண்டு "தெய்வமே, பீம் மகள் கண்டு காமுற என்ன பாவம் செய்தேன்?" என்று துக்கித்துக்கொண்டே எதிரே தெரிந்த வழியே ஏகினாள்!

அதருமத்தை அழித்துவிட்டு வழி நடந்தாள் பாவை! தனது மகிமையை நினைத்து பெருமைப் பட்டாளா? புளகமுற்றாளா, ஒன்றுமில்லை! தனது வினைப் பயனை நொந்தவாறு கால் நோவ நடந்தாள்!



## மக்களைக் கொன்றவனை மன்னித்தவன்

பாரதப் போர் நிகழ்ந்துகொண்டிருந்த சமயம். அன்று தேய்பிறையின் சதுர்த்தசி யாதலால் கருக் இருட்டு வையகத்தைக் கவிந்திருந்தது. குருக்ஷேத்திரத்துப் பாசறைகளில் 'மினுக்கு மினுக்'கென்று விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

எண்ணங்கள் மனதைத் துளைத்தெடுக்க, மூடிய கண்களுடன் படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்த பாஞ்சாலி கண் விழித்துப் பார்த்தபோது விளக்கு அவிந்து இருள் சூழ்ந்திருக்கக் கண்டாள்!

ஏனோ தெரியவில்லை. அவிந்த விளக்கை மீண்டும் பொருத்தத் தோன்றாமலும், படுக்கையில் கிடை கொள்ளாமலும் எழுந்து தட்டித் தடவிக் கொண்டு பார்த்தனுடைய படுக்கையில், அவனது சமீபமாக வந்து அமர்ந்தாள். அவளது கை பட்டதுமே, "யாரது! பாஞ்சாலியா!" என்றான் கலவரத்துடன். அவள் பேசவில்லை.

"நீயேனின்னும் உறங்கவில்லை? தூக்கம் வரவில்லையா?" என்று கேட்டான் அர்ஜுனன்.

பாஞ்சாலி சோர்ந்த குரலில், "தூக்கம் வராததோடு மட்டுமில்லை. இன்று காலையிலிருந்தே வயிற்றில் ஏதோ சங்கடம்; திகில் துக்கம் துக்கமாக வருகிறது. இதற்கெல்லாம் பொருள் ஏதாவது......ஐயையோ, என்ன கூச்சல் அது! ஆ! நம் குழந்தைகளின் குரலாகவல்லவோ இருக்கிறது?" என்று கூவிக்கொண்டே தனது புதல்வர்கள் படுத்திருந்த இடத்தை நோக்கி, இடறிவிழுந்து, எழுந்து ஓடினாள் பாஞ்சாலி.

அர்ஜுனன் எழுந்து தீவத்தியைத் தேடி ஏற்றிக்கொண்டு அங்கே வந்ததும், விளக்கு வெளிச்சத்தில் குழந்தை

களின் தலைகள் சீவப்பட்டுக் கிடந்ததைக் கண்டு பாஞ்சாலி அலறினாள்.

எட்டத்திலிருந்து 'கலகல'வென்று சிரிப்பொலி மிதந்து வருவதைச் செவியுற்ற பாஞ்சாலி, அர்ஜுனன் இருவருமே அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தனர்.

அதே கணத்தில், அடுத்த பாசறையிலிருந்து, "அடபாவி, பிராம்மணாதமனே, இதோ வந்து விட்டோம்," என்று கூச்சலிட்டபடி சுபத்திரை வெளிப்பட்டு ஓடுவதைக் கண்டான்.

"ஆ! ஆசானின் தவமகனாகிய அசுவத்தாமா! பேடி!" என்றிகழ்ந்தவாறு கையிலிருந்த தீவத்தியை நழுவவிட்டு சுபத்திரை திருப்பிக்கொண்டு வந்த ரதத்தில் பாய்ந்து ஏறினான் அர்ஜுனன்.

வாயுவேக, மனோவேகமாக ரதத்தை ஓட்டி அசுவத்தாமாவைத் தொடர்ந்தாள் சுபத்திரை. அசுவத்தாமாவோ இருளின் உதவியால் எங்கெங்கோ பதுங்கி, வழிமாறிச் சென்று திருதராஷ்டிர மன்னனுடைய இருப்பிடம் சேரும் போது, முதுமையாலும் துக்கத்தாலும், பீதியாலும் உறக்கத்தையே இழந்துவிட்ட அக்கிழ மன்னன், காலடிச் சத்தம் கேட்டு "யார் அது, அசுவாத்தாமா?" என்று அழைத்தார்.

"ஆம்! பழி, இரத்தப் பழி தீர்த்துக் கொண்டு திரும்பிவிட்டேன்," என்றான் வெற்றிக் குரலில்.

"ஐயோ, இந்த நடுநிசியில் யாரைக் கொன்று விட்டாய்?"

"அதுதான், யாருடைய கர்வம்மிக்க சிரிப்பால் கௌரவ குலம் நாசமாகி விட்டதோ, அந்தப் பாவியின் புதல்வர்கள் தலைகளை என் கையாலேயே சீவி எறிந்து விட்டேன்."

அசுவத்தாமா முழுவதும் கூறு முன்பே, "அட துரோகி," என்று வீரிட்டலறி கீழே சாய்ந்தார் மன்னன் அடிபட்ட சிங்கம்போல.



தன் செயலுக்காக மன்னனிடமிருந்து பாராட்டுரை கிடைக்குமென்று நினைத்திருந்த அசுவத்தாமா கல்லாகச் சமைந்து நின்றான்!

"பொறைமகளே! பெற்ற மக்களை இழந்து விட்டாயம்மா! குழந்தைகளை—அதுவும் உறக்கத்திலிருக்கும் சமயம் அவர்களை மாய்க்கத் துணிந்துவிட்ட வஞ்சகனும், பேடியுமான இவன் கை கத்திக்கு இரை கொடுத்து விட்டாயா? ஏனின்னும் இந்தப் பூமி வெடிக்கவில்லை? ஐயோ, வம்ச நாசத்திற்காகவா பிள்ளைகளைப் பெற்றேன்? சந்திர குலத்திற்கு யாருமே மிஞ்சப் போவதில்லையா? பஞ்சவர்களே, இந்தப் பாவியைக் கொன்று வீழ்த்தமாட்டீர்களா?" என்று புலம்பி அழுதான் திருதராஷ்டிரன்.

"தெய்வமும், அரசரும், தந்தையும், ரட்சகனுமாகிய தேவே, பாஞ்சாலியின் மக்களை உறக்கத்தில் வதை செய்த பாவியைப் பிடித்துச் செல்கிறேன். மன்னியுங்கள் எந்தையே," என்று கம்பீரமாக ஒலித்த அர்ஜுனனது குரல் கேட்டதும் மன்னன் எழுந்துட்கார்ந்து, "பார்த்தா, நில். என் மகனே போகாதே. நான் தந்தையன்று, ரட்சகனுமன்று குலச்சத்துரு. என்னைக் கொன்று என் துயரைத் தீர்த்துவிட்டுப் போ" என்று கூவியிரங்குவதைக் கேட்ட காவலாளி, அர்ஜுனனுடைய ரதம் சென்றுவிட்டதை உணர்த்தினான்.

குற்றுயிருடனிருந்த மன்னன் அசைவற்றார். ரதத் தூணில் பிணித்து வைத்திருக்கும் அசுவத்தாமாவைக் கொடும் சொற்களால் நிந்தித்தவாறு தனது பாசறைக்கு நேராக சுபத்திரை ரதத்தைக் கொணர்ந்து நிறுத்தியதும், அசுவத்தாமாவை விடுவித்தழைத்துக் கொண்டு பாசறையில் புகுந்தான் பார்த்தன்.

உதிர வெள்ளத்தில், மிதக்கும் தனது குழந்தைகளையும், இடியை ஈர்த்துக்கொண்டு நிற்கும் காந்தக்கோல்போல் ஸ்தம்பித்து நின்ற பாஞ்சாலியையும் கண்டு விஜயனுடைய மனம் குமுறியது! ஆத்திரத்தோடு அசுவத்தாமாவின் குடுமியைப் பிடித்திழுத்துக்கொண்டுபோய் பாஞ்சாலியின்முன் நிறுத்தினான்.

பெற்ற மக்கள் கண்டதுண்டமாக வெட்டுண்டு கிடப்பதை வெறித்த பார்வையுடன் பார்த்துக்கொண்டிருந்த பாஞ்சாலிக்கு கிருஷ்ணபரமாத்மா ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார். அசுவத்தாமனுடன் பார்த்தன் வந்து நின்றதும் ''திரௌபதி, இதோபார். இவனே உன் குழந்தைகளைக் கொன்ற பாதகன். பார்த்தனால் சிறைபிடிக்கப்பட்டு உன் முன் நிற்பதைப் பார்.'' என்றார்.

பார்வையைத் திருப்பினாள் திரௌபதி. ''ஆ! ஆசாரிய புத்திரரா! அடடா! பிராணபதி, விடுங்கள் அவரை, என்ன பாபம் செய்தோ உறக்கத்தில் கொலையுண்ட குழந்தைகளை கண்டு வயிறெரிகிறோம். இந்த அபசாரத்தை வேறு ஏற்று வந்தீர்களா? என்ன காரியம் செய்து விட்டீர்கள்!'' என்று கேட்டாள்.

''புத்திர சோகத்தால் பாஞ்சாலி புத்திசுவாதீனம் இழந்து விட்டாள்! பரந்தாமா, இவையெல்லாம் கூட உனது திருவிளையாடல்களா!'' என்று கதறியழுதாள் சுபத்திரை.

திரௌபதி, பெரிதாக நகைத்தாள்! பிறகு சொன்னாள்: ''சுபத்திரை, இதெல்லாம் விதியின் விளையாட்டுகள்! குழந்தைகள் மாண்டதற்கு யாரும் காரணமன்று! விடுங்கள் அவரை.''

''ஓஹோ, புத்திசுவாதீனத்தோடுதான் கொலை பாதகனைக்கண்டு இரங்கி, மரியாதை கொடுக்கிறாயா?'' என்று சீறினான் அர்ஜுனன்.

''பிராணேசுவரா, மக்களுடைய மரணத்தால் பாசம் மடிந்துவிட்டது! ஞானமடைந்து விட்டேன். இனி யாருடைய கோபமோ, சந்தோஷமோ, சாபமோ, ஆசிகளோ என்னை ஒன்றும் செய்ய முடியாது! அசுவத்தாமா நமது குருவின் புத்திரர். நம்மெல்லோராலும் போற்றத் தக்கவர். அவர்மீது குற்றமேயில்லை! உப்பைச் சுவைத்த கடமைக்கு பாடுபட்ட மகான். உலகத்துப் பொல்லாப்பையும் பழிபாவங்களையும் ஏற்கவேண்டிய பயங்கரத்தைத் துளியும் பொருட்படுத்தாமல், சோற்றுக்குச் செலுத்த வேண்



டிய கடனை நிறைவேற்றியவர். வேதமோதிய விப்பிரன். தங்களுடைய தோழமைக்குத் தக்க பாத்திரம். அவரை ரதத்தில் பிணைத்து ஊரறிய அவமானம் செய்ததில் நாம் பெற்ற லாபம் பாபம்தான்.

''சிறந்த அந்தணரே, மகா அபராதம் இழைத்து விட்டோம். உம்மிடம் மன்னிப்புக் கேட்பதில் அர்த்தமில்லை. உபயோகமுமில்லை! செய்கைகளின் பயனை எய்தவே இந்தப் பிறவி. அழிவும், பிறப்பும் ஆடையாக அணிந்து கழற்றும் ஆன்ம தத்துவமுணர்ந்த பெரியோரே, மனதை சாந்திசெய்து கொள்ளுங்கள். என் மக்களை நான் இழந்தது எனது கர்ம வினை. அந்தணரே, க்ஷேமமாகப் போய் வாரும். நடப்பவை யாவும் காலச் சுழலின் விளைவு'' என்று கூறி, வெற்றுவெளியில் பார்வையைத் திருப்பி விட்ட பாஞ்சாலியை மயிர்க்கூச்செரியப் பார்த்துக் கொண்டு நின்றான் விஜயன்.

வாசுதேவனான கிருஷ்ண பகவானோ, எங்கோ பார்வையைச் செலுத்தி நின்ற திரௌபதியின் பக்கம் திரும்பி கையிரண்டும் குவித்து வணங்கினார். மூடிய அவரது கண் இதழ்களிலிருந்து இரண்டு நீர் முத்துக்கள் கீழே சிந்தின!

தன் குழந்தைகளைக் கொன்ற கிராதகனைக் கண்ணெதிரில் கண்டும், தனது நிதான புத்தியினால், விவேகத்தினால் செய்கையின் காரண காரியத்தையும், அதன் விளைவையும் தீர்க்காலோசனை செய்து மகத்தான புத்திர சோகத்தையும் பொறுத்துக்கொண்டு, எதிரிக்கு மனச்சாந்தியையும் உண்டுபண்ணிய பாரதநாட்டுப் பெண்ணின் மேன்மைக்கு எதை ஈடு சொல்ல முடியும்?

சோகம் மண்டிக் கிடந்த அந்த சமயத்திலும், அவளது தைரியம் குலையவில்லை. நுண்ணறிவும், நிதானமும் சிதறவில்லை!

அந்த மகாசக்தியின்முன், பகைவனையும் கௌரவிக்கும் பண்பாடுமிக்க, கருணையின் உறைவிடமான பெண்மையின் முன்—உலகம் காக்கும் உத்தமனாகிய பரந்தாமனே அஞ்சலி செய்து ஆனந்தக் கண்ணீர் உகுத்தார் அன்று!

பாரதப் பெண்

## சத்திய ஒளி காத்த சந்திரமதி

பெண் சக்திக்குப் பெருமைதரப் பிறந்த மாதர் மணிகளில் சந்திரமதி ஒருத்தி!

பிள்ளைப்பேறின்றி வருத்தமுற்று விரதம் காத்த சந்திரகுல மன்னனுக்குத் தெய்வ வாக்கொன்று பிறந்தது! “மன்னனே, விரைவில் உனக்குப் பெண் குழந்தை ஒன்று பிறக்கும். அக்குழந்தை பிறக்கும்போதே மங்கல நாணுடன் தான் பிறப்பாள். அந்த மங்கலம் எந்த ஆடவன் கண்களுக்குப் புலப்படுமோ, அவனே அக்கன்னியின் மணாளன்” என்றது அசரீரி.

மன்னனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலும், வருத்தமும் ஒருபுறம் எழுந்தது! மாங்கல்யத்தோடு பிறப்பதாவது என்று அதிசயித்தான். உரிய காலத்தில், பிறந்தாள் குழந்தை. ஆவலுடன் குழந்தையின் கழுத்தைப் பார்த்தாள் தாய்!

வெறும் கழுத்து! அப்பாடா என்று பெருமூச்சுவிட்டாள் ஈன்றவள்! மன்னனும் கவலை நீங்கப் பெற்றான்! அருமை, பெருமையுடன் வளர்ந்து, அருங்குணங்களின் விளைநிலமாய்த் திகழ்ந்தாள் சந்திரமதி!

மணப்பருவ மெய்தியதும் ‘சுயம்வரம்’ வைத்தான் அரசன் அக்கால மரபின்படி. மன்னர்கள் அனைவருக்கும் அழைப்பு அனுப்பினான். மண்டபம் நிறைய அமைத்திருந்த ஆசனங்களில், அலங்காரச் சிறப்புகளுடன் அரசர்களனைவரும் வந்து அமர்ந்திருந்தார்கள்.

மாலையும் கையுமாக, சேடிமார் மன்னர்களுடைய நாடு, நகர், செல்வச் சிறப்பினை வருணித்துக்கொண்டே வர நகர்ந்துகொண்டேயிருந்தாள் சந்திரமதி.



சபையின் நடுநாயகமாக அமர்ந்திருந்த அரிச்சந்திரனை அணுகும் சமயம் மணப்பெண்ணை ஏறிட்டுப் பார்த்தான் அரிச்சந்திரன், எல்லா அரசர்களும் பார்த்தது போல!

மணப்பெண்ணின் கழுத்தில் பளிச்சென்று ஒளிர்ந்த மாங்கல்யத்தைக் கண்டதும் வெகுண்டெழுந்தான்!

“சபையோர்களே, மணமான பெண்ணுக்கு, மறுபடியும் ‘சுயம்வரம்’ வைத்து மணம் முடிக்கப் பார்க்கும் அதிசயத்தை எங்காவது கேட்டிருக்கிறீர்களா?” என்று கண்களை உருட்டி விழித்துக் கேட்டான் அரிச்சந்திரன்!

சபை மோனத்திலாழ்ந்தது! அரசர்களனைவரும் சந்திரமதியின் கழுத்தையும், அவளது தந்தையையும் மாறி மாறிப் பார்த்தார்கள்! உண்மைக்கும், நேர்மைக்கும் நாயகனாக நின்ற சக்கரவர்த்தி அரிச்சந்திரனுடைய முகத்தில் கடுமை தெறித்தது! கண்கள் கோபத் தீயை உமிழ்ந்து பார்ப்பவரை நடுங்கச் செய்தன! உடலும், உள்ளமும் படபடக்க பேசமாட்டாதப் பேரானந்தக் கடலில் திளைத்துக் கொண்டிருந்த மன்னனை அனைவரும் வெறித்து நோக்கிய வண்ணம் சண்டைக்கு ஆயத்தமானார்கள்! ஏனெனில் யாருக் கும், எதுவும், புரியவில்லையல்லவா?

தமது குமாரியின் கழுத்திலிருந்த மங்கலம் யார் கண்ணிலாவது தென்பட்டாக வேண்டுமே, என்று எண்ணிக்கொண்டிருந்த மன்னன், அரசர்க்கரசனான சக்கரவர்த்தி, சூரியகுல திலகனான அரிச்சந்திரன் கண்களிலே தென்பட்ட தன் குமாரியின் அதிருஷ்டத்தை நினைத்து, மனம் பூரித்தார்!

மெதுவாக எழுந்து, அசரீரியின் வாக்கை எடுத்துச் சொன்னார்! அரசர்களனைவரும் இருந்து மணவினையைச் சிறப்பாக நடத்திக்கொடுக்கவேண்டும் என்று பணிவுடனும் அன்புடனும் கேட்டுக்கொண்டார்!

சகல வைபவங்களுடன் புதல்வியை அரிச்சந்திர மகாராஜனுக்கு மணம் செய்து கொடுத்து, ஏராளமான, சீர்

வரிசைகளுடன் மணமக்களை அனுப்பிவைத்தார்கள் சந்திரமதியின் பெற்றோர்கள்.

* * *

சொன்ன சொல் தவறாது, அற முறைப்படி அரசாண்டுவந்த அரிச்சந்திரனது புகழ் பாடிப் பரவ வென்றுதானோ என்னவோ, வானவருலகில், இந்திர சபையில், "மண்ணுலகில் சத்தியம் தவறாத மன்னர் எவரேனுமுண்டோ" என்று இந்திரன் வினவ, "இல்லை" என்று விசுவாமித்திரர் பதில் சொன்னார்.

அரிச்சந்திரனுடைய குல குருவாகிய வசிஷ்டர் இதைக் கேட்டுக்கொண்டு சும்மா இருப்பாரா? "வானம்பொய்த்தாலும் வாக்குப் பொய்க்காத உத்தமன் ஒருவன் இருக்கிறான் - சத்திய அரிச்சந்திரன் என்ற சூரிய குலத்தரசன்" என்றார் பளிச்சென்று.

"ஒரு பொய்கூடச் சொல்லாத மானிடன் எவனுமே கிடையாது பூவுலகில்," என்று சாதித்தார் விசுவாமித்திரர்.

"ஒரு பொய்கூடச் சொல்லாதது மட்டுமல்ல, சொன்ன சொல் காப்பாற்றுவதாலும்தான் சத்திய சந்தன் என்ற சிறப்புரை சேர்ந்திருக்கிறது அவன் பெயரோடு!" என்று வசிஷ்டர் அழுத்தமாகச் சொன்னார்!

வாக்குவாதம் முற்றியது! வசிஷ்ட, விசுவாமித்திரர்களுக்குள் எப்போதுமே 'காய்ச்சல்' தானே. அதனால் வாதம் முற்றித் தமக்குள் பந்தயம் வைத்துக்கொண்டார்கள்!

விசுவாமித்திரர் வசிஷ்டரை மடக்கச் சமயம் பார்த்துக் கொண்டே இருந்தவர். உற்சாகமாகப் புறப்பட்டார். அரிச்சந்திரனைக் காணும் நோக்கில்!

விசுவாமித்திரரால், கேட்கப்பட்ட செல்வக் குவியலுக்கு, அரிச்சந்திரனது பொருள் யாவும் கொடுத்தும் போதாமல் போய், மனைவியை வேதியனுக்கு விற்றுப், தான் அடிமையாகிச் சுடலை காத்த சரித்திரமும் காலகாலமாக நம் நாட்டில் நடமாடும் கதை.



காலையில் தருப்பைப் புல் கொணரப் போய் பாம்பு தீண்டி இறந்துவிட்ட மகனைக் காண எப்போது சென்றாள் அந்தச் சந்திரமதி?

பாம்பு தீண்டிவிட்டது என்ற செய்தியை உடன் சென்ற சிறுவர்கள் வந்து கூறியும், வீட்டு வேலைகளைத் தையும் வாங்கிக் கொண்டுதான் மகனைப் போய்ப் பார்க்க உத்தரவு கொடுத்தாள் அந்தக்கால கண்டி!

பொழுது சாய்ந்துவிட்டது! எஜமானியின் உத்தரவு பெற்று மகன் கிடந்த இடத்துக்கு ஓடிவருகிறாள்! நாணற் புதாருகில் உயிரிழந்து கிடக்கும் மகனைக் கண்டுபிடிப்பதற்குள் இருட்டிவிட்டது! அடித்துக்கொண்டு அலறி, அழுது ஓய்ந்து அவனை எரியூட்டச் சுடலைக்குக் கொண்டுவரும்போது நடுநிசி நேரமும் வந்துவிட்டது!

கல்லும், முள்ளும், கால்களை வருத்த, மகனையும் சுமந்துகொண்டு நடந்து வந்தவள், மகனைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, சுற்றுமுற்றும் சிதறிக் கிடந்த கொள்ளிக் கட்டைகளைப் பொறுக்கிச் சேர்த்து அதில் மகனை எடுத்து வைத்தாள்! எரி மூட்டினாள்! "அடமகனே, லோகிதாசா, என்குலக் கொழுந்தே, உன் முகம் கண்டு உற்ற துயரெல்லாம் மறந்திருந்தேனடா. அடிமையாகி, ஊழியம் புரியும் அன்னைக்கு நாம் பாரமாக இருக்கவேண்டாம் என்று போய்விட்டாயா?..."

சந்திரமதியின் அலறல் எங்கோ இருந்த அரிச்சந்திரன் காதுக்கெட்டியது! ஓலம் வந்த திசைநோக்கி ஓடிவந்தான். 'யார்' என்று அதட்டிக் கேட்டான்.

மிரட்டல் தொனி கேட்டு, திரும்பி நின்று நடுங்கினாள் சந்திரமதி!

குறைக்கொள்ளிகளிடையே எரிகனலில் வேகும் லோகிதாசனை எட்டி ஒரு உதை விட்டான்!

"ஏ, திருடி, கால்பணமும், முழத் துண்டும், வாய்க்கரிசியும் கூட செலவு செய்ய மனமின்றி நள்ளிரவில் வந்தா பிணம் எரிக்கிறாய்?"

''நான் திருடியல்ல ஐயா, அடிமைத் தொழில் செய்து ஜீவிப்பவள். குழந்தை என்னுடையதுதான். காலையில் பாம்பு கடித்து இறந்தவனை இப்போதுதான் பார்த்து...''

''அது சரி, காற்பணமும், முழத்துண்டும் கொடுத்து விட்டு...''

''ஐயா, அதற்கு வழியில்லை, இந்த ஏழை மீது அருள் புரிந்து பிணத்தை எரிக்க அனுமதியுங்கள்......''

''முடியாது! எனக்குச் சேரவேண்டிய வாய்க்கரிசி வேண்டுமானால் நீ தரவேண்டாம்; முழத்துண்டும், காற்பணமும் எனது எஜமானனுக்குச் சேரவேண்டியது. அவருக்குக் கொடுத்தாகவேண்டும்...''

''புண்ணியவானே, கதியற்ற என்னைக் கேட்பதில் அர்த்தமில்லை ஐயா.''

''நீ வேலை செய்யும் வீட்டு எஜமானியைக் கேட்டு வாங்கி வா, போ.''

''செத்த பிள்ளையை எடுத்து அடக்கம் செய்ய அனுப்பவே மறுத்தவர்கள் காசு தருவார்களா எனக்கு? நடுநிசியில் வந்து பிணமெரிக்கத் தவிக்கும் ஏழைப் பெண்மீது இரக்கம் காண்பியுங்கள் ஐயா...'' என்று மன்றாடினாள் சந்திரமதி!

''என்னிடமும் காசு கிடையாது. நானும் ஒரு அடிமை தான்! உன் பரிதாபத்துக்கு இரங்கித் தகனம் செய்ய அனுமதி கொடுத்தால் எஜமானத் துரோகம் வந்து சம்பவிக்கும்; பெண்ணே, உன் கழுத்திலிருக்கும் தாலியை விற்றாவது...''

ஆவியில் தீப்பற்றியவளாக அலறினாள் சந்திரமதி. துக்கம் பீறிட்டுக் கொண்டெழுந்தது.

''ஆ! அறக்கடவுளே, என் நாயகர் அரிச்சந்திரர்க் கல்லாது, மற்றவர்களுக்குப் புலப்படாத மாங்கல்யத்தை இப்புலையனோ காண்பது? பிராணேசா, மகாராஜா, என்னை



விற்றதோடு, எனது, பொற்பும் பொலிவும், நிறையும் போயின! ஆனால் கற்புப்போனதேன்? போனது ஏன்!''

''ஆ! சந்திரமதி, தேவி! நம் குல மகனை பாம்பு தீண்டி
இறந்தான்!'' என்று கூறியபடி தனது காலால் உதை
யுண்டு எட்டப் போய்க் கிடந்த பிணத்தருகே ஓடினான்!
மகனைத் தழுவி, முத்தமிட்டு அழுதுபுலம்பினான் அரிச்சந்
திரன்! எவ்வளவு நேரம் போயிற்றோ?

நிலைமையை உணர்ந்து எழுந்து நின்று, ''தேவி,
சத்தியம் ஒன்றுதான் நமது ஐசுவரியம். சத்தியத்தை
இந்தக் கோரமான துக்கத்திற்கிடையிலும் நான் நழுவ
விடத் தயாராக இல்லை. ஆதலால் நீ போய், உன் எஜமானி
யிடம் துண்டும், காற்பணமும் வாங்கிவா. அதில்லாது
தகனம் செய்வது முடியாது.'' என்றான்

இவ்வித உறுதி மொழியை அரிச்சந்திரனைத் தவிர
வேறு யாரால் கடைப்பிடிக்க முடியும்?

''போய்க் கேட்டுப் பார்க்கிறேன் சுவாமி!''

''ஓ, அரிச்சந்திரனே, இப்போதாவது சொல்—'உனக்
குச் சேர வேண்டிய பாக்கி ஏதுமில்லையென்று'. உன் கஷ்
டம் யாவும் இப்போதே விலகிவிடும்'' விசுவாமித்திர
ருடைய குரல் இருளுக்கிடையிலிருந்து மிதந்து வந்தது!

''சொன்ன சொல்லைக் காக்க வென்றே, நாடு, வீடு
பொருள் யாவும் இழந்தோம், விலைப்பட்டோம், பாலனைப்
பறிகொடுத்தோம். இதைவிட இன்னமும் கொடிய துயர்
ஏது நேர்ந்தாலும், மறுமையில் எமக்குக் கிடைக்கும் நற்
கதியை இழக்க நேர்ந்தாலும் சந்தோஷமாக, ஏற்போமே
தவிர, சொன்ன சொல்லை மாற்றமாட்டேன். இது
சத்தியம்'' என்றான் புலையனாக நின்ற சத்தியச் செம்மல்!

பிந்தைய கதை யாவரும் அறிந்ததே! மங்கலநாளுடன்
பிறந்த உத்தமி, சத்திய விரதம் பூண்ட மகாராஜனைக்
கைப்பிடித்து, பட்டமகிஷியாகத் துலங்கிய தேவியான
சந்திரமதி, தனது வாழ்வில் பொறுத்தற்கரிய கொடுமை
களைப் பொறுத்தாள்!

மகன் இறந்து கிடக்கும் செய்தி கேட்டதும் அலறிக் கொண்டு ஓடவேண்டியவள், எஜமானியிடம் உத்திரவு கேட்டு, அவள் பொழுது சாயும்வரை இடுப்பொடிய, வேலை வாங்கிக் கொண்டு விடும் வரை துக்கத்தைப் பொறுத்தாளே —சாமானியமான செயலா அது?

கணவன் பார்த்து காலகண்டன் காலகண்டிக்கு, அடிமையாக விற்றிருக்க, அவன் பெயருக்கும், அழுக்காறு தேடக் கூடாது! எஜமானியின் உத்தரவை மீறுவதும் அதருமமாயிற்றே என்றிருந்த அவள் பொறுமை கடலிலும் பெரிதாக இல்லையா?

சக்கரவர்த்தினியாக, அரிச்சந்திரனுடன் அரியாசனத் திலும் அமர்ந்து ராஜபோகம் துய்த்தாள்! அடிமைப் பட்டு குற்றேவல் செய்தும் வாழ்க்கை நடத்தினாள்!

பாரதம் பெற்ற பெண்ணரசி அன்றோ அவள்! தனது கற்பை, பொறுமையை, நேர்மையை, வாய்மையினை நன்கு பேணிக் காத்துக் கொண்டாள்!

முனிவர்களுடைய பந்தயத்தின் விளைவாக சாணையிட்ட மாணிக்க மணிபோல ஒளியைச் சிந்துகிறது சந்திரமதியின் புனித உன்னதக் கதை!



# தனக்கென வாழாத தர்மபத்தினி

ஒரு பார்வை, ஒரு சித்தம், ஒருதீர்ப்பு என்று இருந்து
பத்தினிப் பேறு பெற்றவர்களில் மந்தோதரியும் ஒருத்தி.
அவள் தெய்வத் தச்சனின் மகள்! அழகுக்கு வகுத்த
இலக்கணமாகத் திகழ்ந்த குமரி!

ஒரு மகா சிவராத்திரி தினம். புண்ணிய காலங்களில்
கங்கையில் வந்து நீராடிச் செல்வது தேவ மகளிர்களின்
வழக்கம். அதன்படி அன்று நீராடுவதை உத்தேசித்து
கங்கா தீரத்திற்கு வந்தாள் மந்தோதரி. அப்ஸரஸ்
களும், கந்தருவக் கன்னிகளும், வித்யாதரப் பெண்களும்,
யக்ஷ குமாரிகளுமாக அங்கங்கு இறங்கி நீராடிக் கொண்டி
ருந்தார்கள். தனிமையான இடத்தைத் தேடிக் கொண்டு
மேற்குப் புறமாகச் சென்றாள் மந்தோதரி.

நீர்த்துறையில் இறங்கி நீராடிவிட்டு மண மலர்களைக்
கொய்து கொண்டிருக்கும்போது, எட்டத்திலிருந்து இன்
னிசை யொன்று மிதந்து வருவதைக் காது கொடுத்துக்
கேட்டாள்! இது வரையில் அவள் கேட்டிராத அபூர்வ
இசை! இசையை எழுப்பிய குரலின் இனிமையில் ஈடுபட்ட
வளாக, மற்றொரு புறத்தில் மலர்கள் கொய்து கொண்
டிருந்த வித்யாதர கன்னிகையிடம் சென்று, "அம்மணி,
செவிக்கினியதாக வரும் இந்த இசை எங்கிருந்து வரு
கிறது?" என்று கேட்டாள் மந்தோதரி.

மானசி, என்ற பெயருடைய அந்தக் கன்னி அதிசயத்
துடன் விழித்து, "தெரியாதா உங்களுக்கு? புலஸ்தியரு
டைய பேரனும், பரம சிவபக்தனுமாகிய லங்கேசுவரன்
இசைக்கும் சாம கானம் இது" என்றாள்.

இசை மிதந்துவந்த திசையை நோக்கி நடந்தாள். மனது பல்வேறு எண்ணங்களைப் புரட்டியது. "பிரதாப லங்கேசுவரன்! பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே எல்லோரும் நடுங்கும் ராட்சஸாதிபதி. அவரது சிவ பூஜையைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அரக்கர்களுடைய குண விசித்திரத்தை என்னென்பது? உயர்வான ஈசுவர பக்தி ஒருபுறம். பிறரை இம்சை செய்து அதிலே மகிழ்ச்சியடையும் தன்மை மற்றொரு புறம்.

"அடடா! என்ன பக்தி! அதன் விளைவாக அந்தப் பத்து முகங்களிலும் படர்ந்திருக்கும் பரவச நிலைதான் என்ன! இப்படிப் பட்ட நாதோபாசனையில் சங்கரனே வசமாகிவிட்டார். சாம கானமா இதற்குப் பெயர்? சாம கானம்......ஓ......சிவனே. இதென்ன. என் நினைவு என் வசமில்லை போலிருக்கிறதே! கண்கள் சுழலுகின்றன! திசைகள் மங்கிவிட்டன! ஆ......அப்பா......நான் எங்கிருக்கிறேன்......" என்ற குழறிய உரையுடன் நினைவிழந்து நிலத்தில் சாய்ந்தாள் மந்தோதரி.

மீண்டும் அவள் கண் விழித்தபோது சூரியன் உச்சி வெளிக்கு வந்திருந்தான். சாம கானம் ஓய்ந்து விட்டதா என்று அந்தத் திசையில் பார்வையைச் செலுத்தினாள் மந்தோதரி.

'நிற்பது யார்? மதனனா? இங்கெங்கு வந்தான் அவன்? சே! அவனல்ல! அவனைப்போன்ற சாயல் படைத்த வேறு யாரோ...' என்று சோர்வுடன் அங்கிருந்து புறப்படத் திரும்பினாள்.

"சுந்தரி! பயப்படாதே! நீ யார் என்பதைத் தெரிந்துகொண்டேன். நீயும் என்னைத் தெரிந்துகொள். புலத்தியருடைய பேரன் நான். என் பெயர் ராவணன். அரசாள்வது இலங்கைப் பட்டினம்......" என்று தனது பிரதாபத்தை வர்ணிப்பதை மந்தோதரி அவநம்பிக்கையுடன் செவி சாய்ப்பதை உணர்ந்த ராவணன், "பார்ப்பவர்களுடைய நெஞ்சைப் பறித்துக்கொள்ளும் எழிலரசி! நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லையென்று தெரிகிறது. அப்படித்தானே?......" என வினவினான்.



'ஆம்' என்றதற்கடையாளமாக தலையை அசைத்தாள் பெண்கொடி!

"இருக்கலாம்! நியாயமே அது! பத்துத் தலைகளும், இருபது கைகளுமாக ராட்சஸ ஆகிருதியில் அமர்ந்து மகேசுவரனைத் துதிக்கும் சமயத்தில் நீ பார்த்திருக்கிறாய்! ராவணேசுவரன் நினைத்த போது நினைத்த வடிவம் எடுக்கும் வல்லமை படைத்தவன் என்பது உனக்குத் தெரியாது போலும்! பயத்திற்கு இருப்பிடமான குமரிப் பருவத்தினளான உன் முன்பு சுய உருவுடன் நின்றால் பயப்படுவாயோ என்றுதான் உன் வடிவழகுக்கேற்ற சுந்தர புருஷனாக உன்னை எதிர்கொண்டேன்! மந்தோதரி, என் மனதை மயக்கி என்னை ஆட்கொண்ட மாதே. என்னை உனது நாயகனாக ஏற்று, பட்டமகிஷியாகி லங்கையின் நாயகியாக, அழகு தேவதையாக, அந்தப்புரத்தின் ரத்ன மாளிகையில், அன்னத்தூவி பாவிய அணைகளிலே அமர்ந்து......"

முகத்திலே, செம்மைபடர, கண்ணிமைகள் படபடக்க மருள விழித்தாள் மந்தோதரி! ஆசை வார்த்தைகளை அமுதத் துளிகளாக நெஞ்சிலே தெளித்துவிட்ட ஆணழகனைக்கண்டு கிறங்கி நின்றாள்! நெஞ்சத்தெழுந்த புளக உணர்ச்சி உடலெங்கும் வியாபித்துச் சிலிர்த்துப் பரவச நிலையில் ஆழ்த்தியது!

அறிந்துகொள்ள இவ்வளவு போதாதா அந்த மாயாவிக்கு? மகிழ்ச்சி துள்ளும் குரலில் "வா, மந்தோதரி. உன்னை உன் வீட்டில் சேர்த்துவிட்டுப் பிறகு சாவகாசமாக வந்து உன் தந்தையைச் சந்திக்கிறேன்." என்று கூறியபடி அவளை அள்ளியெடுத்துக்கொண்டு அருகே நின்ற புட்பக விமானத்திற்குத் தாவினான் ராவணன்!

அவளை உரிய இடத்தில் இறக்கிவிட்டு புளகாங்கிதனாக இலங்கையை நோக்கிப் பறந்தான்!

பாவம்! களங்கமற்ற கன்னியாக துள்ளலும், ஓட்டமுமாக கங்கைக் கரைக்கு நீராட வந்தவள், திரும்பி வந்த [illegible]து நாயகனொருவனைக் கண்டு நெஞ்சைப் பறிகொடுத்து [illegible] வந்தாள்.

செய்தியறிந்த மந்தோதரியின் தந்தை மனம் கொதித்தான். அசுரனை வரித்தால் நேரக்கூடிய கொடுமைகளை விரிவாக எடுத்துரைத்தான்.

"என் நெஞ்சில் இடம் பெற்ற கணமே அவர் என் நாயகனாகிவிட்டார். என் விதி அதுவானால் அதை எப்படி மாற்ற முடியும்" என்று மன்றாடினாள் மந்தோதரி.

கடைசியில் அவளது உறுதியே வென்றது. ராவணனுக்கு மனைவியானாள்.

மந்தோதரியுடன் இலங்கை புகுந்த ராவணன் பட்டத்தரசிக்குரிய பிரத்யேகமான அந்தப்புரத்தில், சகல உபசார மரியாதைகளுடன் வைத்தான், மனதிலே மதிகண்ட கடலாகப் பொங்கிய ஆசையை அவள்மீது சொரிந்து அவளைத் திணறச் செய்தான்! இலங்கையின் ஒப்பற்ற நிதித்திரள்களும், தானும் மந்தோதரியின் மலரடிகளுக் கடைக்கலம் என்று வேறு உரைத்து அவளது உயர்வினைச் சுட்டிக்காட்டினான்!

எல்லாம் நன்றாகத்தான் இருந்தது! இனித்தது! விரைவிலேயே ஆபத்தை உணர்ந்து கூடுக்குள் தன்னை ஒடுக்கிக் கொள்ளும் நத்தைபோல, ராவணனுடைய அடாச் செயல்களைக் கண்டு அவளது அருள் நெஞ்சு குறுகிக் குன்றி விட்டது!

தராதரமின்றி எல்லா வருணத்துக் கன்னிகைகளையும் மணமான பெண்களையும், அபகரித்து வந்து அந்தப்புரத்தில் சிறைவைத்து, அச்சுறுத்தி இணங்கச் செய்து, இன்பம் துய்ப்பது கண்டு மந்தோதரியின் மென்மையான மனம் துடித்தது!

இதை நினைத்து மந்தோதரிக்கு உள்ளம் பதறி உடல் வியர்க்கும். கண்களை மூடிக்கொண்டு படுக்கையில் சாய்ந்து விடுவாள்! ஆனால் இதற்கெல்லாம் காரண புருஷனான ராவணனை அவள் வெறுக்கவில்லை, செய்யும் பணிவிடைகளில், அன்பில் இம்மியும் குறைவின்றி மனதாரச் செய்தாள்! அவளது வேதனையெல்லாம் எந்தக் கற்புடை—



[illegible]கையின் சாபத்தால் நம் வாழ்வு நசித்து விடுமோ, எந்தத் தவசியின் கோபத் தீ என் நாயகனை எரித்து விடுமோ என்பதுதான்!

இப்படியே எண்ணி நாட்களை, வருடங்களை ஓட்டினாள் மந்தோதரி! மேகநாதனை ஈன்றாள்! தாயானாள்! அப்போதும் ராவணனுடைய மனது செம்மையடையவில்லை! அதற்குப் பதிலாக—இன்னும் கொடும் செயல்களே கூடுதலாகிக்கொண்டிருந்தன! மந்தோதரியின் மனம் இப்போதெல்லாம் வருவதை ஏற்று ஏற்று வைரம் பாய்ந்ததாகி விட்டது! இடி முழக்கத்திலே மின்வெட்டியது போல ஒரு செய்தியைச் சொன்னாள் விபீஷணனுடைய மனைவியான சுரமை! ஜனத்தானத்திலே மானிடப் பெண்ணொருத்தி வனவாசத்திற்காகக் கணவனோடு வந்திருக்கிறாளாம்! அழகிலே ராவணனுக்கேற்ற இணையாம் அவள்! இதைச்சொல்லி சூர்ப்பனகை ராவணனுடைய மனதைக் கலைத்துவிட்டிருப்பதைச் சொன்னதும் அப்படியே மனமிடிந்து போனாள் மந்தோதரி!

* * *

சூர்ப்பனகை போட்ட தூபத்தால், சீதையைச் சிறைபிடித்து வந்து அசோக வனத்தில் வைத்திருப்பதையும் கேள்விப்பட்டாள் மந்தோதரி!

மாலைமங்கி இருள் சூழும் நேரம். அசுர வேளைதான்! ஆயினும், பல்லவனுக்கு முன்பு, சங்கரன் கொடுத்த வாளையும் தனது வீரத்தையும் களத்திலேயே போட்டுவிட்டு ராவணன் அரண்மனை திரும்பியுள்ள செய்தியை விவரமாகத் தூதி கூறிமுடித்ததும் ஆசனத்தில் அப்படியே துவண்டு விழுந்தாள் அறுபட்ட மலர்மாலைபோல!

மீண்டும் அவள் கண்விழித்துப் பார்த்தபோது நிலவு வந்திருந்தது! சுரமையின் மடியில் தனது தலையிருப்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தாள்!

[illegible] பார்வையா அது? உயிர்த்துடிப்பை உள்ளபடி காட்டும் கண்ணாடிகளன்றோ அவை? இரக்கத்தோடு மந்தோதரியின் கைகளைப் பற்றிக் கொண்டு, "தேவி, நாம் எதிர்பார்த்

ததுதானே நடைபெறுகிறது? இவ்வளவு அமைதிக் குலைவு ஏன் தங்களுக்கு?" என்றாள் சுரமை.

கம்பிய குரலில் கரகரப்பு இடற "ஆமடி சுரமை. நான் பேதையாகி விட்டேன்! அஞ்ஞானியாகக் கூடப்போய் விட்டேனடி! இன்று தாதி சொன்ன செய்தியிலிருந்து..." பாதி சொன்னதோடு மௌனமானாள் மந்தோதரி.

சுரமை மெல்லிய குரலில், "புரிந்து கொண்டேன் தேவி..." என்றாள்.

"எதைப் புரிந்து கொண்டதாகச் சொல்லுகிறாய்?" என்று கேட்டு சிரிக்கவும் செய்தாள் மந்தோதரி!

சுரமை பேச முயன்றாள். முடியவில்லை அவளால்!

"பேசமுடியவில்லையா சுரமை உன்னால்? என்னால் முடிகிறது; நான் சொல்லுகிறேன். கேள்! என்று அந்த வாயுபுத்திரன் பிரம்மாஸ்திரத்திலிருந்து விடுபட்டு லங்காபுரிக்குத் தீ வைத்தானோ அன்றே நாம் முடிவை நிச்சயித்து விடவில்லையா?"

அந்தச் சம்பவத்தை நினைத்து வேதனை தாங்காது நெற்றியைப் பிடித்துக் கொண்டாள் சுரமை.

"நெற்றியைப் பிடித்துக்கொண்டு என்ன ஆகப் போகிறது சுரமை? தன்னைச் சுற்றிலும் பகைவர்கள் சூழ்ந்திருக்கச் சற்றும் பிராண பயமின்றி ராட்சஸாதிபதியின் முன் நின்று, நேரவிருப்பதைச் சொன்னானே—அந்த அனுமன்—அன்று நாம் என்ன பேசிக்கொண்டோம்? வானரப்படையுடன் ராமன் வரப்போவதும், அறமுறைப்படி போர் ஆரம்பிக்கு முன்பு தன் மனைவியைக் கொணர்ந்து விட்டு விட்டால் போர் தொடுப்பதில்லை யென்று தூது வரும். ராட்சஸாதிபதி சம்மதிக்க மாட்டார். போர்மூளும். அழிவு அடுத்து நிற்கும். முதலில் முக்கியமான வீரர்கள் மடிவார்கள். பிறகுநமது குமாரர்கள், பிறகு சகோதரர்கள் பிறகு இந்திரஜித்து, மூலபலப்படை, கடைசியில் இந்திரஜித்தை ஈன்ற ராவணேசுவரன்—விச்ரவசின் புத்திரன்.



மந்தோதரியின் பதி, மண்ணில் சாய்வார், மந்தோதரி உட்பட அனைவரும் தீப்புக வேண்டும். முடிவில் லங்காபுரி சாம்பலாகிக் கடலில் கரையும்! இதையெல்லாம் பேசிக் கொண்டோமில்லையா? அடி சுரமை. இவ்வளவு துக்கத்தையும் வசிஷ்ட தண்டம் போல விழுங்கி விட்டு தர்மத்தின் சக்தியைப் போற்றியபடி நெருப்பில் நீராடி சதியாகி விடுவோம் என்ற உறுதியோடு இருந்தேனே!..."

இவ்விதம் வார்த்தைகளைச் சிந்திக் கொண்டிருந்தவள் திடீரென்றுஎழுந்து ஆவேசத்துடன் பாய்ந்துவந்து வெற்று வெளியைப் பார்த்தபடி இருகைகளையும் விரித்துக்கொண்டு உரத்த குரலில், "ஸர்வ வியாபியான தர்ம சொரூபமே. கேள்! பிதாவும், பதியும் புத்திரர்களும் எண்ணற்ற உறவினர்களையும் படைத்து விட்டு இன்று நான் தனிமையில் அலறும் அபாக்கியவதியாகி விட்டேன்! நியாயவானான என் மைத்துனன், என் மகனைவிட அருமைமிக்க விபீஷணன் போயே போய் விட்டான்! லங்காபுரியின் சத்திய ஜீவன் பறந்தோடி விட்டது! அக்கிரமம், அதருமம், அநீதி, அனைத்தும் தலைவிரித்து விட்டன! ஐயோ, அவற்றின் கொடுங்கோன்மையையும், ஆர்ப்பாட்டத்தையும் கண்டு பொறுக்க முடியவில்லையே என்னால்!

"அன்று பெற்ற தந்தை முகவாய் பற்றிக் கொண்டு கெஞ்சும்போது அதற்கும் சாட்சி நின்றாய்! இன்று இதற்கும் சாட்சி நிற்கிறாய். பரப்பிரம்மமே, அகண்டவியாபியே. மந்தோதரியின் பிறப்பும், வளர்ச்சியும், வாழ்வும், வலிமையும் கடைசியில் இக்கதியை அடைந்திருக்கிறது!

"விபீஷணா, தர்மாத்மா, நியாயவானே. அநீதிக்களத்திலிருந்து தப்பி விட்டாயா? நல்லதுதான் செய்திருக்கிறாய்! புலத்திய வம்சத்திற்கு நீ ஒருவனாவது மிஞ்சி நின்று, நீரும் எள்ளும் இரை அவர்களுக்கு!" எனக் கூறினாள்.

"தேவி, மந்தோதரீ..."

திரும்பிப் பார்த்தான் மந்தோதரி. அருகில் ராவணன் நிற்பதைக் கண்டதும் தன்னிலைமை பெற்றவளாகக்கைகூப்பி

வணங்கி கைலாகு கொடுத்து அழைத்து வந்து ஆசனத்தில் அமரச் செய்து உபசரித்தாள்.

"உபசாரம் இருக்கட்டும் மந்தோதரி, விஷயம் அறிந்தாயல்லவா?"

"ஆம், பிரபு."

"உன் அபிப்பிராயம் என்ன?"

"என் அபிப்பிராயமா...." என்று கூறி வியப்பினால் விரிந்த கண்களுடன் ராவணனைப் பார்த்தாள்!

முன்பே மனம் நொந்திருந்த ராவணன் மந்தோதரியின் வியப்பைக்கண்டதும் பின்னும் நைந்த மனத்தினனாக, "புரிந்து விட்டது தேவி! புதிதாக—அதுவும் கடைசி நேரத்தில்—வந்து உன்னை அபிப்பிராயம் கேட்டால் நீ சொல்ல என்ன இருக்கிறது...?" என்றான்.

"என்ன சொல்கிறீர்கள் நாதா?"

"இருப்பதை! பாவியான சூர்ப்பனகையின் போதனையில் மயங்கினேன். சபலத்திற்காளாகி சீதையை அபகரித்து வந்தேன்! என் அசுரத்திருப்திக்கு, தங்கச்சிலை போன்ற உன்னையும் இந்த லங்காபுரியையும் இந்திரனையே வெற்றி கொண்ட மகனையும் நாசம் செய்து என்னையும் அழித்துக் கொண்டேன். பகைவன் தலைமாட்டில் நின்று உயிரைச் சூறையாட முயலுகையில்..."

"பிரபு, இவ்வாறு தைரியம் குலைவது உசிதமல்ல."

"உசிதம், உசிதமற்றது என்ற இதெல்லாம் நம்மிடம் விடை கொண்டேகி விட்டது. கடைசியாக ஒன்று உன்னிடம் கேட்கிறேன். உனக்காக நான் எதையும் செய்யச் சித்தமாக இருக்கிறேன். இப்போதும்—சீதையென்ற காலபாசத்தை மாலையாக அணிந்து அழகு பார்க்க முயன்றேனே—அதை, அந்தக் காலபாசத்தை உரியவனிடம் சேர்ப்பித்து விட்டால் உயிர் தப்பலாம். நீ தீப்புக நேராமல் உன்னைக் காப்பாற்றவே துடிக்கிறேன்...ஆனால்...



ஆனால்...நான் அதட்டி, மிரட்டி ஆளப் பார்த்த அந்தச் சீதை என்னைக் கண்டு சிரிப்பாளே—அதை, அந்த அவமானத்தை எப்படிச் சகிப்பேன்?"

நெடுஞ்சாண் கிடையாக ராவணனின் காலடியில் விழுந்து கால்களைக் கட்டிக் கொண்டு பெருங்குரலில், "ஐயோ, பிராணபதி, என்ன இழிவான யோசனை இது? ஜயிக்க முடியாவிடில்..." என்றாள் மந்தோதரி.

"ஜயமா?"

"வேண்டாம், வீர சொர்க்கம் புகுங்கள், நான் அதைச் சகிக்கிறேன். மக்களைப் பறிகொடுத்து, சௌபாக்கியத்தை இழந்து தவிக்கிறேன், என் போக போக்கியம் யாவும் எரி. யட்டும், பாதகமில்லை! பிரபுவே, பிரதாப லங்கேசுவரா, சக்தியும் சிவனும் உறையும் தலமான கைலையையே பெயர்க் கத் துணிந்த தேவரீருடைய தோள்வலி, இன்று மனிதப் பதரால் அடித்து வீழ்த்தப்படுகிறது! போகட்டும், எல்லாம் தீத்து நீராகட்டும். சரணமடைய மட்டும் நினைக்காதீர்கள். பொறுக்கவே மாட் அதை நான் பொறுக்க மாட்டேன், டேன்!"

மானமுள்ளவளும், கற்பரசியும், திடசித்தம் படைத்த வளுமான மந்தோதரி அண்டம் நடுங்க இவ்வாறு புலம்பி அலறினாள்!

ஆவி பதறக் காலடியில் புரண்டழுது துடிக்கும் மந்தோதரியைத் தூக்கித் தன் மீது சாய்த்துக்கொண்டான் ராவணன். "மந்தோதரி, பாதகனான என் சபலத்தில், திரி புவனசுந்தரியான உன்னை நாசம்செய்து விட்டேன்! செய் தது செய்தேனே, அதை ஒருநாளில் ஒரே கணத்தில் செய்தி ருந்தால், ஒரேயடியாக நீ நாசமாகியிருப்பாய்! பாவி, நான் அப்படிச் செய்யவில்லையே, பாவத்தின் மேல் பாவமாகச் செய்து, உன் அருள் நெஞ்சைப் புண்ணாக்கினேன். அணு அணுவாகச் சிதைத்து உன் பொன்மேனியைத் துடிக்கச் செய்தேன்! சாதுவும் ஒப்பிலா விவேகியுமான என் பட்டத்து ராணியை மீளா வியாகூலத்திலேயே ஆழ்த்தி வந்திருக்கிறேன்! ஏ சிவனே, ஆதியந்தமிலா நின்மலனே

என் அருமைப் பத்தினியை புத்திர சோகத்திற்காளாக்கி, நானும் பகைவனுக்குத் தோற்று நிற்கும் கொடுமையை..."

"ஐயையோ, வேண்டாம், சுத்தவீரன் துயரைக்கண்டு, வீழ்ச்சியைக் கண்டு தளர்ந்து போகமாட்டான்! புலம்பி அழவும் மாட்டான்! போங்கள்! சமர்க்களத்தில் எதிரியை எதிர்த்துச் செல்லுங்கள். ரணதீரனென் என் கணவன், புலத்திய வமிசத்துத் தலைப்பிள்ளை, மகா சிவபக்தன், சுவர்ண லங்காபுரியின் நாயகன், பத்துத் தலைகள், இருபது கைகள் படைத்த ராவண ஈசுவரனை, ஒரு நர மனிதன் இருகைகளும், ஒரு வில்லும் கொண்டு அம்பெய்து வீழ்த்த, என் பதி நிலமகளைத் தழுவிக்கொள்ள, நான் தீப் புகுந்து என் நாதனைச் சேரவிருக்கிறேன். இவ்வளவுதானே? இது என்றோ தெரியும் எனக்கு! புறப்படுங்கள் நாதா, அதோ, எதிரியின் போர் முரசொலி! பாருங்கள் வானர சேனையின் ஆரவாரத்தை! அவை என் காதில் நாராசமாகப் பாய்கின்றன! துயரை, அயர்வை, உதறிவிட்டு எழுங்கள், ஜயசீலனாக வாருங்கள்! யார்கண்டது? கடைசி நேரத்தில் கூட எதிரி முறிபட்டு...சிரிக்காதீர்கள், வெற்றி, தோல்வி முடிவு வரையில் மாறி மாறியே வரும்! நேற்று அவன் வெற்றிபெற்றான், இன்று நீங்கள், வெற்றி பெற்றால்?"

சட்டென எழுந்தாள்! ரட்சாதிலகமிட்டு, ஆரத்தி சுற்றி வலுக்கட்டாயமாக அவனைப் போர்முனைக்கு அனுப்பி வைத்தாள்!

'இன்று களம்புகுந்தால் மீண்டு வரமாட்டாய்' என்று இசுகிசுத்தது உள் நினைவு! மீண்டுமொருதரம் மனைவியின் முகத்தைக் காணும் பொருட்டுத் திரும்பி நின்றான்! அவன் மறுபடி வந்துவிடக் கூடாதே என்று சட்டெனத் திரை மறைவில் மறைந்துவிட்டாள் மந்தோதரி!

பொழுது சாயும் வேளையில் ராவணனுடைய மரணச் செய்தி எட்டியது மந்தோதரிக்கு!

சிங்கமென எழுந்து போர்க்களத்தை நோக்கி ஓடினாள்! மாண்டு கிடக்கும் தனது மன்னனைத் தழுவி, ஆவிகுலைய அலறினாள்! அழுது புரண்டாள்! தீக்குளித்து உத்தம



பத்தினிக்குரிய இடத்தை உறுதியாகப் பற்றி நின்றாள் மந்தோதரி!

மந்தோதரியின் சரிதையிலிருந்து நாம் குறிப்பாக எடுத்துக்கொள்ளவேண்டியவை, திடசித்தம், பதிபக்தி, சகிப்புத்தன்மை ஆகியவைதான்!

ராவணனை மணந்தால் நேரக்கூடிய தன் கதியைப் பற்றி பெற்ற தந்தையே எடுத்துக் கூறி எச்சரித்தும் கூட, உறுதி மாறாமல் 'வருவது வருக. என்றைக்கு அவரை மனம் வரித்ததோ, அன்றைக்கே நான் அனைத்துக்கும் உடன்படவேண்டியவளே!' என்ற முடிவின்மேல் பிடித்த பிடி தவறாது பற்றி, வாழ்க்கையில் எதிர்ப்பட்ட வேதனைகளை, துக்க சோகத்தையெல்லாம் ஜீரணித்துக்கொண்டு கடைசியில் அதற்கே இரையானாள் உத்தமி! சுகத்தோடும், துக்கத்தோடும் ஒருங்கே அளவளாவிய ஞானி! தனக்கென வாழாத தீரப் பெண்மணி!

## ஞானசம்பத்தைப் பெற்ற நங்கை!

பொதுவாக, 'சம்பத்து' என்ற சொல், நிறைவைக் குறிப்பிட்டுக் கூறப்படும் சொல். இவற்றுள் முதன்மையானது ஞானசம்பத்து ஆகும்! மற்ற சம்பத்துகளைவிட ஞானசம்பத்தைப்பெற கடினமான சாதனையும், பரிபக்குவமான நிலையும் வேண்டும்!

கிருஷ்ணனுடைய தங்கை சுபத்திரை ஞானசம்பத்தைப் பெற்ற பெண். சுபத்திரையின் நளின சுபாவமும், பண்பும், விவேகமும் சற்று நுணுகி ஆராய்ந்தாலே தெளிவாகத் தெரியும்!

கிருஷ்ணனுடைய யுக்தி, சகாயம் இரண்டையும் துணையாகக் கொண்டு, சுபத்திரையைக் கவர்ந்துகொண்டு வந்துவிட்டான் பார்த்தன்! பூசலுக்குப் பின் நிலைமையை உணர்ந்து, முறைப்படி சுபத்திரையை அர்ஜுனனுக்கு மணம் செய்து கொடுப்பதற்காக, பலராம, கிருஷ்ணர்கள் இந்திரப்ரஸ்தம் வந்து மணவினையை முடித்துக் கொடுத்த அன்றிரவு!

மாணிக்க மணிகள் பதித்த அந்தப் பள்ளியறையில் புகுந்ததும் திகைத்து நின்றான் பார்த்தன்!

எரிந்துகொண்டிருந்த தூண்டாமணி விளக்குகளிலிருந்து வரும் பரிமள வாசனையும், காற்றில் அலைவுறும் மலர்த்திரைகளிலிருந்து எழும்பிவரும் நறுமணமும், அதில் தூபமணமும் சூழ்ந்துகொண்டு மயக்கமூட்டத்தக்க தேன் வாடையின் நடுவில் பொன்னும், மணியும், பூக்களும் பூத்து நின்ற மெல்லணைமீது அமர்ந்து சுபத்திரையிடம் அந்தரங்கமாக உரையாடிக்கொண்டிருந்த பாஞ்சாலியைக் கண்டதும் அர்ஜுனன் அப்படித் திகைத்து நின்றுவிட்டதைக் கண்ட



சுபத்திரை திகைத்தாள். ருக்மிணி தேவி செய்திருந்த அந்தப் பள்ளியறை சிங்காரமும், எழில் நிறை குமரியான சுபத்திரைக்குச் செய்திருந்த மோகன அலங்காரமும் தென்பட்ட அதேவினாடியில், சுபத்திரையின் தனிப்பட்ட மாளிகையில்—அந்த நேரத்தில்—அங்கு நின்ற பாஞ்சாலியே முன்வந்து வணங்கி நகை முகத்துடன், "பரந்தப, வரவேண்டும்! வரவேண்டும், ஸ்ரீதர சோதரி, வா. பிராண பதியை எதிர்கொள்" என்றாள்.

நாணமும், கலவரமும் கலந்து புது மெருகு ஏறியது சுபத்திரையின் மதிமுகத்தில்! குனிந்த தலை நிமிராமல் நின்ற இடத்திலேயே நின்றாள். கீழே சிதறிக் கிடந்த மணமலர் ஒன்றினை நெருடியது அவளது கால் விரல்!

"ஓ! தெரிகிறது! புது மணப்பெண்ணல்லவா? நல்லது அடியாளுக்கு உத்தரவு தந்தருளுங்கள்" என்று கூறியபடியே வெளியே சென்றாள்!

அவள் செல்வதை நெடுநோக்குடன் நின்று பார்த்து விட்டு, மெல்ல நடந்துவந்து மஞ்சத்தில் சாய்ந்துகொண் டான் பார்த்தன். சிறிது தூரத்தில் நின்ற சுபத்திரையைப் பார்த்து, "ஏ ஸ்ரீதர சோதரீ, இன்னும் யாரிருக்கிறார்கள் இங்கே?" என்று வினவினான்.

அர்ஜுனனுடைய உள்மனதைப் புரிந்துகொண்டாள் சுபத்திரை. அருகில் வந்து அவன் சமீபம் உட்கார்ந்து கொண்டு அவனது இருகைகளையும் பற்றியெடுத்துக் கண்களில் ஒற்றிக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு மௌனமானாள்! இருவருடைய கண்களும் உரையாடின!

எந்த உணர்ச்சிமிக்க பாவத்தால் தனது கைகளை இறுகப் பற்றிக் கொண்டாளோ, அந்தப் பாவத்தைப் புரிந்துகொண்ட பார்த்தன் கலகலவென்று சிரித்துவிட்டு ஓய்ந்தான். பிறகு மெல்ல ஒரு கையை விடுவித்துக்கொண்டு சுபத்திரையின் முகவாய் பற்றி அன்பூறிய தொனியில் "பரந்தபனுடைய உயிர் நிலையமே, இது நமது முதலிரவல்லவா?" என்று கேட்டான்.

"அன்று! நமது முதலிரவு துவாரகையில். என் கன்னி மாடத்து மலர்க்காவில் நான் தங்களைத் தெரிந்துகொண்ட நள்ளிரவே, அந்த நிலவிரவே, நமது முதலிரவு!" என்று உணர்ச்சி மிகுதியால் உரைதடுமாறச் சொன்ன சுபத்திரையை ஆரத் தழுவி, "எனதாவியே, நீயேனின்னும் வேற்று உடலாய் வெளியிலிருக்கிறாய்? இந்த இதயத்தைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து ஒன்றாகிவிடேன்! ஆம் அதுவே சரி, ஒன்றாகிவிடு" என்றான் பார்த்தன்.

வாயைப் பொத்தினாள் சுபத்திரை. பார்த்தன் அவள் கையை விலக்கிவிட்டு, "சரி, பாடுபட்டுத் தவியாகத் தவித்துப் பரந்தபனைத் தேடி விரும்பி மணந்துகொண்டு விட்டாய்!" என்றான்.

"பகைவர்களுக்கன்றோ தாங்கள் அவ்வாறு ஆவீர்கள்? எனக்கன்று! உற்ற சமயத்தில் என்னை வந்து ஆட்கொண்ட தெய்வமல்லவா தாங்கள்?..."

"பரந்தபன்! ஊம்..." என்றபடி மௌனமானான் விஜயன். அவன் மீது சாய்ந்திருந்தவள் சுபத்திரை, நினைவில் நின்றவள் பாஞ்சாலி.

மனத்தின் அகண்ட வெளியில் மானசிக உறவில் துரௌபதியைத் தொடர்ந்து சென்று, "பாஞ்சாலி, உனக்கு நான் 'பரந்தப'னாகி விட்டேனா? அதைத் தெரிவிக்க இந்த சமயம்தானா அகப்பட்டது உனக்கு? பரந்தபன்! ஆம், பிறரைத் தவிக்கச் செய்பவன்! 'பகைவரைத் தவிக்கச் செய்பவனே' என்று என் தோழன் என்னை விளித்த நாமம் அது! என் பத்தினியான நீயா என்னை அழைத்தாய் அப்படி? ஏன்? அர்த்தமென்ன அதற்கு? சுபத்திரையை நான் மணந்து கொண்டதால் உனக்கு அவ்வாறு ஆகிவிட்டேனா? சுபத்திரையை மணந்துகொண்டு உன்னைத் தவிக்கச் செய்து விட்டேன்; உன்னைத் தவிக்கச் செய்தவன் உன் பகைவன் தானே? சரிதான்! பாவம் சுபத்திரை என்னை மணந்து என்ன கண்டாள்? முதலிரவிலேயே கைப்பைக் கண்டு விட்டாள்! ஆனால், நல்ல வேளையாக, அதை இனிமையாக்கிக் கொள்ளவும் கற்றிருக்கிறாளே! கண்ணனின் உடன் பிறப்-



பல்லவா? பிறவி விவேகம்! பிறவிஞானம்! தன்னை மட்டுமன்றி என்னையும் ஆற்ற வருகிறாள்! முதலிரவைத் துவாரகையில் கண்டாகி விட்டதாமே! என்ன ஞானம்! என்ன சாந்தம், பொறுமை! தான் வரித்த கணவனைக் கண்ட அவ்விரவே, வாழ்வு முழுதும், இன்ப முழுதும், சுகம் முழுதும் பெற்று விட்டதாக நிறை மனத்தினளாகிவிட்டாள்! சுபத்திரா, என் இன்பமே, துறவிக் கோலத்திலிருந்த என்னை அர்ஜுனனாக அறிந்த அன்றிரவு, உன் மனதைச் சொல்லி விட்டதுமே யாவற்றையும் பெற்று விட்ட பெருவகை கொண்டு விட்டாய்! ஆனால்...அதற்குப் பதிலாக, உனக்குக் கொடுக்கக் கூடியதாக—தூயதாக என்ன இருக்கிறது என்னிடம்? ஒன்றுமேயில்லை! இந்த உயிர்கூட என்னுடையதல்ல! சுபத்திரை, என்...உயிரே...நீ...எங்கிருக்...கிறாய்?" என்று பெருமூச்சோடு குழறினான் விஜயன்.

"இதோ, தங்கள் அருகிலேயே இருக்கிறேன் ஏன்? என்ன வேண்டும்?"

'இருக்கிறாயா, சரி?"

"என்ன சிந்திக்கிறீர்கள் பிரபு?"

"என்னவா? அற்புதமான வில்லாளியும் ஆணழகனுமான அர்ஜுனனைத்தான் மணப்பேன் என்றாய்! நானே, உன் வாக்கினால் உரைத்தபடி தங்கையைத் தருகிறாயா, உயிர் விடட்டுமா என்று ஆகாத்தியம் செய்து பயமுறுத்தி உன்னைக் கைப்பற்றினேன், மணந்து கொண்டு விட்டாய்!"

"அதனாலென்ன நேர்ந்து விட்டது?"

"இன்னும் என்ன நேர வேண்டும்?" என்று கேட்டு வேதனை மலியச் சிரித்தான் விஜயன்.

அன்புகனிய "பிரபுவே, அற்பவிஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தோமானால் அவை நம்மைச் செயலறச் செய்து உட்கார்த்தி விடும்..." என்றாள்.

"அந்தப் பாஞ்சாலி, சமயமற்ற சமயத்தில், இந்த இடத்தில், அதிலும் இந்த நேரத்தில் எதிர்ப்பட்டு 'பரந்தப"

னாக என்னை விளித்தாளே—அதுகூட அற்ப விஷயம்தானே சுபத்திரை?''

''சந்தேகமின்றி! இங்கிதமும், சமயோசிதமும், ஞான சம்பத்தும் எல்லாப் பெண்ணிடமும் இருப்பதில்லை! பாஞ் சாலியின் நற்குணங்களில் மாசு கற்பிக்கவே முடியாது! ஏதோ வாய் தவறி வந்த சொல்லாக இருக்கலாம். அல்லது தாங்சள் நினைப்பதுபோலவுமிருக்கலாம்! ஏனெனில் ஒரு பெண், தனது, உடை, ஊண், பொருள் முதலிய எதையும் மனதார மற்றொருவளுக்குத் தருவாள்! ஆனால் தனது அன்பு மணாளனை வேறொருத்தி ஆளக் கண்டு சகிக்க மாட் டாள்! இதைப்போய் பெரியதொரு பிழையாகக்கருதுதல் தவறாகுமல்லவா?''

''அ...ப்...படியா?'' என்று நீட்டி முழக்கினான் அர்ஜுனன்.

''அதற்குள்ளாக இன்னுமொன்றும் இச் சமயம் அடி யாள் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்...வந்து... தாங்கள் குறிப்பிட்டபடி, தங்கள் தோள்வலிக்கும் அழ குக்கும் மட்டுமாக நான் தங்களை வரிக்கவில்லை...தங்களு டைய அருள் நெஞ்சுக்கும், சௌரியத்திற்கும், தங்கு தடையற்ற பராக்கிரமத்திற்கும்...''

''இன்னுமெத்தனைக்காகவுமோ சேர்த்து ஆசைப்பட் டாய். போயேன்! ஆனால் கண்ட சுகம் என்ன என்பதே கேள்வி!''

''என்ன இல்லை? பார்த்தனுடைய பத்தினி என்ற பெருமை ஒன்றே போதுமே எனக்கு! அந்தஇன்ப நினைவின் முன்பு மற்றெல்லாத் துன்பங்களும் அடிபட்டுப்போம்! ஏன் துயரப் படுகிறீர்கள்? வாழ்விலே, சுகம் சொற்பம், துக்கமே அதிகம் என்றபேருண்மை தாங்கள் அறியாததா?''

''எது உண்மையோ, எது பொய்யோ, இன்றிரவு இந்த மலரணைமீது அமர்ந்து, வாழ்வின் சுக, துக்கங்களைப் பற்றியும், நித்திய, அநித்திய வஸ்துக்களைப் பற்றியும் வேதாந்த விசாரணை செய்யுங்கள் என்று பணித்துவிட்டுப் போயிருக்கிறாள் பாஞ்சாலி! நல்லதொரு சுப சூசகம் பார்த்



தாயா?...சரி, மலரணையில் இருப்புக் கொள்ளவில்லை சற்று நேரம் பூம்பொழில் சென்று உலாவிவிட்டு வரலாம். வருகிறாயா?'' என்று கேட்டான்.

''எனக்கும் அதில் விருப்பம்தான்! ஆனால் அத்தையார் உறங்கும் அறையின் சாளரம் திறந்திருக்கும். அவர்கள் கண்ணில்பட நேரும். இந்நேரத்தில் நாம் அங்கு உலாவு வதைக் கண்டுவிட்டால், பொழுது விடிந்ததும், என்ன ஏது என்று விசாரிக்க வந்து விடமாட்டாரா! ஆதலால் நீங்கள் தீர்த்தயாத்திரை சென்ற தலங்கள் தோறும் கண்ட மகிமைகளைச் சொல்லுங்கள், கேட்கிறேன். தூக்கம் வரும்போது தலை சாய்ப்போம்!''

''முடியாது! நான் சொன்னதை நீ கேட்கவில்லையாத லால், நீ சொல்வதை நான் கேட்க மாட்டேன். இருவரும் மௌனமாகப் படுத்திருப்போம். அதுதான் சிறந்த வழி'' என்றான் பார்த்தன் கிண்டலாக.

''தங்கள் சித்தம், என் பாக்கியம்!'' என்றாள் சுபத்திரை ஒய்யாரப் பார்வையுடன்!

பார்வையில் தான் ஒய்யாரம் மிதந்ததே யொழிய மனதில் கவலை ஊடாடியது! சகிக்கும் திறனும் சக்தியு மிருந்ததால் அவ்வளவையும் உள்ளே அடக்கிக் கொண்டு பேச்சிலே இனிமையும், முகத்திலே மலர்வும் கொண்டுதான் கிரியைகளில் ஈடுபட்டு நெறி வழுவாது நின்றாள் சுபத்திரை!

தவிர வேறொரு வகையிலும் சிறப்புள்ளவள் சுபத்திரை! அவள் தேவகியின் பெண்! தேவகியின் சரித் திரம் தெரிந்தவர்கள், அவளது பொறுமையும், மன்னிக்கும் குணமும் மனதும் பற்றி அறிவார்கள்! அவள் வயிற்றி லுதித்த மகள் தயைக்கும், பொறுமைக்கும் பிறப்பிடமாக இருப்பதில் வியப்பென்ன? சுபத்திரையின் வாழ்க்கையில் பார்க்கப்போனால் அமைதி, சந்தோஷம் இரண்டும் மிகக் குறைவென்றுதான் சொல்லவேண்டும்! விபத்துகளையும், வேதனைகளையுமே அவள் அனுபவித்தாள்! அர்ஜுனன் நிர்ணயித்தபடி பேதைப் பெண்ணல்ல அவள்! வருவதை எதிர்கொள்ளும் வீரப்பெண்! கஷ்டத்தைக் கண்டு கலங்காத

வள்! விவேகத்தின் வலிமையால் வாழ்க்கையில் சம்பவித்த இடர்களை, இன்னல்களை எதிர்த்து வெற்றி கொண்டவள்!

சுபத்திரை என்ற பெயருக்குப் பொருளாக இனிய பெண்ணாகவே எல்லோருக்கும் இருந்தாள்! ஆண்டுகள் ஓடின பலப்பல! இப்போது அபிமன்யு என்ற வீரமகனுடைய தாய் அந்த சுபத்திரை!

பாரதயுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.மறுநாள் பத்மவியூகத்தில் புகுந்து, மீள வழி தெரியாமல் மாண்டு கிடக்க விருக்கும் மகனுடைய முடிவை உணர்ந்துவிட்ட சுபத்திரை, உடன்பிறந்தவனை கிருஷ்ணனைத் தேடி வருகிறாள்!

தன் உயிருக்குயிராகிய பார்த்தனுக்கு நாளைக்கு நேர விருக்கும் பேராபத்தைத் தடுப்பதெப்படி? என்ற யோசனையில் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தார் கிருஷ்ணன். தமையனை ஒவ்வொரு இடமாகத் தேடிக்கொண்டு அங்கு வந்தாள் சுபத்திரை. "எங்கெல்லாம் தேடிக்கொண்டு வருகிறேன். இங்கா இருக்கிறீர்கள், அண்ணா!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்து "வா அம்மா, உட்கார், என்ன வேண்டும் உனக்கு?" என்று பரிவோடு கேட்டார்.

"எல்லாம் அறிந்தும் என்ன வேண்டும் என்று கேட்கிறீர்களே அண்ணா,...மாங்கல்யமாவது இருக்கத் தாங்கள் பிரயத்தனம் செய்யவேண்டாமா?..." என்று விக்கியபடி கேட்டாள் சுபத்திரை.

திடுக்கிட்டார் முரளிதரன். நாளை யுத்தத்தில் அபிமன்யு மாளவிருப்பது இவளுக்கு எப்படித் தெரிந்தது?

"அண்ணா, எப்படி எனக்குத் தெரிந்தது என்று பிரமிக்கிறீர்கள். தங்களுடன் பிறந்ததற்கு இந்த ஞானமாவது வேண்டாமா எனக்கு? அபிமன்யுவை இழந்த பிறகு தன் உயிரை வைத்திருப்பாரா எனது நாதன்?"

"சுபத்திரே, அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்..."

"தங்கள் மனத்தில் தோன்றிக் கொண்டிருப்பதை அறிகிறேன். யுத்தம் முடியும் தருணம் நெருங்கிவிட்டது..."



என்று கூறித் திரும்பும் சமயம் அங்கே வந்த ருக்மிணி, "என்ன விசேஷம் சுபத்திரே—எனக்குத் தெரியாமல் உன் தமயனுடன் என்ன ரகசியம்!" என்று ஹாஸ்யமாகக் கேட்டாள். வேதனை நிறைந்த அந்த மன நிலையிலும் புன்முறுவலுடன் "ஆம் தேவி, எங்களுக்குள் எவ்வளவோ ரகசியங்கள் இருக்கும் அதையெல்லாம் உங்கள் காதில் போடக்கூடாது!" என்று கூறிவிட்டு "போய்விட்டு சற்றுப் பொறுத்து வருகிறேன் தேவி!" என்று ருக்மிணியிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றாள் சுபத்திரை.

அவள் மறைந்ததும், "ப்ரியே, சுபத்திரை இந்தச் சிறிய வயதில் இவ்வளவு ஞானியாகிவிட்டது பேராச்சரியமாக இருக்கிறது..." என்றார் கிருஷ்ணன்.

"என்ன சொல்லுகிறீர்கள், பிரபோ?" என்று கொஞ்சம் பீதியுடன் கேட்டாள், ருக்மிணி.

"ஒன்றுமில்லை. வெறும் உண்மையை!" என்று சிரித்தார் பகவான். ஆனால் அவர் முகத்தில் வியாகூலம் பிரதிபலித்ததைக் கண்ட ருக்மிணி அரண்டுபோய் நின்றாள்.

"தேவி, தாமதிக்க நேரமில்லை. ஆயினும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். நாளை யுத்தத்தில் அபிமன்யு வீர சுவர்க்கம் புகவிருக்கிறான்..."

காதுகளைப் பொத்திக்கொண்டவாறு "இதைத் தவிர்க்க வழியில்லையா?" என்று கேட்டாள் ருக்மிணி.

"தேவி, அபிமன்யு மரணத்தைத் தடுக்க இயலாது. அதை நிச்சயமாக அறிந்த சுபத்திரை, ஏதாவது உபாயம் செய்து அர்ஜுனன் உயிரைக்காத்து ஆகவேண்டும் என்பதைச் சொல்ல வந்தாள். அதையும் இப்பொழுதே செய்தால்தான் உண்டு..."

"அபிமன்யு முடிவைப் பற்றி சுபத்திரை அறிவாளா பிரபோ?"

"அறிந்து கொண்டதோடு மட்டுமல்ல; தேவி, மகத்தான புத்திர சோகத்தை—அவன் யுத்தத்தில் மடியப்

போவதை முன்னதாக அறிந்து-அவன் ரணரங்கம்புகுமுன் தன் தாயிடம் உத்தரவு பெற வந்து வணங்கி நிற்கும் போது அவள் உள்ளம் என்ன பாடுபடும்? புத்திரனிருக்கும் போதே—அவன் இறந்துபோகப் போகிறான் என்பதை அறிந்துகொண்டு—அதை மனதுக்குள்ளேயே புதைத்துக் கொண்டு—தன் துக்கம் பெரிதல்ல—தான் தெய்வம் என வழிபடும் தன் நாதனுடைய உயிரைக் காப்பாற்றவேண்டும் என்ற பிரதிக்ஞையுடன் என்னை நாடி வந்து அர்ஜுனன் உயிரைக்காக்க, என்னவாவது செய்து எனக்கு மாங்கல்ய பிக்ஷை கொடு என்று மன்றாடவந்தவளை-நீ, விஷயமறியாமல் பரிகாசம் செய்தாய்! அதையும் ரசித்தவள் போல பதில் சொல்லிவிட்டுப் போகும் அவளுடைய ஞான ஸம்பத்தை எப்படிப் புகழ்வது தேவி?''

''இதெல்லாம் இருக்கட்டும். அபிமன்யுவைக் காக்க வழி தேடுங்கள்...''

''அது பிரயோஜனமில்லை தேவி... அபிமன்யுவின் ஆயுள்மிக அற்பமானது...''

''ஐயோ...கர்ப்பவதியான உத்தரை என்ன ஆவாள்?''

''ஒன்றும் ஆகமாட்டாள்! அர்ஜுனனுக்குப் பேரன் பிறப்பான்!''

''பேரன் பிறப்பது இருக்கட்டும். அபிமன்யு மாண்ட பிறகு, பார்த்தன் உயிர் வைத்திருப்பாரா?—அனைவரும் கூட்டோடு கைலாசமாகி விடுவார்களே பிரபு...ஆ! இதற்கா யுத்தம் மூண்டது? சுபத்திரே, என் கண்மணி—இந்தக் கதிக்கா...அர்ஜுனனை வரித்து மணந்துகொண்டாய்?...'' என்று சுபத்திரை மீது வைத்த அளவற்ற பாசத்தால் துடித்துக் கண்ணீர் பெருக்கினாள் ருக்மிணி.

பரந்தாமன் இரக்கத்துடன், ''தேவி, சாந்தியடைவாயாக. காலகதியை மீற யாரால் முடியும்? சுபத்திரை அனைத்தையும் நன்கு அறிந்து திடமடைந்துவிட்டதுதான் எனக்கு அடங்காத ஆச்சரியம். இனி நான் அர்ஜுனனுடைய உயிர் நிலைக்க வழி செய்யவேண்டும். திரும்பி வந்து உனக்கு



யாவும் தெரிவிக்கிறேன். நாழிகையாகிவிட்டது. அதோ யுத்த பேரிகைகள்...அர்ஜுனன், பாசறையை அடையுமுன்பு அவனைப் பயப்படுத்தி [illegible]'' என்று கூறிவிட்டு படபடப்புடன் எழுந்து தென்திசையில் நடந்து சென்றும் அர்ஜுனனை நாடிச் சென்றான்.

அன்றைய யுத்தத்தில் பகைவனை வென்றுவெற்றி ஜயலக்ஷ்மி குடிகொண்ட முகப்பிரகாசத்துடன் காண்டீபத்தைச் சுழற்றிக்கொண்டு தனது பாசறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான் விஜயன்.

வரும் வழியில் தீயின் செந்நிற நாக்குகள் வானை நோக்கி பெரு-சுடர் விட்டுக்கொண்டு எரியும் அக்னி குண்டத்தையும், அதனைச் சுற்றிவரும் வயோதிக அந்தணரையும் கண்டு ஒரு விநாடி திகைத்து நின்றான்.

தீயினை வலம் வந்த அந்தணர் கைகளை உயரத் தூக்கி பிரார்த்தனை புரிந்து தீயில் இறங்க ஆயத்தமாக நிற்பதைக் கண்டு ஓடோடியும் சென்று அந்தணருடைய கரங்களைப் பற்றிக்கொண்டு ''விப்ர சிரேஷ்டரே, என்ன காரியம் இது'' என்று கேட்டான் விஜயன்.

''ஐயா, என் மகன்...என் ஒரே குலத்தோன்றல் மடிந்துவிட்டானைய்யா, அப்பா, என் கண்மணி...'' என்று மாய்ந்தும், வருந்தியும் அரற்றிக்கொண்டு தீயில் விழக் கருதி வெறிபிடித்தவர்போல ஓட முயன்றார் அந்தணர்.

அர்ஜுனன் அவரை வலித்திழுத்து ''ஐயா! உட்காரும். சொல்லுகிறேன். மகன் இறந்துவிட்டானென்று தீயில் விழுகிறேன் என்கிறீர்?'' என்று கேட்டான்.

''விழாமல் இனி எனக்கென்ன இருக்கிறது வாழ்வில். புத்திர சோகத்தை அனுபவித்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சாவதைவிட ஒரே அடியாக இவ்வுயிரை அழித்துவிடுகிறேன்...''

''என்றுமிருக்கிறதே உமது தீர்மானம். மகன் காலமாகிவிட்டது அவன் போய்விட்டான். உம் காலம் முடிந்

தால் நீரும் தன்னாலே போகிறீர்! இதற்காக ஆத்மஹத்தி செய்துகொள்வார்களா, யாராவது?" என்று நீளப் பேசிக் கொண்டே வந்த அர்ஜுனனை அந்தணர் கனல் கக்கும் கண்களால் பார்த்து, "ராஜகுமாரா, துக்கத்தின் அனுபவம் இன்னதென்று உனக்குத் தெரியாததால் என் துக்கத்தை நீ விளையாட்டாக—புத்திரசோகத்தைச் சாமானியமாக நினைத்து ஆறுதல் கூறுகிறாய்...." என்றார்.

"அந்தணரே, அப்படிக் கேளும். இந்தப் பாரத யுத்தத்தில் எனது கணக்கற்ற பந்துக்கள் மாண்டிருக்கிறார்கள். இன்னமும் மாளவிருக்கிறார்கள்."

"பந்துக்கள் மாள்வதும், மகன்—பெற்றமகன்—வாலிப வயதில் மடிவதும் ஒன்றுதானா?"

"ஒன்று தான் என்று கூறவில்லை நான்! புத்திரசோகம் பொல்லாதது தான். ஆனால் அதை சகித்துத்தான்...."

"எல்லாம் பிறருக்குச் சொல்லலாம்.. .தனக்கு வந்தாலல்லவா தெரியும்?"

"அந்தணரே, எனக்கும் வரலாம்...என் மைந்தர்கள் யுத்த களத்தில் இருக்கிறார்கள்..."

"வேண்டாமையா, எனக்கு வந்ததுபோதும். 'விஷயத்தைச் சொல்லிவிடு. பிறகு கையை விடுகிறேன்' என்றாயே. சொல்லிவிட்டேன் விடு கையை."

"ஐயோ பாவம்! வேதமோதிய விப்பிரருடைய விவேகம் இப்படியா சிதறிப்போய்விடும்! பிராம்மணரே, சொல்வதைக் கேளும். பேசாமல் திரும்பிப்போம்."

"முடியவே முடியாது, என் துக்கம் உனக்கென்ன தெரியும்? பெற்ற பிள்ளை போனபிறகு ஜீவித்துக்கொண்டிருக்க முடியாது என்றால்."

"அனைத்தும் அவன் செயல் என்று திரும்பிப்போம்."

"ராஜகுமாரா! வீணாக என் துக்கத்தைத் தூண்டுகிறாய். நாளை யுத்தத்தில் உன் மகன் அபிமன்யுவை நீ இழந்



தால் அப்பொழுது தெரியும் உனக்கு. புத்திரசோகம் என்ன என்பது..." என்று துக்கமும், ஆத்திரமும் பொங்கக் கூறினார் விப்பிரர்.

அர்ஜுனன் சாவதானமாக "சிறந்த அந்தணரே, பிறப்பும், இறப்பும் மானிட இயல்பு. அபிமன்யுவை நாளை யுத்தத்தில் இழக்க நேரிட்டால் நான் உம்மைப்போல தீயில் விழமாட்டேன்!"

"எல்லாம் வாயால் சொல்லலாம்."

"சத்தியம் செய்து தருகிறேன் வேடிக்கையல்ல. என் காண்டீபத்தின் மீது ஆணை அது. சுகம், துக்கம், எல்லாம் வாஸுதேவனிடம் ஒப்பியும். அப்புறம் சிந்தையேது? திரும்பி வாரும் போவோம்..." என்று புறப்பட்டான் அர்ஜுனன்.

மறுநாள் யுத்தத்தில், கௌரவ சேனையின் ஜய பேரிகை முழக்கத்தைக் கேட்டதுமே பார்த்தனுக்கு அபிமன்யு இறந்துவிட்டான் என்ற விஷயம் விளங்கிவிட்டது. கையிலிருந்த காண்டீபத்தைக் கீழே போட்டுவிட்டு "அபிமன்யு, என் கண்மணி!" என்று அலறியவாறு தேரிலிருந்து கீழே குதித்து ஓட்டமாக ஓடினான் பார்த்தன்.

தேர்த்தட்டிலிருந்த பகவானுடைய நெஞ்சம் கலங்கிற்று. 'சுபத்திரே, வீரசிகாமணியான உன் புதல்வனை இழந்துவிட்டாய்' என்று நினைத்த மாத்திரத்தில் அர்ஜுனனுக்குத் தான் ஆற்றவேண்டிய செயலை நினைத்து தேர்த்தட்டிலிருந்து இறங்கி அவனைத் தொடர்ந்து ஓடினார்.

பாசறைக்குச்செல்லும் வழியில் பெரியதொரு அக்கினிப் பிழம்பைக் கண்டார். துக்கத்தாலும், சினத்தாலும், உடலும் உள்ளமும் துடிக்க அக்கினியில் மூழ்கத் தயாராக நின்று, "நிகரில்லாதவனே! என் குழந்தாய்! உன்னை இழந்துவிட்டு இனியும் இவ்வுயிரை வைத்திருக்க மாட்டேன்..." என்று புலம்பியவாறு ஜொலிக்கும் அக்னியைப் பார்த்து, "செல்வமே, இரு. நீ செல்லுமிடத்திற்கு இதோ நானும் வருகிறேனடா..." என்று உரக்கக் கூவியபடி தீயில் குதிக்க உயர எழும்பினான் விஜயன்.

பலமான கை ஒன்று தன் கையைப் பற்றி நிறுத்திய தைக் கண்டு திரும்பிப் பார்த்து, "ஸ்ரீதரா, போதும் உன் பரிவு விடுகையை" என்று சீறினான் பார்த்தன்.

"அழகாக இருக்கிறது உன் யோக்யதை! உனக்கு ஒரு நீதி, ராஜ்யத்திலுள்ள அந்தணருக்கு ஒரு நீதியோ!"

திடுக்கிட்டு பிரமை தட்டி நின்றான் பார்த்தன். முதல் நாள் மாலையில் நடந்த சம்பவம் அவன் நினைவிற்கு வந்தது.

"மாதவா, அது உன் சூது; கபடநாடகம்; உன் வேலைத் தனம்...இந்த அனர்த்தத்தை முன்னதாக அறிந்து....நீ செய்த அக்கிரமம்..."

"பகைவரை வெல்லும் விஜயனே, சாந்தியடைவாயாக. கர்ம கதியின் விளைவை எவ்வளவு எடுத்து ஓதியும் நீ இப்படி பேடியாகி, பெண்களைப் போல உயிரழிவுக்காகப் பரித வித்து அழுதுகொண்டு அக்கினிப்பிரவேசம் செய்ய நினைத் தாயே...., பகைவர்கள் கைதட்டிச் சிரிக்கமாட்டார்களா உன்னைப் பார்த்து?" என்று கூறியவாறு அர்ஜுனன் கையைப்பற்றி "வா, பாசறைக்குச் செல்வோம். பாவம், அங்கே சுபத்திரையும், உத்தரையும், பாஞ்சாலியும் எப் படித் தவிக்கிறார்களோ—" என்று பரிதவிக்கும் குரலில் கூறியபடி அர்ஜுனனுடன் வேகமாக நடந்தார்.

பாசறையில் எழுந்த அழுகையொலி வெகுதூரத்திற் கப்பால் வந்துகொண்டிருந்த கிருஷ்ணார்ஜுனர்களுடைய காதில் விழுந்தது! ஓட்டமும் நடையுமாக விரைந்து வந்து பார்க்கும்போது, தீக்குளித்து 'சதி' யாக வேண்டுமென்ற உத்தேசத்தோடு புறப்பட்ட உத்தரையைச் சமாதானம் செய்து அம்முயற்சியினின்றும் விடுவிக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தாள் பாஞ்சாலி. சுபத்திரையோ, வயிற்றை அள்ளிப் பிடுங்கும் கொடுமை மிக்க புத்திர சோகத்தையும் நெஞ்சிலே அடைத்துக்கொண்டு செயலற்றுச் சிலையாகி யிருந்தாள்!

போர்க்களத்தில் கணவன்மார்களைப் பறிகொடுத்த பெண்கள் தீப்புகவென்று மூட்டப்பட்ட தீக்குழி 'திகுதிகு'



என்று பற்றி எரிந்தது. அந்தத் தீயில் புகுந்தாள் பாஞ் சாலியின் பிடியிலிருந்து திமிறி ஓட முயன்றாள் உத்தரை!

பாஞ்சாலி குரலெடுத்து, "சுபத்திரே, இதோ பார் இந்த உத்தரையை; சிசுஹத்தி செய்யத் துணிந்துவிட்ட இந்தப் பெண்ணைக் கூப்பிடு..." என்று இரைந்தாள்!

சட்டென்று திரும்பிப் பார்த்தாள் சுபத்திரை. "தாயே, உத்தரவு கொடுங்கள், மறுக்காதீர்கள்," என்று ஓலமிட்டாள் உத்தரை.

"இப்படி வா, சொல்லுகிறேன்" என்றாள் சுபத்திரை.

தள்ளாடிக்கொண்டு அருகில் வந்த உத்தரையைப் பற்றி உட்காரவைத்து, "உத்தரை, எந்த ஆபத்திலும், எப் படிப்பட்ட கொடிய துக்கத்திலும் காரிய காரணங்களை அனுசரித்தே செயல் புரியவேண்டும். பாண்டவர்களின் குலக்கொழுந்தை உதரத்தில் கொண்டிருக்கும் நீ, சதியா வது எங்ஙனம் முடியாது" என்றாள்.

"என் பதியை விட எனக்கு எதுவும் உயர்வில்லை..."

"உண்மைதான். ஆனால் பாண்டவகுலத்தோன்றலை நீ அழிப்பது கூடாதே! ஆதலால் பொறு குழந்தாய்! பொறு! வீரனுடைய மருமகள், வீரனுடைய பத்தினி, வீரனுடைய தாயாகவுமிருக்கப் போகிறாய்! கட்டழகனை, வீர அபி மன்யுவை நான் ஈன்றேன், நீ கைப்பிடித்தாய்! அவனை இழந்த நமது சோகத்திற்கு எல்லையில்லை! பதியிருக்க, நான் உயிர்விட வழியில்லை. புத்திரனை வயிற்றில் கொண்டிருக் கும் நீயும் உயிர்விட வழியில்லை! நாம் பெண்மக்கள்! சகிப் பும், உடைமையுணர்வுமே நமது பிறப்புரிமை! அழுது புலம்புவ தாலும், அடம் பிடிப்பதாலும் பெண்மைக்குரிய பெரும் மேன்மையைக் குலைத்துவிடுகிறோம்!"

"ஐயோ, சுபத்திரை, என் வீர மகனை, அபிமன்யுவை" என்ற அலறல் அடங்கு முன்பு தடாலென்று பூமியில் வீழ்ந்தான் அர்ஜுனன்!

எழுந்துவந்து பார்த்தனை எழுப்பி ஆசுவாசப்படுத்தி, "பிராணபதி, க்ஷத்திரியர்களுக்குத் தகாத செயல். அவமா

னம், எழுந்திருங்கள், நிகரற்ற வீரமைந்தனைப் பெற்றோம் - பெருமைகொண்டோம். அவனது போர் விளையாட்டுகள், வீரசாகசங்கள், தோள்வலி கண்டு உள்ளம் பூரித்துப் புளகமுற்றோம்! இன்று போரில் புறமுதுகு காட்டாது, சாவை வரவேற்று வீரசுவர்க்கம் புகுந்த வீரமைந்தனை நம் மனத்தகத்தே நினைத்து நினைத்து நாட்களை ஓட்டவேண்டியதே. நமக்கு அவன் ஈமக்கடன் ஆற்றவேண்டியதிருக்க, அவனுக்கு நம் கண்முன் நீர்க்கடன் நிகழ்வதைக் காண நேர்ந்திருக்கிறது. காண்போமே! எழுந்துட்காருங்கள். அண்ணா, உத்தரைக்குத் தேறுதல் கூறுங்கள். அழலாடி, அபிமன்யுவைத் தொடர்கிறாளாம்...." என்றான் சுபத்திரை சோகம் மண்டிய குரலில்!

"இல்லை மாமா, தேவியாரின் ஞானோபதேசத்தால், உத்தேசத்தை மாற்றிக்கொண்டுவிட்டேன்! பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய வீரமைந்தனைப் பறிகொடுத்துவிட்ட சோகத்திலும், தம்மைத் தேற்றிக்கொண்டு, எனக்கும் கடமைகளை எடுத்துக் கூறினாரே?..."

"அவள் யாரம்மா? பிள்ளைகளைப் பெற்று, உயிரோடு தூக்கி அண்ணன் கையில் சாகக் கொடுத்த பொறுமைசாலியான தேவகி தேவியாரின் பெண்ணல்லவா? தாயின் பொறுமையில் மகளுக்கும் பங்கு இருக்குமே! அதனால்தான் வீரசிகாமணியான அபிமன்யுவைப் போர்க்களத்தில் அம்புக்கு இரைகொடுத்து அதையும் தாங்குகிறது அவளது பண்பட்ட உள்ளம்! இந்த தெய்வீக சக்தி ஆண்குலத்திற்கேது? அதனால் மூர்ச்சித்து விழுந்தான் விஜயன்! தரும, வீம, நகுல சகாதேவர்களும் இதே தாக்குதலுக்கு ஆளாகியிருப்பார்கள். சுபத்திரே, வாய்விட்டு அழுது துக்கத்தைச் சற்று வெளியேற்றேன். இல்லாவிடில் உன் நெஞ்சு தாங்காது குழந்தாய்!...." என்று சுபத்திரையின் உயிர்க்குயிரான கிருஷ்ணன் விம்மினார்!

"ஏன் அண்ணா தாங்காது? கண்ணான குழந்தை இறந்துவிட்டான் என்ற செய்தி கேட்டதுமே, வெடிக்காத என் நெஞ்சு, இனிமேல் சாலகாசமாக வெடிக்கப் போகிறதா என்ன? அதெல்லாம் ஒன்றும் நேராது; திகில்



அடையாதீர்கள். இன்னும் என்னவெல்லாம் இருக்கிறதோ மீதியாக! அவையனைத்தையும் அனுபவிக்க வேண்டாமா? நானொருத்தி மட்டுமா? பெண்குலமே இந்த மகத்தான செயலில் தான் மேன்மையடைகிறது!" என்றாள் திடமான குரலில்.

கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு துக்க மிகுதியால் வெறுந் தரையில் புரண்டு உயிர் துடிக்க அழுது கொண்டிருந்த உத்தரைக்கு ஆறுதல் கூற எழுந்து சென்றார் பரந்தாமன்!

பார்த்தனுக்குத் தேறுதல் கூறி கீதா வாக்கியத்தின் பெருண்மையை எடுத்துக்காட்டி ஒருவாறு சோகத்திலிருந்து மீளச் செய்தாள் சுபத்திரை. பின்னர் தனிமையை நாடினாள்! பத்து மாதம் சுமந்து, பெற்று, தன் கையாலேயே பாலூட்டி நீராட்டி, சீராட்டி வளர்த்து ஆடையாபரணங்கள் அணிவித்து அழகு பார்த்து வீரதீரத்துக்குப் பார்த்தனையே வெற்றிக்கொள்ளத் தக்க சௌரியம் படைத்த மகனை—ஓரே ஒரு தலைமகனை—திறனும், தென்புமிருந்தும், வியூகத்திலிருந்து மீளும் வழி தெரியாமல் உள்ளே சிக்கி, வெளியேறமாட்டாது, உயிரைக் காவு கொடுத்த மகனை நினைத்துப்பெற்ற வயிறு காந்தியது. "என் செல்வமே, மீளத் தெரியாமலோ மாண்டாய்?" என்று அலறி அழுதது நெஞ்சு. வயிற்றை எக்கி இரு கையாலும் நெஞ்சை நீவி சேர்த்துப் பிடித்துப் பிசைந்துகொண்டும், அகத்தினுள் துக்கானலைத்தையும் விட்டுக்கொண்டும் தணிக்க முயன்றாள்.

அபிமன்யுவின் மரணத்தைப்பற்றிப் பகைவர்களே அனியாயப்பட்டார்கள் என்றால் ஈன்ற வயிறு என்ன பாடுபடும்!

இவ்வித துக்கத் தீயால் தீய்க்கப்பட்டும் ஞான சாதனையின் வலுவால் வாழ்வில் காணும் துக்க, துயரங்களை அடக்கிக்கொண்டு, கருமநெறிக்கு உட்பட்டு தமக்குரிய கடமைகளிலிருந்து வழுவாமல் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் சுபத்திரை போன்ற பெண் திலகங்கள்.

## கொக்கென நினைத்தாயோ, கொங்கணவா?

கொழுநனைத் தெய்வமாகப் போற்றித் தொண்டு புரிந்து பத்தினிப் பெண்ணுக்குரிய பெரும் பேற்றை அடைந்தவர் வாசுகியம்மையார்.

கொங்கணவன் என்பவன் ஒரு சித்தன்! எடுத்ததற்கெல்லாம் சாபமிடுவான். தன்னை மதியாத யாரையும், கண்ணழலால் எரியூட்டிப் பார்த்து மகிழும் குரூர சித்தம் படைத்தவன்! அரைகுறை சித்தியிலேயே அவ்வளவு ஆணவம்!

இந்த குணசீலன், குளக்கரைக்குப் போனான் சந்தி ஜபத்துக்காக! சந்தி செய்யும்போது தலைக்கு மேலிருந்த மரக்கிளையிலிருந்த கொக்கு ஒன்று கொங்கணவன் மீது எச்சமிட்டுவிட்டது! 'சீ' என்று வெறுத்து தன்னை இவ்வாறு அசுத்தப்படுத்திய ஜீவனைச் சுட்டெரிக்க வேண்டும் என்ற நினைப்புடன் அண்ணாந்து பார்த்தான்!

பாவம்! கொக்கு அப்படியே எரிந்து சாம்பி நிலத்தில் உதிர்ந்து விட்டது! தனது சக்தியைக் கண்டு உள்ளம் பரமானந்தமடையப் புறப்பட்டான் இடத்தைவிட்டு.

தினந்தோறும், பிச்சையெடுத்து உண்பவனாதலால், அன்றும் பிச்சைக்காக வந்தான் வாசுகியம்மையாரின் வீடு தேடி, வாசலில் நின்று பிச்சை கேட்டான்.

அம்மையார் உள்ளே கணவரது தொண்டில் ஈடுபட்டிருந்தாரோ என்னவோ, பிச்சை கொண்டுவரச் சற்று நேரமாகிவிட்டது. அலுவல் முடிந்ததும் பிச்சை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தார் வாசுகி அம்மையார்!



கொங்கணவனுக்கு ஒரே கோபம்! உற்று நோக்கினான் அம்மையை! உருட்டி விழித்தான்!

அம்மையார் மெல்லிய குரலில், "என்னையும் கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?" என்று கேட்டு நகைத்தார்!

வெலவெலத்துப் போனான் கொங்கணவன்! குளக்கரையில் கொக்கை நிமிர்ந்து பார்த்துத் தீய்த்து சாம்பலாக்கி விட்டது இந்த அம்மைக்கு எப்படித் தெரியும்? என்று யோசித்தான்!

கொங்கணவனுடைய பேதமையை எண்ணி அவன் மீது கருணை கூர்ந்து, அவனுக்குப் புத்திமதி கூறி அனுப்பினார்கள் வள்ளுவப் பெருமானும், அம்மையாருமாக!

வாசுகியம்மையாரின் கற்பெனும் அழலுக்கு முன்பு கொங்கணவனின் கோபத்தீ என்ன செய்யும்!

பிறவியிலேயே வாசுகியம்மையார் அடக்கமும் எளிமையும், பொறுமையும் அணிகலன்களாகக் கொண்டு பிறந்தவர்! வள்ளுவநாயனாரை மணந்து இல்லறம் புகுந்ததும், அவரது நற்குணங்களுக்கு மேலும் சக்தி பெருக, பதிவாக்குக்கு எதிர்வாக்குப் பகன்றறியாத அன்னாரது பதிபக்தி துணை புரிந்தது!

பதியின் வாக்குக்கு—எதிர்வாக்கு என்பதே வாசுகியம்மையார் பேசி அறியார் என்பதற்குச் சான்றாக ஒன்று சொல்வது உண்டு!

உணவு கொள்ளும் தோறும், ஒவ்வொரு நேரமும், ஒரு கொட்டாங்கச்சியில் நீரும், ஒரு ஊசியும் கொணர்ந்து வைக்கும்படி உத்தரவு இடுவாராம் வள்ளுவர்.

அது எதற்கு என்று கேட்காமலே, தினசரி இரு நேரமும் அவ்வாறு, கொட்டாங்கச்சி நீரும், ஊசியும் வைத்து வந்தார் அம்மை. எதற்காக இப்படி வைக்கச் சொல்லுகிறார் என்பதை மனத்தால் சிந்தித்ததைத் தவிர வாய்விட்டுக் கேட்டதேயில்லை!

அந்திம காலம் எய்திய தருணம், இந்தச் செயலின் காரணம் அறியாது உயிர்போனால் நெஞ்சு வேகாதே என்ற ஐயத்தினால் கொழுநனை அருகில் அழைத்தார். கை கூப்பி வணங்கி, தனது சந்தேகத்தைக் கேட்டார்!

மனைவியின் வேண்டுதலைச் செவியுற்றதும் வள்ளுவருடைய கண்களில் நீர் பெருகியது! "இவ்வளவு நாளாகவா இதை மனதில் வைத்துக்கொண்டு கேட்காமலிருந்தாய்? அன்புடையாளே, அன்றே கேட்டிருக்கக் கூடாதா? கேட்டால் அபசாரம் என்று கருதினாயோ? வேறெதற்குமில்லை! நீ பரிமாறும் சமயம் சோற்றுப் பருக்கை கீழே சிந்தினால், ஊசியால் எடுத்துவிட்டு, நீரால் கை கழுவவே வைக்கச் சொன்னேன்! ஒரு நாளாவது, நீ சிந்தியதேயில்லையாதலால், உனக்கு விஷயம் விளங்கவில்லை!" என்றார் வள்ளுவர்.

வாசுகியம்மையார் எடுத்த பிறவி பயன்பெற்றதென்ற நிறைவுடன் நெடுமூச்சொன்றைவிட்டு வாழ்வை நீத்தார்.

வள்ளுவருடைய துக்கம் எல்லையை மீறியது!

அடிசிற்கினியாளே அன்புடையாளே
படிசொல் தவறாத பாவாய்—அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என் தூங்கு மென்கண் இரா.

என்று பாடித் துக்கித்தார்!

வாசுகியம்மையார் பெற்ற இத்தகைய பேறு, பெண் மக்களாகிய நம்மனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற பேரவாவுடன் பெண்ணறத்தைப் போற்றிக் கடைப்பிடிப்போமாக!

அன்புடை கணவர் அழிதக செயினும்
பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை

என்ற குறள் அடிக்குச் சான்றாக, பொறையே உருவாகக் கணவனின் தகாச் செயலைப் பொறுத்திருந்தாள் கண்ணகி!

சிலம்பு விற்கச் சென்ற கோவலனை-பொற்கொல்லனுடைய புனைந்துரையை நம்பி, கோவலனுக்கு சிரசாக்கினை யளித்தான் பாண்டியன் நெடுஞ்செழியன் என்று அறிந்-



தும், கற்பரசி கண்ணகி, சினமூண்டு மதுராபுரி சென்றாள்-நெடுஞ்செழியனது அநீதியை அவன் முகத்துக்கு நேரே இழிந்துரை செய்து, தன் கணவன் குற்றமற்றவன் என்று ருசுப்பிக்கச் சிலம்பினை உடைத்து, அம்பலப்படுத்தினாள்!

ஆராயாமல் செய்த பிழையால் நேர்ந்த கோரச்செயலை எண்ணித் தன்னைத்தானே கள்வனெனப் பழித்துக் கொண்டு, கெடுக ஆயுள், என்று கூறி அரியாசனத்திலிருந்து விழுந்து இறந்தான் பாண்டியன் நெடுஞ்செழியன்!

அவன் மனைவியோ கணவனிறந்த அக்கணமே ஆவி துறந்து 'தலையாய கற்புடை பெண்' என்ற உயர் மாண்பினை எய்தினாள்! அவளும் கணவனைத் தெய்வமெனத் தொழுத பெண்மணியல்லவா?

மதுரையை எரியூட்டிய கண்ணகி தேவியையும், பாண்டியன் மனைவியையும் நாம் வணங்க வேண்டியவர்களாகின்றோம்.

பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டும் பாண்டியனிறந்ததும் அவனுடன் எரி புகுந்த உத்தமி! கணவனைப் பிரிந்து உயிர் வாழ மறுத்த நங்கை!

அரசிகள் மட்டுமல்லாது அக்காலத்து மங்கையர்கள் அனைவருமே வீரத்திலும், கற்பிலும், விவேகத்திலும் சிறந்து விளங்கியிருக்கிறார்கள் என்பதற்கு ஏராளமான சங்ககாலப் பாடல்களில் காணக்கிடக்கின்றன!

நாட்டுக்குச் சேவை செய்யவேண்டிய போர்க்காலங்களில், கணவன்மார்களை, பிள்ளைகளை வீர உணர்ச்சி மேவிட விடைகொடுத்துப் போர்முனைக்கு அனுப்புவதோடல்லாமல் அவர்கள் மாண்டுவிட்டால், மார்பிலே ஆயுதம் பாய்ந்து மாண்டார்களா என்பதைத்தான் முதலில் அறியத்துடிப்பார்கள்! துக்கம்கூட அப்புறம்தான்!

புறமுதுகிட்டு ஓடி, முதுகில் வேல் பாய்ந்து உயிர் விடுவதைப் பெருத்த அவமானமாகக் கருதிக் குமுறிய வீர மாதர்களுடைய உன்னத லட்சியங்களைப் பற்றி, அநுப்ப

சலிப்பில்லாமல் எத்தனை தரமாயினும் படிக்க ஆவல் மூளுகிறது!

ராஜபுத்திரப் பெண்மணிகளும் கற்பினைக் காக்கும் நோக்கில் பகைவர் கைக்கு அகப்படாமல் அக்னியிலே தீப்பாய்ந்து கற்பைக் காத்துக்கொள்ளத் தவறாத உத்தமிகள்!

சத்ரபதி சிவாஜியின் அன்னை ஒரு லட்சியத்தாய். அகல்யாபாய் ஒரு ஆதர்சப் பெண்மணி. பகைவனுக்கு பணியாமல் போர் புரிந்து வீரசுவர்க்கம் புகுந்தவள் ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய்!

இவ்வாறு, ஞானமும், வீரமும், கற்பும் பொறையும், நேர்மையும் கொண்டு வழி வழியாக வரும் நமது பாரதப் பெண்குலம் இனியும் சீரும், சிறப்பும் உள்ளளவும் மாதர் குல மாணிக்கங்களாக மூதாட்டிகள் காண்பித்துள்ள அற வழியே நடந்து சென்று, தனிப்பெரும் பெருமை மிக்க பெண் சக்தியைக் காத்து வரவேண்டும்.



# ஔவையார்

பிறக்கும்போதே கவிபாடும் ஆற்றலுடன் பிறந்த ஔவையாரை, அறிஞர்கள் வாணியின் அவதாரம் என்றே போற்றுதல் செய்கிறார்கள்.

பெற்ற குழந்தையை விட்டுவிட்டு எவ்வாறு பிரிந்து செல்வேன் என்று ஏங்கித் தவித்த தாயைப் பார்த்து,

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்ட சிவனும் செத்துவிட்டானோ-முட்ட முட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

என்று பாடி, தாய்க்கும், மகவுக்குமுள்ள பற்றை அறுத்து விட்டு அனுப்பிய ஞானியன்றோ ஔவையார்? அற முறை [illegible] வளர்க்க வேண்டியே பிறவியெடுத்த ஔவையார் சிறு வயதிலேயே விநாயகருடைய அருளால் முதுமையை வரமாகப் பெற்றுத் துறவு பூண்டு காடுதோறும் நடந்து சென்று, மனிதகுலம் செய்யும் நல்வினை, தீவினைகளின் பலாபலன்களை விளக்கும் பாடல்களைப் பாடிக் குவித்தார்! அரசர்களிடையே, போர்களும் பூசல்களும் எழவிருந்த சமயங்களிலெல்லாம் ஔவையார், முன்வந்து, அரசர்களுக்குரிய பொறுப்பு, கடமை, அறமுறைகளை எடுத்தோதி உணர்வித்து, நிகழவிருந்த அனர்த்தங்களைத் தவிர்த்திருக்கிறார். கர்வமுற்றுத் திரிந்த புலவர்களின் செருக்கை அடக்கினார்!

புலவர்களுடைய செருக்கை உணர்ந்த அரசன், புலவர் அவை நோக்கி ஓர் இரவுக்குள் நாலுகோடிப் பாடல்களைப் பாடி முடிப்பவர் யாரோ அவரே புலவரேறு என்று ஒரு அறிவிப்புச் செய்தார்!

புலவர்கள் திடுக்கிட்டார்கள், திகைத்தார்கள்! ஒரு நாளுக்குள் நாலுகோடிப் பாடல்களைப் பாடி முடிப்பது எப்படி என்று தவித்தார்கள்!

அச்சமயம் அவ்விடம் வந்த ஔவையார், புலவர்களுடைய கவலைக்குக் காரணம் வினவினார். அவர்கள் அரசனுடைய அறிவிப்பைக் கூறி முறையிட்டார்கள்!

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்.
உண்ணீருண்ணீ ரென்றுபசரியார் தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும்.
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடை நாக்
கோடாமை கோடி பெறும்.

என்று சிரமமில்லாமல், அதேகணத்தில் நாலு கோடிக்குக் கணக்கிட்டுப் பாடிக் காண்பித்த ஔவையாரின் சாதுரியத்திற்கு முன்பு புலவர்களின் கர்வம் போனவிடம் தெரியாமல் போய்விட்டது!

புலவர்கள் செருக்கழிந்தது ஒரு பகுதி! ஒவ்வொரு கோடிக்கு ஔவையார் கொடுத்துள்ள அருமையான உவமைகளின் பொருள் பொதிந்த கருத்துகள்தான் எத்தகைய சிறந்த வாய்மைகள்?

பறம்பு நாடுடைய பாரிவள்ளல் போர்க்களத்தில் இறந்து பட்டதும் அவனுடைய அருமைப் பெண்கள் இருவரும் பெண்ணை நதியின் தென்கரையில் குடிசை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். ஔவையார் ஒருசமயம் அவ்வழியே தமது பயணத்தைத் தொடர்ந்தபோது, குடிலில் தங்கியுள்ள பெண்களிருவரும் பாரியின் பெண்கள் என்று தெரிந்ததும் துடித்துப் போனார். பாரியின் பெண்களுக்கா இக்கதி என்று பொங்கினார்! அவர்களைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அவர்களுக்குத் திருமணம் செய்விக்க வேண்டுமெனக் கேட்டுத் தாம் வழிபடும் கணபதியை எவ்வாறு அழைக்கிறார்?



ஒரு கொம்பிரு செவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய்—பரிவுடனே
கன்னால வோலைக்கடிதெழுத வாராயேல்
தன்னாண்மை தீர்ப்பன் சபித்து,

என்று, கணபதியிடம் தமக்குள்ள ஈடுபாட்டை உணர்த்தி அன்புடன் மிரட்டுகிறார்! கன்னால ஓலை எழுதி முடிகிறது! சோழனுக்கு முதல் ஓலையில்,

புகார் மன்னன், பொன்னிப்புனலுடன் சோழன்
தகாதென்று தானங்கிருந்து—நகாதே
கடிதின் வருக கடிக்கோவலூர்க்கு
விடியப் பதினெட்டா நாள்.

என்று கட்டளையிட்டு அழைத்தார் அதிகாரமாக!

அடுத்து அனுப்பிய பாண்டியனுக்கெழுதிய ஓலையில்,

வையைத் துறைவன் மதுராபுரித் தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டியன கொண்டு விடிய வீரொன்பா நாள்
ஈண்டுவருக விசைந்து

என்று எழுதியனுப்பினார் சுவாதீனமாக! சோழனுக்கு அனுப்பிய ஓலையில் 'தகாதென்று தானங்கிருந்து-நகாதே' என்றும், பாண்டியனுக்கு அனுப்பிய ஓலையில், 'செய்யத் தகாதென்று தேம்பாதே' என்று ஐயம் தீர்க்கும் வகையில் கட்டளையிடுகிறார்!

ஏனெனில் பாரியின் பெண்கள் இப்போது, சீர்மையற்ற குமரிகளல்லவா? அதனால், நாம் அவர்களை மணம் செய்துகொள்ளத் தக்கதல்ல என்று தாழ்மையாக நினைத்து விடாதீர்கள், உங்கள் மதிப்புக்குரிய நான் முன் நின்று, முல்லைக்குத் தேரீந்த பாரிவள்ளலின் பெண் மக்களுக்குச் செய்விக்கும் இந்தத் திருமணம், பாரியிருந்து நடத்தி வைப்பதற்கும் மேலான முறையில் நடக்கும் என்பதை வெகு சூசனையாகப் 'பா'வில் சொல்லி அழைக்கிறார்! மூன்றாவதாகச் சேரனுக்கு ஓலை வரைகிறார்; எப்படி?

சேரலர்கோன் சேரன் செழும் பூந்திருக்கோவல்
ஊரளவுந்தான் வருக வுட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள வரசர்மன மிசைந்தார்
சங்கவையை யுங்கூடத்தான்.

பாரியின் பெண்களைச் சோழ, பாண்டிய அரசர்கள் மணக்க முன்வந்தனர். நீ வந்திருந்து நடத்தி வை என்று சச்சரவுக்கு இடம் வைக்காமல் எழுதிவிட்டார் ஓலை!

ஔவையாரின் வாக்குக்கு எதிர்வாக்குப் பேசாத பக்தர்களாயிற்றே மூவேந்தர்களும்! ஆதலால் அவர் இட்ட கட்டளைப்படி மூவரும் வந்துவிட்டார்கள்!

பேரரசர்களின் மணவிழா எவ்வளவு சிறப்பாக நடைபெறவேண்டும்? ஔவையாரிடம் பொற்குவியலும், நெற்குவியல்களுமா இருக்கின்றன? எப்படிச் செய்கிறார்? வருணனைத் துதித்துப் பாடினார்!

கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவல்—திருமணத்தில்
முன் மாரிபெய்யுமுது வாரியை மாற்றிப்
பொன்மாரி யாகப்பொழி

என்றார்! பெய்தது பொன்மாரி! அடுத்து, பெண்ணை நதியிடம் வந்தார்.

முத்தெறியும் பெண்ணை முதுநீரது தவிர்ந்து
தத்தியநெய் பாறலைப்பெய்து—குத்திச்
செருமலைத் தெய்விகன் திருக்கோவலூர்க்கு
வருமளவும் கொண்டோடி வா.

என்று பாடினார்! பெண்ணையாற்று நீர் பாலாக, நெய்யாகப் பாய்ந்தோடி வந்தது!

கலியாண வோலையைக் கரிமுகன் எழுத, வருணன் பொன்மாரி பொழிய பெண்ணையாறு பால், நெய் வழங்க, அங்கவை சங்கவைக்கு மணம் செய்வித்தார் ஔவையார்!

சிறுமை கண்டவிடத்தில் பொங்கியெழுந்து அவரது சினப்பெருக்கில் பாடிய பாடல்களும் பொருட்சுவை குன்றாது பொலிவுற்றிருக்கின்றன! ஒரு பாமரனை மணந்து மிகவும் அல்லல்பட்ட ஒரு பெண்ணைக் கண்டு மனம்பொறாமல் நான்முகன் மீது வந்த ஆத்திரத்தைப் பாருங்கள்!

அற்றதலைபோக வருததலை நான்கினையும்
பற்றித்திருகிப் பறியேனோ—வற்றும்
மரமனை யானுக்கிந்த மானை வகுத்திட்ட
பிரமனையான் காணப்பெறின்!



கலைமடந்தையின் அருள்பெற்ற ஔவையாரின் அமுத வாக்கினால் பாடல் பெற விரும்பினான் முருகப்பெருமான்!

ஔவை வழி நடக்கும்போது, பாதையிலிருந்த நாவல் மரத்தின்மீது மாடு மேய்க்கும் சிறுவனாகி, நாவற் பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டிருந்தான் முருகன்.

ஔவையாருக்கு வழி நடந்த களைப்பு. "பையா, எனக்கும் கொஞ்சம் நாவல் பழங்களைப் போடு" என்றார். சிறுவன் "பாட்டி, சுடுகிற பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். ஔவையார், திகைத்தார்! சுடுகிற நாவல் பழம்கூட உண்டோ என்ற வியப்பில் "சுடுகிற பழம்தான் போடேன்" என்றார்.

பழுத்து, கனிந்து கைந்து ரஸம் ஒழுகும் பழங்களாகப் பார்த்துக் கீழே போட்டான் இடையனாக இருந்த முருகன். கீழே விழுந்த பழங்களில் மணல் ஒட்டியிருப்பதை வாயால் ஊதி விலக்கிவிட்டு, வாயில் போடப்போன ஔவையாரை நோக்கி, "பாட்டி, நன்றாக ஊதித் தின்னு பாட்டி, சுடப்போகுது" என்றான் ஐங்கரனை முழும் போட்டளந்த குறும்புக் குணம் படைத்த கந்தவேள்!

ஔவைப்பாட்டி உலுக்கி விழுந்தார்! கையிலிருந்த பழம் தானாக நழுவிக் கீழே விழுந்தது! அவரது களைப்பும் பறந்துவிட்டது உடனே.

கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்ற
தீரிரவுந் துஞ்சா தென் கண்.

என்று பாடி, அரசர்கள் புகழ்ந்து போற்றுமென் அரும் புலமை இந்த மாடு மேய்க்கும் சிறுவனுக்குமுன் மறுமொழி பகராது நின்ற என் தோல்வியுணர்வால் எனக்கு [illegible]மே வராது இரண்டொரு நாட்களுக்கு என்று கூறி [illegible]பி, இடிந்து நின்றபோது, கந்தவேளின் கருணை [illegible]ளம் மேலும் சோதிக்க இடம் தரவில்லைபோலும்!

வேலும் மயிலுமாக ஔவையாரின் எதிரே நின்றான் வேலன்!

உதய சூரியனொளி திகழும் ஆறுமுகங்களும், அருள் நிறைந்த சுடர்விழிகள் பனிரெண்டும் ஔவையாரை ஆட்கொள்ளும் பேரன்புடன் கடாட்சிக்கக் கண்ட ஔவையார் மெய்மறந்தார்! தன் உள்ளத்தே இருந்த அகந்தை-எங்கோ ஒட்டியிருந்த அணுவளவு-அகந்தையையும் அறவே துடைக்க வந்த ஞான மூர்த்தியின் திரு உள்ளம் தெரிந்து, உள்ளம் உருகி, கண்களில் பனிபடர முருகப் பெருமானை அஞ்சலி செய்து வணங்கினார் ஔவையார்!

கொடுத்த காட்சி, நீடிக்க நினைந்தும், ஔவையாருடைய புலமைக்குள்ள ஏற்றம் காணவும், 'ஔவையே, 'உலகில் மிகக் கொடியது எது?' என்று கேட்டார் அறுமுகன்.

கொடியது கேட்கி னெடியவெவ்வேலோய்
கொடிது கொடிது வறுமைகொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது
இன்புற அவர் கையிலுண்பதுதானே.

என்று விடைகொடுத்தார்! இதைவிடக் கொடுமையை எடுத்து விளக்க யாரால் இயலும்?

அடுத்து, "இனியது எது?" என்று கேட்டார்.

இனியது கேட்கின் றனி நெடுவேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினுமினிது அறிவுள்ளோரைக்
கனவிலும், நனவிலும் காண்பதுதானே.

என்று பாடினார்!

மூன்றாவதாக "பெரியது எது?" என்று வினவினார் கந்தபெருமான்.

பெரியது கேட்கினெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது,
புவனமோ நான்முகன் படைப்பு,



நான்முகன்கரிய மாலுந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடற் குறுமுனி அங்கையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கொரு தலைப்பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்ல வும்பெரிதே.

என்று பாடி, முடிவில் மெய்யடியார்களின் பெருமையை உணர்த்தினார் ஔவையார்!

இன்னும் ஒன்று; "யாவற்றினும் அரியது எது?" என்றார் கடைசியாக.

அரியது கேட்கின் வரிவடிவேலோய்
அரிது அரிது மானிடராதலரிது
மானிடராயினுங் கூன். குருடு, செவிடு
பேடுநீங்கிப் பிறத்த லரிது
பேடுநீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்த லரிது
ஞானமுங் கல்வியும் நயத்த காலையும்
தானமுந் தவமுந்தான் செய்வாராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே.

என்று, மானிடப் பிறவியின் அரிய சாதனையைக் கூறி அதைச் செய்வதின் பயனாக வானவர் நாடு செல்லும் வழி புலப்படும் என்று பாடி முடித்தார் ஔவை.

ஞான வடிவான கந்தமூர்த்தியின் அவா நிறைவு பெற்றது! ஔவையாருக்கு சாயுச்சிய பதவி சித்திக்க அருள் புரிந்துவிட்டு மறைந்தார் பெருமான்!

ஔவையார் தன்னை மறந்து அப்படியே நின்றுபோனார் சிறுபொழுது. பிறகு, நினைவு பெற்று, கருணைபுரியும் கந்த பெருமானுடைய திருவிளையாடலை நினைந்து மெய்விதிர்க்க தமது பயணத்தைத் தொடர்ந்தார்!

ஔவையார் தேச சஞ்சாரம் செய்யுங்கால் நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றி அவர் பாடியுள்ள அநேகம் பாடல்கள் பல்வேறு சுவையுள்ளவை.

உதய சூரியனொளி திகழும் ஆறுமுகங்களும், அருள் நிறைந்த சுடர்விழிகள் பனிரெண்டும் ஒளவையாரை ஆட்கொள்ளும் பேரன்புடன் கடாட்சிக்கக் கண்ட ஒளவையார் மெய்மறந்தார்! தன் உள்ளத்தே இருந்த அகந்தை-எங்கோ ஒட்டியிருந்த அணுவளவு-அகந்தையையும் அறவே துடைக்க வந்த ஞான மூர்த்தியின் திரு உள்ளம் தெரிந்து. உள்ளம் உருகி, கண்களில் பனிபடர முருகப் பெருமானை அஞ்சலி செய்து வணங்கினார் ஒளவையார்!

கொடுத்த காட்சி, நீடிக்க நினைந்தும், ஒளவையாருடைய புலமைக்குள்ள ஏற்றம் காணவும், 'ஒளவையே. 'உலகில் மிகக் கொடியது எது?' என்று கேட்டார் அறுமுகன்.

கொடியது கேட்கி னெடியவெவ்வேலோய்
கொடிது கொடிது வறுமைகொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது
இன்புற அவர் கையிலுண்பதுதானே.

என்று விடைகொடுத்தார்! இதைவிடக் கொடுமையை எடுத்து விளக்க யாரால் இயலும்?

அடுத்து, "இனியது எது?" என்று கேட்டார்.

இனியது கேட்கின் றனி நெடுவேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினுமினிது அறிவுள்ளோரைக்
கனவிலும், நனவிலும் காண்பதுதானே.

என்று பாடினார்!

மூன்றாவதாக "பெரியது எது?" என்று வினவினார் கந்தபெருமான்.

பெரியது கேட்கினெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது,
புவனமோ நான்முகன் படைப்பு,



நான்முகன்கரிய மாலுந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடற் குறுமுனி அங்கையில டக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கொரு தலைப்பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்ல வும்பெரிதே.

என்று பாடி, முடிவில் மெய்யடியார்களின் பெருமையை உணர்த்தினார் ஒளவையார்!

இன்னும் ஒன்று; "யாவற்றினும் அரியது எது?" என்றார் கடைசியாக.

அரியது கேட்கின் வரிவடிவேலோய்
அரிது அரிது மானிடராதலரிது
மானிடராயினுங் கூன், குருடு, செவிடு
பேடுநீங்கிப் பிறத்த லரிது
பேடுநீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்த லரிது
ஞானமுங் கல்வியும் நயத்த காலையும்
தானமுந் தவமுந்தான் செய்வாராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே.

என்று, மானிடப் பிறவியின் அரிய சாதனையைக் கூறி அதைச் செய்வதின் பயனாக வானவர் நாடு செல்லும் வழி புலப்படும் என்று பாடி முடித்தார் ஒளவை.

ஞான வடிவான கந்தமூர்த்தியின் அவா நிறைவு பெற்றது! ஒளவையாருக்கு சாயுச்சிய பதவி சித்திக்க அருள் புரிந்துவிட்டு மறைந்தார் பெருமான்!

ஒளவையார் தன்னை மறந்து அப்படியே நின்றுபோனார் சிறுபொழுது. பிறகு, நினைவு பெற்று, கருணைபுரியும் கந்த பெருமானுடைய திருவிளையாடலை நினைந்து மெய்விதிர்க்க தமது பயணத்தைத் தொடர்ந்தார்!

ஒளவையார் தேச சஞ்சாரம் செய்யுங்கால் நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றி அவர் பாடியுள்ள அநேகம் பாடல்கள் பல்வேறு சுவையுள்ளவை.

அவ்வகையில் அவர் இசைத்துள்ள பாக்களைப் பார்ப்போம்.

குறவன் ஒருவன், மனைவியிடம் என்ன குறை கண்டானோ என்னவோ-இன்னொரு மணமும் புரிந்து கொண்டு இரு மனைவியருடனும் குடும்பம் நடத்தி வந்தான். இளைய மனைவியிடம் அவனுக்கு மிகுந்த மோகம்.

அதாவது, அவள் கைதேர்ந்த சாகசக்காரியாதலால், பசப்பு வார்த்தைகள் பேசி, கணவனை வசப்படுத்தி வைத்திருந்தாள் என்பதுதான் சரியான பொருள்!

ஏன் அப்படி நாம் அனுமானிக்கவேண்டும் என்றால், மூத்தவளை எப்படியாவது வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டு, தானே சகலமும் ஆளவேண்டும் என்ற சுயநலமும், தனக்குப் போட்டியாக மூத்தவள் இருக்கக் கூடாது என்ற துர் எண்ணமும் கொண்டவளாக, எந்த வகையில் இவளை ஒழித்துக் கட்டுவது என்ற சதியாலோசனையிலேயே ஆழ்ந்து கிடந்தாள் இளையவள்!

குறவன் தன் குடிசை வாசலில், நல்ல ஜாதியான பலாக்கொட்டையைக் கண்டெடுத்து வந்து நட்டு, நீர் பாய்ச்சினான், அது முளைகண்டு குருத்துவிட்டு, கன்றாகி, மரமாகி, பிஞ்சுகள் விட்டு அவை முற்றி காயாகி, பழுக்கும் தருணம்.

அந்த சமயம் பார்த்து, தவிர்க்க முடியாத அவசரமாக வெளியூர் பிரயாணம் போக வேண்டியதாகிவிட்டது.

இரு மனைவியாரையும் கூப்பிட்டு, பலாக் காய்களையும், மரத்தையும் கவனமாகப் பார்த்துக்கொள்ளும்படி ஒரு முறைக்குப் பன்முறையாக எச்சரித்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றான் குறவன்.

அவன் திரும்பி வர பத்து நாட்களாகுமென்றதால், அதுவரையில் கண்டாலே கரித்துக் கொட்டும் இளையவளுடைய முகதரிசனமின்றி பிறந்த வீட்டிற்குச் சென்று வசிக்கலாம் என்று மறுநாளே புறப்பட்டுவிட்டாள்—மானியும் பொறுமைசாலியுமான மூத்தவள்.



என்ன செய்தால் அவளை வெறுத்து ஒதுக்கிவிடுவான் கணவன் என்ற தீராத யோசனையும் மாளாத சிந்தனையுமாக இருந்த இளையவளுக்குச் சட்டென்று ஒரு யுக்தி தோன்றியது—அன்றிரவு!

அதைச் செய்யலாமா?

ஆம். அதுதான் தக்க உபாயம்!

குறவனுக்கு உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும்—ஏன் இளைய மனைவியையும் விட உயர்வான பொருள் பலாமரம்தான்!

அதை வெட்டி வீழ்த்திவிட்டு மூத்தவள் மீது பழியைச் சுமத்திவிட்டால் என்ன?

செய்யவேண்டியதுதான்! அதிலும் அவள் இல்லாத சமயம் இது. புருஷன் தன்மீது பிரியமாக இருக்கவில்லையென்ற குரோதத்தாலும், கோபத்தாலும் வெட்டிவிட்டாள் என்பதைத் தன் புருஷனும் ஆட்சேபமின்றி ஒப்புக்கொள்வான்!

அவ்வளவுதான்! தொலைந்தாள் அவள் அதோடு!

திவ்வியமான யோசனையல்லவா?

உடனேயே—இந்த நடுநிசியிலேயே வெட்டி வீழ்த்துவதுதான் சரி—யாரும் பார்க்க முடியாதல்லவா?

எழுந்து வெட்டறிவாளை எடுத்துக்கொண்டு வந்தாள். அறுக்க வாகாக இருக்குமளவு உயரத்தில் குறி வைத்து வெட்டத் தொடங்கினாள்! ஆத்திரம் அசுர பலம் கொடுத்தது! அரை நாழிக்குள்ளாக முழுவதும் அறுபட்டுவிட்டது!

கடைசி வெட்டாக ஓங்கி ஒரு வெட்டு வெட்டிவிட்டு வாளை எடுத்துக்கொண்டு உள்ளே ஓடிவந்து நின்றாள் அந்த அரக்கி!

வெட்டுப்பட்ட மரம் தடாலென்ற சத்தத்தோடு தரையில் சாய்ந்தது!

அப்பாடா! ஒழிந்தாள் பீடை! இந்த மரத்தோடு அவளும்! என்று எண்ணமிட்டுக் குதூகலித்தாள்.

'போடு தோப்புக்கரணம்' என்றால் 'எண்ணிக்கொள்' என்ற அளவுக்குக் கணவன் தன்னிடம் அடங்கிக் கிடக்கும் போது அவள் என்னதான் எண்ணமாட்டாள்?

தன் பொய் மெய்யாவதற்குத் தனது உற்ற சிநேகிதியையும் சாட்சி சொல்லத் தயராக்கி வைத்துக்கொண்டு குறவனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

தனது எதிரியாகப் பாவித்த மூத்தவள் ஒழியப் போகும் மகிழ்ச்சியில், மரம் கொள்ளாத பலாக்காய்களும், பழங்களுமாக இருந்த விருட்சத்தை வெட்டி வீழ்த்திய தனது கொடுஞ் செயலை அறவே மறந்துபோனாள் அவள்!

ஊர் திரும்பிய குறவன் தெரு முனை திரும்பியதுமே தன் வீட்டு வாசலில் நின்ற பலாமரம் வெட்டுப்பட்டுக் கிடப்பதைக் கண்டு பதை பதைக்க ஓடி வந்தான்.

முகத்தில் துயரப் பூச்சைப் பூசிக்கொண்டு இளையவள் வந்து நின்றாள். மூத்தவள் செய்த வேலை என்று நாக் கூசாமல் சொல்லி அவனை நம்பவைத்தாள்!

'நான் ஒரு பாவமும் அறியேன்' என்று மூத்தவள் எவ்வளவு மன்றாடியும்கூட அவன் செவி சாய்க்கவேயில்லை.

"எப்பொழுது நான் அருமையாக வளர்த்த அந்த மரத்தை—அதுவும் அது பழுக்கும் தருணத்தில் வெட்டிச் சாய்த்தாயோ—அது என்னையே வெட்டியமாதிரிதான் இனி என் வீட்டு வாசற்படி ஏறாதே" என்று ஒரே வார்த்தையாக ஓங்கி யடித்துச் சொல்லிவிட்டான் குறவன்.

என்ன செய்வாள் பாவம் பேதை?

'தெய்வமே, இதுவும் என் விதியோ' என்று வெய்துயிர்த்து, போக வர தனது புருஷனைக் கண்ணால் கண்டு கொண்டாவது இருக்கலாமே என்று, தெருக்கோடியிலேயே ஒரு குடில் அமைத்துக்கொண்டு நாட்களை ஓட்டிவந்தாள் மூத்தவள்.

அந்த வழியாக—மூத்தவளின் நற்கால விளைவாக—வந்தார் ஔவையார்!



துக்காக்கிரந்தையாக தெருத் திண்ணையில் வீற்றிருந்த மூத்தவளைக் கண்டு அருகில் சென்று. "ஏன் அம்மா அழுகிறாய்? உனக்கென்ன குறை?" என்று வினவி, உட்கார்ந்து விட்டார் ஔவையார் அவளருகில்!

ஆதரவோடு தன்னைக் குறைகேட்ட மூதாட்டியிடம் தனது வரலாற்றைக் கூறி, கடைசியில் பாட்டி என் போதாத காலம். யாரோ வெட்டிச் சாய்த்துவிட்ட பலா மரத்தை நான்தான் வெட்டிவிட்டேன் என்று என்மீது பழிசுமத்திவீட்டைவிட்டுத் துரத்திவிட்டார் என் புருஷன். என்மீது அவன் பிரியமாக இருக்கவில்லை யென்று, அவர் வைத்து வளர்த்த மரத்தை நான் வெட்டிவிட்டேனாம்! மரத்தை வெட்டுவதால் மாத்திரம் நிலைமை மாறி விடுமா? காயும் கனியுமாக இருக்கும் மரத்தை வெட்ட நானென்ன அவ்வளவு பாவியா பாட்டி? இது என் கணவனுக்குத் தெரியவில்லையே! வாழ்வு இல்லாவிட்டாலும், அவருடைய நிழலில் வசித்து பத்தினிப் பெண்ணாக வாழ்ந்து சாகவேண்டும் என்று கோரினேன். அதுகூடக் கிட்டவில்லை எனக்கு. முக தரிசனமாவது கிடைக்குமே—என்றுதான் இந்தத் தெருவிலேயே இருக்கிறேன் பாட்டி. கேட்டீர்களா என் குறையை?" என்று கண்ணீர் வடித்தாள் அந்த புனிதவதி.

ஔவையார் தலையசைத்தவாறு கண்களை மூடி ஒரு கணம் யோசித்தார்! நிகழ்ந்ததை உள்ளவாறு உணர்ந்து கொண்டார்!

"நல்லது, வா. மகளே. அந்தப் பலாமரத்தைப் பார்ப்போம், வா" என்று எழுந்தார் ஔவையார்.

"அங்கே போனால் என்னைக் கண்டதும் அவருடைய கோபம் சீறியெழும். அதைப் பார்த்துத்தான் என்ன பயன் பாட்டி?"

"எட்ட இருந்து பலாமரத்தைக் காட்டிவிடு போதும்" என்றார் ஔவையார்.

வயோதிக மாதை அவமதிக்கக் கூடாதே என்று அரை மனதோடு எழுந்து வந்து தூரத்திலேயே நின்று, "அதோ மொட்டையாக இடுப்பளவுக்கு நிற்கிறது

பாருங்கள் ஒரு அடிமரம், வெட்டுண்டு—அதுதான்'' என்று காண்பித்தாள் குறமகள்.

உணர்ச்சி வெறியுடன் விசையாக நடந்து வந்தார் பிராட்டியார். வெட்டுண்டு மொட்டைக் கட்டையாக நிற்கும் மரத்தருகில் வந்து நின்று,

கூரிய வாளால் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றாயுயர் மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த்
பண்டு போனிற்கப் பலா. [இன்பழமாய்

என்று பாடி முடித்தார் ஔவையார்.

வெட்டுண்டு உலர்ந்து கிடந்த மரம், கொடியில் தளிர்த்து, மரமாகி ஓங்கி வளர்ந்து காயும் கனிகளுமாக நின்றது.

குடிலுக்குள் கூடை முடைந்துகொண்டிருந்த குறவன் ஓடோடியும் வந்தான்! ஔவையாரின் அடிகளில் விழுந்து வணங்கினான்.

ஔவையார் நகைத்தார்!

குறவனுக்கு உண்மையை உரைத்தார்! குறமகளுக்கு வாழ்வளித்தார்!

செத்த பலாவுக்கு உயிரளித்தார்!

குறமகளுக்கு மகிழ்ச்சி கரை கடந்தது! ஆனந்தக் கண்ணீர் சொரிய உள்ளே ஓடி, மூழக்கு உழக்குத் தினையை அள்ளிக்கொண்டு வந்து உண்மையான உள்ளத்தோடு ஔவையாருக்குத் தனது காணிக்கையைச் செலுத்தினாள் குறமகள்!

இவ் வாழ்விலே நாம் பெறும் பெரிய பேறு எது?

பிறருக்கு நாம் ஈவது எதுவாயினும், அன்போடும், மனதோடும் அளிப்பதுதான்!

முழுமனதுடன், பரிபூரண அன்புடன் யார் எதை எவ்வளவு அற்ப வஸ்துவாக இருந்து—கொடுத்தாலும், அதைப் பெறுவதில் உள்ள பேருவகையை நாம் ஔவையாரிடம் எவ்வளவு தெளிவாகக் காண்கிறோம்!



குறமகள் கொடுத்தது என்ன? பொன்னல்ல, பொருளும் உயர்ந்ததல்ல! மூவுழக்கும், உழக்குமான அளவு தினை தான்! ஆனால் அதனை அளித்த குறமகளின் அன்புமிக்க உள்ளத்தைக் கண்டுதான் ஔவைப்பிராட்டியார் அக மகிழ்ந்து போனார்!

ஏழைக் குறமகள், அவள்! நாலு உழக்குத் தினை என்றால் அவள் வரையிலும் அது நாலு நாளைய உணவுப் பொருள் அல்லவா? அதைச் சேமிக்க அவள் என்ன பாடு பட்டாளோ!

பட்டமரம் துளிர்த்துத் தழைத்தோங்கி பண்டுபோல காய், கனிகளுடன் பசுமை கொண்டு உயிர்த்து நிற்கப் பாடிய ஔவைப் பிராட்டியாருக்கு, என்ன கொடுப்பது தனது நன்றிக் கறிகுறியாகவும்—தனக்குற்றபழி நீக்கியதற்குக் காணிக்கையாகவும் என்று யோசித்துப் பார்த்தாள் போலும் குறமகள்!

தனக்காக வைத்திருந்த தினைதான் இருக்கிறதே என்ற நினைவு வரவும், ஓடிச் சென்று அந்த உணவுப் பொருளை ஆதரவோடு, அன்போடு, பணிவோடு கொடுத்து உபசரித்தாள்!

உச்சிக் குளிர்ந்துவிட்டது ஔவையாருக்கு!

அவருக்கு வேண்டியதெல்லாம் அன்புடைமையும், மெய்ம்மையும், ஈகையும்தானே!

அது மூன்றும் நிறைவோடு கூடிக் கிடைத்த தினையை மூட்டையாகக் கட்டிக்கொண்டு, குறமகளை ஆசிர்வதித்து விட்டுப் புறப்பட்டார் ஔவையார்!

நடந்து நடந்து சோழமன்னன் அவையில் பிரவேசித்தார்!

ஔவையாரின் வரவைக் கண்ட சோழமன்னன், எழுந்து எதிர்கொண்டு சென்று நல்வரவு கூறி அவருடைய இடுப்பிலிருந்த மூட்டையை வாங்கிச் சுமந்துகொண்டு வந்து வைத்து, ஆசனமளித்துத் தானும் உட்கார்ந்து கொண்டு, "தாயே, இதென்ன மூட்டை? தள்ளாத வயதில்

தாம் நடப்பதே பெரிது. அதிலும் மூட்டை வேறு?......’”
என்று கேட்டான்.

உடனே,

கூழைப் பலாத் தழைக்கப் பாடக் குறமகளும்
முழக்குழக்கு திணைதந்தாள்—சோழாகேள்
உப்புக்கும் பாடி, புளிக்குமொரு கவிதை
ஒப்பிக்கு மென்றனுளம்.

எனப் பாடி முடித்துவிட்டுப் பிறகு விவரமாகச் செய்தியைச் சொன்னார் ஔவையார்!

பாடலிலுள்ள பொருளைப் பாருங்களேன்!

சோழா! ‘கேவலம் திணைக்காகவா பலாத்தழைக்கப் பாடினாய்?’ என்கிறாய்! எனக்கு நன்றியுடைமை மிகவுண்டு. உப்புக்கும், புளிக்கும் கூட, அதைக் கொடுக்க முன் வரும் உத்தமர்களுக்காகக் கூடப் பாடுவேன் என்கிறார்.

Y15 wx2
N62
109087
MADRAS

## சிறந்த நவீனங்கள்

| | | |
|---|---|---|
| கொடி மின்னல் | ஜி. எஸ். மணி | 2. 50 |
| நிழலாட்டம் | ,, | 4. 00 |
| ஞானி | ,, | 2. 00 |
| இரவும் பகலும் | கி. ரா. | 4. 50 |
| மனக்கோயில் | ,, | 2. 00 |
| துபாஷ் வீடு | ,, | 2. 50 |
| நிழல் கன்னி | வாசவன் | 3. 00 |
| உயிர்ப்போர் | ,, | 2. 00 |
| அன்னை | எஸ். சங்கரன் | 2. 50 |
| பவானி | கிருஷ்ணு | 6. 00 |
| துணை | சரத்சந்திரர் | 2. 50 |
| பொன்மலர் | ,, | 2. 00 |
| கான்ஸ்டபிள் கந்தசாமி | | 4. 00 |
| அமுதா | சுப்பு ஆறுமுகம் | 3. 00 |
| அம்பிகா | சேது அம்மாள் | 3. 00 |

மல்லிகைப் பதிப்பகம்
தியாகராயநகர் :: சென்னை—17.

## சிறுவர் நூல்கள்

| | |
|---|---|
| ராமகிருஷ்ணர் கதைகள் | 1. 00 |
| விவேகாநந்தர் கதைகள் | 1. 00 |
| புத்தர் கதைகள் | 1. 00 |
| ஏகநாதர் கதைகள் | 0 75 |
| அறிவுக் கதைகள் I, II | 2. 00 |
| அழியாக் கதைகள் I, II | 2. 00 |
| சமர்த்து மீனு | 1. 00 |
| வியப்புக் கதைகள் | 1. 00 |
| விவேகக் கதைகள் | 1. 00 |
| வேடிக்கைக் கதைகள் | 1. 00 |
| நீதிக் கதைகள் | 0 75 |
| காகிதக் கப்பல் | 0 75 |
| ராமாநுஜர் கதைகள் | 1. 00 |
| சங்கரர் கதைகள் | 1. 00 |
| காந்திஜி கதைகள் | 1. 00 |


**மல்லிகைப் பதிப்பகம்**

தியாகராயநகர் :: சென்னை—17.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
நூலகம்